# தமிழர் கொடிகள்

அன்னி தாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சென்னை - 600 113

# தமிழர் கொடிகள்

## — வரலாற்று நோக்கு

அன்னி தாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamilar koṭikaḷ - varalāṟṟu nōkku |
| Author | : | Dr. Annie Thomas<br>Professor<br>International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai 600 113. |
| First Edition | : | 2000 |
| Publication No | : | 352 |
| Language | : | Tamil |
| Paper Used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 11 points |
| No. of Pages | : | x + 122 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- |
| Printed by | : | United Bind Graphics,<br>189, (101-D), Royapettah High Road,<br>Mylapore, Luz, Chennai - 600 004. |
| Subject | : | Flags of the Tamils - a historical view |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

# அணிந்துரை

ஒரு நாட்டின் குறிக்கோள், பண்பாட்டினை எடுத்துக் காட்டும் அடையாளச் சின்னம் கொடி. ஒரு தலைவனின் உறவினர், குடி, படை அனைவரையும் ஒன்று திரட்டும் சின்னமாகக் கொடி தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டது.

5000 ஆண்டுகட்கு முன்னரே கொடிகள் பயன்படுத்தப்பட்டதை மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தொல்பழந்தமிழர், சீனர், எகிப்தியர், பாபிலோனியர், அசிரியர், கிரேக்கர், பாரசீகர், உரோமானியர் போன்ற பழம்பெரும் சமுதாயங்கள் கொடிகளைச் சமுதாய வாழ்வின் முக்கியச் சின்னமாக கருதியமைக்குச் சான்றுகள் உள்ளன.

மொகஞ்சதாரோவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முத்திரைகள் ஒன்றில் ‘கொடி ஏந்திச் செல்லும் நான்கு ஆடவர்கள்’ காணப்படுகின்றனர். இரு கொடிகளின் உருவங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன: ஒன்று ‘ஒற்றைக் கொம்பு மிருகம்’ மற்றொன்று ‘வாசனைப் புகைபோடும் விளக்கு’. எனவே பண்டைக்காலத்திலேயே கொடிகள் பயன்படுத்தப்பட்டன என அறியலாம். ரிக் வேதத்திலும் கொடிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பாரசீகர்கள் ஈட்டியில் குத்தப்பட்ட ஒரு பருந்தைத் தங்கள் கொடியாகப் பயன்படுத்தினர். கிரேக்கர்கள் ஒரு கவசத்தையும், உரோமானியர்கள் ஒரு கழுகையும் தங்கள் கொடிச் சின்னமாகக் கொண்டிருந்தனர். டிராகன், வெள்ளைப்புலி, பாம்புகள் ஆகியவற்றைக் கொடிகளாகச் சீனர்கள் பயன்படுத்தினர்.

வால்மீகி இராமாயணத்தில் பரதன் கோவிதாரா எனும் தெய்வீக மரத்தைத் தனது கொடிச் சின்னமாகக் கொண்டிருந்தான் எனத் தெரிகிறது. இராமன், இரகு வமிசத்தின் குலதெய்வமான சூரியனைக் கொடியாகக் கொண்டிருந்தான். இராவணனுடைய கொடி கபாலக் கொடியாக இருந்தது. இராவணன் சிவபெருமானின் பக்தனாகையால் சிவன் ஏந்திய மண்டையோட்டைத் தன் கொடியாகக் கொண்டிருந்தான் என்பர். மண்டையோடு எதிரிகளுக்குக் கலக்கத்தை உண்டுபண்ணும் என்பதற்காக

இராவணன் அக்கொடியைக் கொண்டிருந்தான் என்றும் குறிப்பிடுவர். ஆனால், கம்பராமாயணத்தில் இராவணன் வீணைக்கொடியுடையோன் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளான். வீணை இசைப்பதில் அவன் வல்லவன் ஆதலால் அந்த இசைக் கருவியைக் கொடியாகக் கொண்டிருந்தான் என்பர். மகாபாரதத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பயன்படுத்திய கொடிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதைப்போன்றே அவரவர்கள் சார்ந்த மன்னர்களுக்கும், குருக்களுக்கும் தனித்தனியாகக் கொடிகள் விளங்கியுள்ளதை அறியலாம். துரியோதனன் 'அரவக்கொடியோன்'(பாம்புக்கொடி) எனச் சித்திரிக்கப்பட்டுள்ளான். பலராமனுக்கும் கண்ணனுக்கும் முறையே பனைக்கொடியும் கருடக்கொடியும் விளங்கின.

அமங்கலமான சின்னங்களைக் கொண்ட கொடிகளையுடைய வீரர்களுடன் அக்காலத்தில் போரிடப் பலரும் தயங்கினர் என்று தெரிகிறது. சான்றாக, பாண்டவர் தரப்பில் அமங்கலக் கொடியேந்தி வந்த சிகண்டியிடம் பீஷ்மர் போரிட மறுத்துவிட்டார்.

மகாபாரதத்தில் பீஷ்மருக்குப் பனைக் கொடியும், துரோணாசாரியாருக்கு வேதக் கொடியும், அசுவத்தாமனுக்குச் சிங்கக் கொடியும், தருமனுக்கு முரசுக் கொடியும், பீமனுக்குச் சிங்கக் கொடியும், அருச்சுனனுக்கு அனுமக் கொடியும், சல்லியனுக்கு யானைக் கொடியும் கொண்டிருந்தனர்.

கொடிகள் சமயச் சிறப்புப் பெற்றவையாகவும் விளங்குகின்றன. இந்துக் கோயில்களில் திருவிழா தொடங்குவதற்கான நிலையில், கொடியேற்றுவதைக் காணலாம். சிவபெருமானுக்கு எருதுக்கொடி, திருமாலுக்குக் கருடக் கொடி, காளிக்கு அலகைக் கொடி, ஐயனார்க்குக் கோழிக் கொடி, முருகனுக்குச் சேவல் கொடி, காமனுக்கு மீனக் கொடி, பார்வதிக்குச் சிங்கக் கொடி எனப் பல தெய்வக் கொடிகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இதைப் போன்றே இந்திரன் உட்பட்ட பல அமரர்களுக்கும் கொடிகள் இருந்தன.

பௌத்தர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பக் கொடிக் கம்பங்களை நாட்டியிருந்தனர். சமணர்களும் தங்கள் வழிபாட்டுத் தலங்களில் கொடியேற்றி வந்தனர். சமணர்கள் கொடிக் கம்பம் நாட்டிய செய்தியைச் சமணர்களின் ஆதிபுராணத்தில் காணலாம். அருகன் கொடிகளாகக் காட்சி, ஞானம், சீலம் அமைந்தன. இவற்றைப் போன்று பிற சமயத்தினரும் தத்தமக்கெனக் கொடிகளைக் கொண்டிருந்தனர். இசுலாமிய சமயத்தைத் தோற்றுவித்த நபிகள் நாயகம் தமது படைக்கென உரோமானியர் கழுகைச் சின்னமாக ஏற்றுக் கொண்டார். பின்னால் பிறைச் சின்னம் கொடியில் இடம்பெற்றது.

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களான சேரனுக்கும் சோழனுக்கும் பாண்டியனுக்கும் முறையே விற்கொடியும், புலிக்கொடியும், கயல்கொடியும் இருந்தன. அதைப் போன்றே அக்காலத்துச் சிற்றரசர்களுக்கும், பிற்கால வேந்தர்களுக்கும் வெவ்வேறு கொடிகள் இருந்ததைத் தமிழ் இலக்கண, இலக்கிய,கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சிங்கக் கொடி, மேழிக்கொடி, காவிக்கொடி, சக்கரக் கொடி போன்றவற்றைப் பயன்படுத்தியதை அறியலாம். தமிழகம் போன்று விளங்கிய ஐம்பத்தாறு தேசங்களிலும் அவ்வவ்வர்க்கெனத் தனித்தனிக் கொடிகள் காணப்பட்டன.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் கொடிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சிங்கம் பொறிக்கப்பட்ட கொடியைக் கொண்ட நாடு வலிமைக்கும் அஞ்சாமைக்கும் எடுத்துக்காட்டாக அமைகிறது. வேல் பொறிக்கப்பட்ட கொடியைக் கொண்ட நாடு சக்தியையும் வேகத்தையும் வெளிப்படுத்துவாக அமைகிறது. அன்னம் பொறிக்கப்பட்ட கொடி தூய்மையையும், மயில் பொறிக்கப்பட்ட கொடி அழகையும் வளத்தையும் காட்டுவனவாக அமைகின்றன. குதிரை வரையப்பெற்ற கொடியை உரோமநாடு கொண்டிருந்தது. மூன்று தங்கச் சிங்கங்கள் அடங்கிய கொடியை இங்கிலாந்து பயன்படுத்தியது. அம்மூன்று சிங்கங்கள் முறையே இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து என்பனவற்றைக் குறிப்பன. பின்னர் அவை ஐக்கியப் பேரரசாக மாறியபின் இக்கொடி மூன்று சிலுவைகளைச் சின்னமாகப் பெற்ற கொடியாக மாறியது.

கொடிகள் பொதுவாக, தெய்வக் கொடி, அரசன் கொடி, தேசியக் கொடி அரசியல் கொடி, வெற்றிக் கொடி, இரங்கற் கொடி, அடைக்கலக் கொடி, வணங்கற் கொடி எனப் பல்வேறு வகைப்பட்டதாகப் பிரிக்கப்படுகின்றன. 'கொடி ஒரு இலட்சியத்தின் பிரதிநிதி என்றும், தேசம் உயிர்வாழ தேசிய உணர்வு அவசியம்: தேசிய உணர்வை வளர்க்க உதவும் சாதனம் கொடி' என்றும் காந்தியடிகள் கூறியிருப்பது இங்குச் சுட்டிக்காட்டற்குரியது. கொடி கொள்கையை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பதால் அக்கொடியைக் கொண்டு தலைவன் குறிக்கோளை அடைவான்.

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

என்று மக்களை ஒன்று திரட்டுவதற்கு மகாகவி பாரதியார் தாயின் மணிக்கொடியைப் புகழ்வது சுட்டிக்காட்டத்தக்கது.

விடுதலையுற்ற நாட்டின்மேல்
வீரமிக்கவர் வீட்டின் மேல்
விண்மீன் தெளித்த வெற்றிக்கொடி
வீறுடன் விளங்கி வீசட்டும் ஒளி

என்று அமெரிக்கக் கொடியைப் பற்றிப் பிரான்ஸிஸ் ஸ்காட்கே என்பவர் பாடிய பாடலும் நினைவுகொள்ளத்தக்கது.

நமது இந்திய தேசியக் கொடியின் ஒவ்வொரு நிறத்துக்கும் பொருள் உண்டு. நடுவிலுள்ள நீலநிறச் சக்கரத்துக்கும் பொருள் உண்டு.

கொடி பற்றிய கருத்துகளை வரலாறு சமூக, கலை, பண்பாடு, பழக்கவழக்கம், என்ற பல்வேறு நோக்குகளில் ஆராய்ந்து பார்க்க, கொடி ஒரு நாட்டுவாழ்வின் தலைசிறந்த சின்னமாக மதித்துப் போற்றப்பட்டு வந்துள்ளமையை அறியலாம்.

கொடியைப் பற்றி வளர்ந்துள்ள வழக்க மரபுகள் மிக விரிவானவை. காலையில் ஏற்றி மாலையில் இறக்குதல், அப்போது சில தனிப்பட்ட சடங்கு முறைகளை மேற்கொள்ளுதல், கொடி கெட்டாலும் அல்லது கிழிந்தாலும் சடங்கு முறையுடனேயே அகற்றி வைத்தல் என்பன குறிப்பிடத்தக்கன.

தோற்றவர் கொடி வென்றவர் கொடியை விடத் தாழப்பறப்பது மரபு. கொடி இறக்கும்போது தோற்றவர் கொடி கீழிறக்கப்பட்ட பின்னரே வென்றவர் கொடியைக் கீழிறக்குதலும் மரபு.

துக்க நிலையைக் குறிக்கக் கொடியை முதற்கண் உச்சியில் ஏற்றிப் பிறகு அரைக் கம்பத்தில் இறக்கிப் பறக்க விடுவர். கொடியை வீழ்த்துதல், இறக்குதல், எதிரி அடிபணிந்ததைக் குறிக்கும் அடையாளமாகும். கொடித் தண்டைப் பற்றி கொடியை அமிழ்த்தித் தாழக்காட்டி மீண்டும் உயர்த்திப் பிடித்தல் வீரவணக்கம் செய்வதன் அடையாளமாகக் கருதப்படுகின்றது.

சில எண்ணங்களின், கருத்துக்களின் வெளிப்பாட்டு அடையாளமாகக் கொடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

போர் தொடங்கும்போதும், நடைபெறும்போதும், கொடி முக்கியத்துவம் பெறுதல் போலவே போர் நிறுத்தத்தின் சின்னமாக வெண்கொடி உயர்த்துதல் என்பது பழந்தமிழர் மரபாகும். (புறம் *362*) இன்று எல்லா நாடுகளும் போர் நிறுத்தத்தை அறிவிக்க இதைப் பயன்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்ன பொருட்கள் இங்கு விற்கினறன என்பதைக் குறிக்கும் விளம்பரம் போன்று கொடிகள் பயன்படுத்தப்பட்டதைப் பட்டினப்பாலை*(180)* தெரிவிக்கின்றது.

பட்டி மன்றம் நடக்கும்போது அவ்விடத்தில் கொடியைப் பறக்க விடுவது வழக்கமாக இருந்தது *(பட்டினப்பாலை 168-171).*

பொதுவாகப் பயன்பாட்டிலுள்ள துணியைக் காட்டிலும் 'கொடி' மிகுந்த மரியாதையையும் மதிப்பையும் பெறுகிறது. கொடி அடையாளச் சின்னமாகவும் கொள்கையின் வெளிப்பாடாகவும் விருதுகளின் சின்னமாகவும் அமையப்பெற்றுள்ளது. நாட்டு மக்களின் ஒற்றுமையையும் உணர்வுகளையும் கொடி வெளிப்படுத்துகிறது.

ஒரு நாடு உயர்வுபெறும்போது அந்நாட்டுக் கொடியும் சிறப்புப் பெறுகிறது. எனவே இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொள்வது கொடியாகும்.

ஒரு நாட்டின் நம்பிக்கைச் சின்னமாக விளங்குவது கொடி. கொடியைக் கம்பத்தில் கட்டப்பெற்றுள்ள ஒரு துண்டுத் துணி எனக் கருதலாகாது. உயர்ந்த நோக்கங்களின் வெளிப்பாடாகக் கருத வேண்டும். கொடியை இழிவு செய்தல் அந்நாட்டையும் மக்களையும் இழிவு படுத்துவதாகக் கருதப்பட்டது. கொடியை அவமதித்ததால் பல போர்கள் நடைபெற்றமையை உலக வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. இக்கொடியைக் காப்பதற்காகவே தொன்றுதொட்டு மன்னர்களும் மாவீரர்களும் உயிர் துறந்துள்ளனர். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் மூவருணக் கொடியைக் காப்பதற்காகத் திருப்பூர்க் குமரன் இறந்தது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

தமிழர் கொடிகள் என்னும் இந்நூலில் கொடிகள் குறித்து முனைவர் அன்னி தாமசு விரிவாக ஆய்வுசெய்துள்ளார்.

சங்க இலக்கியம், காப்பிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு தனிச் சிறப்புடன் தன்ஆய்வை நிகழ்த்தியுள்ளார்.

தமிழக வரலாற்றைப் பற்றி ஆய்வு செய்வோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படத்தக்கது. தமிழ் இலக்கிய இலக்கண நிகண்டுகள் ஆகிய நூல்களில் காணப்படுகின்ற கொடிகள் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துத் தந்துள்ள முனைவர் அன்னிதாமசு பாராட்டுக்குரியவர்.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

**இயக்குநர்**

# என்னுரை

தொல்காப்பியம் முதல் பெரிய புராணம் வரையிலான தமிழிலக்கணவிலக்கியக் களனை அடிப்படையாகக் கொண்டு கொடி (flag) பற்றிச் சிந்தித்துக் கட்டுரையாக்கும் வாய்ப்பு பலபோதும் ஏற்பட்டது. வாழ்வியல், பண்பாடு, வழிபாடு, வரலாறு எனப் பல தளங்களிலும் கொடிகள் பங்கு கொண்டு பயன்பெற்று வந்தமையை இந்த- சுமார் பன்னிரு நூற்றாண்டிலக்கியக் காலத்தில் கண்டு கணிக்க முடிந்தது. (பார்க்க: கட்டுரைக்களன்). இவை சுவையானதாகவும், புதுமை நிறைந்ததாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைதல் பற்றி இங்குத் தொகுத்து வழங்கப்படுகின்றன. தமிழர், கொடிகள் பற்றி என்ன எண்ணம் கொண்டிருந்தனர் என்று தெரிய, தெளிய இவை வழிவகுக்கும்.

நிறுவனத் தலைவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கட்கும்; ஆளுநர் குழு, பதிப்புக் குழு ஆகியோர்க்கும்; நிறுவன இயக்குநர்க்கும்; ஒளிக்கோர்வை செய்த தொழில் நுட்பவியலாளருக்கும், அச்சகத்தார்க்கும் என் நன்றி.

அன்னி தாமசு

# உள்ளே


தமிழர் கொடிகள்

| | |
|---|---|
| ஆய்தல் | 1 |
| சொல்லும் பொருளும் | 7 |

சங்க இலக்கியம்

| | |
|---|---|
| அரசர் கொடிகள் | 21 |
| கடவுளர் கொடிகள் | 35 |

காப்பியங்கள்

| | |
|---|---|
| முதற்காப்பியங்கள் | 51 |
| கம்பராமாயணம் | 67 |
| இடைக்காலக் காப்பியங்கள் I | 77 |
| இடைக்காலக் காப்பியங்கள் II | 93 |

| | |
|---|---|
| கட்டுரைக்களன் | 111 |
| நூற்றொகை | 112 |
| கொடி - சொற்கள் | 114 |
| சொல்லகராதி | 120 |

# தமிழர் கொடிகள்

## ஆய்தல்

தமிழும், தமிழரும், தமிழ் இலக்கியமும் பற்றிய கல்விப் பெருக்கில் தமிழர் கொடிகள் பற்றியும் ஆய்தல் வாய்ப்புடையது. மக்களினங்களின் அடையாளச் சின்னமாக ஆளப்பட்ட கொடிகள் வரலாற்றாய்விற்கும் அரசியலாய்வுக்கும் பண்பாட்டாய்வுக்கும் குறியீட்டாய்வுக்கும் இடம் அளிக்கலாம். சொல், பொருள், அமைப்பு, உருவம், நிறம், நிலை, தகுதி, மதிப்பு போன்ற பல சார்புகளில் கொடி பற்றிய கல்வி அணுகத்தக்கது.

கொடி எனும் சொல்லின் அடி அல்லது வேர் எதுவெனக் கண்டு அடிப்படைப் பொருள் நிலை காணுதல், சொல்லாக்கத்தின் இடுகுறி காரணத் தன்மைகளைக் காட்டக்கூடும். படரும் தாவர வகையைக் குறிக்கும் கொடி (creeper) என்பதே கொடிக்கும் (flag) ஆவதின் பொருத்தம் ஆயப்படவேண்டும். இரண்டிற்கும் உள்ள தொடர்பு காணல் தேவை. தாவரக் கொடி போல இதுவும் ஒரு கொழுகொம்பை - கோட்டை அண்டியிருப்பதாலா அல்லது அதனைப்போல் இதுவும் காற்றில் அசைவதினாலா என நினைக்கலாம். அன்றியும் தொடக்ககாலக் கொடிகள் ஒருவேளை தாவரவகையான வல்லி உருவினவாக இருந்திருக்கக் கூடுமா எனவும் கருதலாம். காவல் மரம் பற்றிய சங்கக் குறிப்புகள் போல, அடையாள வல்லி பற்றிய செய்திகள் அறியின் இக்கருத்திற்கு வலிமை ஏற்படலாம். மேலும், தொண்டைக்கொடி சுற்றிவந்த இளவரசனின் அடையாள நிலையும், தொண்டைமான் இளந்திரையன், தொண்டைமண்டலம் போன்றவற்றையும் இணைத்துக் கருதுதலும் இதற்கு உதவலாம்.

கோடு என்பதும் கொடி என்பதும் சொற்பொருள் நிலையில் தொடர்பு வழங்கலாம். சுழலும் எனப் பொருள்படும் கொட்கும் என்பதனையும் சார்புறுத்திக் காணக்கூடும்.

பழந்தமிழ் இலக்கியம் முதல் தமிழர் கொடிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எனினும் கொடியைக் குறிக்கும்

பிறபல சொற்கள் பயின்றமை புலப்படவில்லை. பிற்காலத்தில் சொற்பெருக்கு ஏற்பட்டதை நிகண்டுகளும், அகராதிகளும், இலக்கியங்களும் காட்டுவது வழி அறியலாம். கதலி, கதலிகை, கத்திகை, கேதனம், கேது, சத்தி, சருத்தி, துகில், துவசம், தோகை, படம், பதாகை, விடங்கம், விலோதம் (சதுரகராதி) என்பன போன்றமையும் சொற்களும் அடிப்படை கண்டு ஆயப்படல் தேவை.* துணியாலமைவதைத் 'துகில்' என்பதாலும், உருவம் வரையப்பட்டதைப் படம் என்பதாலும், பன்னிற பல்லிழை நிலையைத் தோகை என்பதாலும் உணர்தல்கூடும்.

கொடியின் நோக்கமென்ன? கொடி எதற்காக உருவாக்கப்பட்டது? அது எதற்கு அடையாளம்? கொடியை உயரே ஏன் பறக்கவிட்டனர் போன்ற எண்ணங்களை உலகளாவிய நிலையில் அறிதல் இத்தகு ஆய்வுக்குப் பல முடிவுகள் அறிய உதவியாகவும் தூண்டுதலாகவும் அமையலாம். பழந்தமிழர் கொடிகள் பற்றிய உண்மைகள் ஓரளவு அருகின. 'துகிற்கொடி' பற்றிய குறிப்புப் பற்றி, துணியால் கொடியமைந்தது விளங்கிற்றெனினும் கொடியின் அமைப்பு அளவு எவ்வாறு இருந்தது என்பது தெளியப்பட ஆய்தல் தேவை. கொடிகள் சதுரமா, நீள் சதுரமா, முக்கோணமா, வேறு வடிவா? எவ்வெக் காலங்களில் எவ்வெவ்வாறு இருந்து வளர்ந்தது? தமிழகத்தின் பல இடங்களில் வெவ்வேறமைப்பினவாகக் கொடியிருந்தனவா என நினைக்கப்படல் வேண்டும். கொடியின் நிறம் பற்றிய சிந்தனையும் தேவை. வெண்கொடி வெற்றியைக் குறித்ததை இலக்கியம் தரும்: 'விசய வெண் கொடி' (புறம். 362). இதற்கு வேறாக 'விரவுருவின கொடி நுடங்கும்' (புறம். 38) என்பதால் பன்னிறக் கொடிகள் இருந்ததும் தெரிகின்றது.

இவ்வெண்நிறக் கொடிகட்கும் அடையாளக் கொடிகட்கும் வேறுபாடு உண்டா? எந்நிலையில் என்பது சிந்திக்கத்தக்கது. அடையாளக் கொடிகளில், உருவம் வரையப்பட்டது என வேறுபடுத்தலாமெனின், அவை வெண்ணிறப் பின்புலத்தில் வரையப்பட்டனவா அன்றி ஏதேனும் நிறப்பின்புலனில் வரையப்பட்டதா எனவும் கருதவேண்டும். உருவ வரைவு வெறும் வரைகேட்டுப்படமா (line-drawing) அல்லது புனைந்த ஓவியமா எனவும் காணல் தேவை.

---

* Words denoting the 'flag' in Tamil, Annie Thomas, 21st All India Conference of Dravidian Linguists, Kuppam, 1993.

கொடியின் அளவு பற்றியும் சிந்தித்தல் கூடும். கொடி விசும்பு நிழற்றும் (புறம்.9) என்பதால் பேரளவினது எனக்கொள்ள வாய்ப்புண்டெனினும் திட்டவட்டமாகக் காணல் நலம்.

கொடிகளில் பல வகைகள் காணப்படலாம். அரசியல் கொடிகள், கடவுட் கொடிகள், வணிகக் கொடிகள், போட்டிக் கொடிகள், அடியவர் கொடிகள், இறைக்கோயிற் கொடிகள் என விரிவதைக் காலந்தோறுமுள்ள இலக்கிய, ஓவிய, சிற்ப, பிற சான்றுகளை நோக்கப் புலப்படலாம். ஒன்றால் பிறிதொன்று தோன்றுவதும், ஒன்றிலிருந்து ஒன்று கிளைத்தலும் காட்டுதல் கூடும். எப்போது தோன்றி, எப்படி வந்து, எவ்வாறு வளர்ந்தன போன்றவற்றையும் காட்டல் வேண்டும்.

இறைக்கோயிலின் கொடி மரமும் (துவஜ ஸ்தம்பம்), கொடியும், கொடி விழாவும், கொடியேற்றம், இறக்கம் போன்ற நிகழ்வுகளும் பின்னோக்கு நிலையில் தமிழரசர் கொடி நிலை பற்றிய சிந்தனைக்குத் தெளிவு வழங்கலாம்.

அரசக் கொடிகள் எங்கெல்லாம் பறக்கவிடப்பட்டன எனக் காணுதல் சில எண்ணத் தெளிவுகள் அளிக்கலாம். அரண்மனை, கோட்டை இவற்றின் மீதும் வாயிலிலும், போர்க்காலங்களில் படை முன்னணியிலும் யானை, தேர் மீதும் அமைக்கப்பட்டிருக்கலாம். 'கொடி நுடங்கு யானை' (புறம். 228), 'கொல்களிற்று மீமிசைக் கொடி' (புறம். 9) எனப் புறநானூறு தருவது போலப் பிற சங்க நூலும் காட்டும் (பதிற்றுப்பத்து 52, 69, 87, நெடுநல். 87). கொடிகள் யாரால் எங்கெல்லாம் தாங்கி எடுத்துச்செல்லப்பட்டன எனவும் காணலாம்.

அரசிலும் பலபொருள் நோக்கில் பல கொடிகள் அமைந்திருக்கக் கூடுமா என எண்ணலாம். வெற்றிக் கொடி பற்றிய குறிப்பு இச்சிந்தனை நல்கும்.

**வான்றோய் வெல் கொடி (பதிற்று. 69)**

**மலை நீர்**
**வென்றெழு கொடியிற் றோன்றும் (மலைபடு. 581-2)**

**விசயம் வெல்கொடி யுயரி (முல்லை. 91)**

**புலவுப்படக் கொன்று மிகைதோ லோட்டிப்**
**புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி (மதுரை. 370-371)**

அன்றியும் 'நாட்கொடி' பற்றிய எண்ணமும் உண்டு. தற்காலம் போன்று, விடியலில் ஏற்றி அஸ்தமனத்தில் இறக்கும் நிலை பற்றியிப் பெயரா எனச் சிந்தித்தல் நலம்.

நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி (மதுரை. 368)

அரைம ணிஞ்சி நாட்கொடி நுடங்கும் (புறம். 341)

என்பதால் 'நல்ல நாளிலே கட்டின கொடி', 'நாடோறுஞ் செய்த வெற்றிக்குக் கட்டின கொடி' எனலும் சாலும். விழவும் கொடியும் பற்றியும் கருதல் வேண்டும்.

தமிழ் மன்னர் மூவரின் தனிக் கொடிகள் பற்றிய செய்திகளும் ஓரளவே தெளியத் தக்கன. சேர, சோழ, பாண்டியர்க்குரிய வில், புலி, கயல் ஆகிய அடையாளங்களும் அவை பொறிக்கப்பட்டமையும் புறம் தரும் செய்தி.

**ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டு நின்**
***பேழ்வா யுழுவை பொறிக்கு* மாற்றலை (33)**

**வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்**
**டிமயஞ் சூட்டிய வேம *விற்பொறி* (39)**

**நெடுநீர்க் *கெண்டையொடு பொறித்த***
**குடுமிய வாக பிறர் குன்றுகெழு நாடே (58)**

வெற்றியின் அடையாளமாகப் பொறித்த இவை கொடிச் சின்னம் எனினும் இவை கொடியில் எவ்வாறு வரையப்பட்டன என ஆய்தல் கூடும். புலி, புள்ளிப்புலியா, வரிப்புலியா (கொடுவரி), நிற்கும் புலியா, பாயும் புலியா........ எனவும், ஒரு கயலா, இருகயலா, எதிரெதிரமையும் கயலா, மீனின் பொது வடிவமா, ஏதேனும் குறிப்பிட்ட வகையின் உருவா எனவும், வில்மட்டுமா, வில்லும் அம்புமா, தரையில் வைக்கப்பட்ட நிலையிலா, கையில் ஏந்திய நிலையிலா, எய்யத் தயாராக வான் (மேல்) நோக்கிய வில்லுமம்புமா - எனவும் பலவிதமாகச் சிந்திக்க வாய்ப்பு உண்டு. அன்றியும் முன் தொடர்புடன் இக்கொடிகளின் வண்ணம், வடிவு, அளவு........ போன்றனவும் இணைச் சிந்தனைக்குரியன.

தமிழ் மன்னர்க் கொடிச் சின்னமே அரசச் சின்னமாக, முத்திரைச் சின்னமாகவும் அமைந்ததா எனத் தெளிய வேண்டும். போந்தை, வேம்பு, ஆர் என மாலைகள் அடையாள நிலை கொண்டதுடன் இதனையும் இணைத்துக் கருதுதல் வேண்டும். இக்கொடிச் சின்னங்கள் எந்நோக்கில் எவ் அடிப்படையில் தேர்ந்துகொள்ளப்பட்டு அமைக்கப்பட்டன எனவும் கருதல் தேவை.

தொல் பழங்கால உலகப் பண்பாடுகளின் மக்களினங்கள் அடையாளமாக (totem) தத்தமக்கு உயிரின மொன்றைத் தேர்ந்தமை இதற்கு எண்ணம் அளித்து உதவலாம். பயின்ற அல்லது அரிய உயிரினம் தேர்ந்து கொள்ளப்பட்டதா? இடக் காலக் குறிப்புத் தோன்ற ஏற்கப்பட்டதா? போன்ற சிந்தனைகளை அந்நிலையிலிருந்து அறிதலும் உதவலாம். இந்நிலையில் பாண்டிய சோழர் உயிரினத்தைத் தேர சேரர்கட்கு செயற்கைப் பொருளான வில் மாறுபட்டு அமைதலும் ஆய்தற்கு உரியது.

பழந்தமிழ்ப் பாடல் கூறும் கடவுளர் கொடிகளும் சில சிந்தனை வழங்குகின்றன. புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடல் கொன்றையணிந்த சிவபிரானுக்கு, கொடியின் சின்னம், ஊர்தியாகவே அமைந்ததைத் தருகின்றது.

**ஊர்தி வால் வெள் ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியு மவ்வே றெனப** **(1)**

மன்னர் கொடிக்கு வேறாகக் கடவுளர்க் கொடிச் சின்னம் அமைந்ததை இது உணர்த்தும். அத்துடன் மாலுக்கு (கருடன் எனும்) புள்ளும், முருகனுக்கு மயிலும் இவ்வாறே ஊர்தி கொடி இணைவு காட்டுவதும் உண்டு.

**மண்ணுறு திருமணி புரையு மேனி**
**விண்ணுறு புட்கொடி விறல்வெய் யோனும்**
**மணிமயி லுயரிய மாறா வென்றிப்**
**பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்** **(புறம். 56)**

இவ்வுயிரினக் கொடிகட்கு வேறாக, பலராமனுக்குப் பனைக்கொடி காட்டப்படுவது சேரனின் போந்தை (பனைமலர்) அடையாள மாலையுடன் இணைத்துக் கருதக் கூடியதாகலாம்.

**கடல்வளர் புரிவளை புரையு மேனி**
**அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்** **(புறம். 56)**

**பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்** **(புறம். 58)**

**வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப்**
**பானிற வண்ணன்** **(கலி. 104)**

முருகனுக்கு மயிற்கொடி பன்முறை சங்க இலக்கியத்தில் பயின்ற போதும் (அகம். 149, பரி. 17), சிலம்பு, கோழிக் கொடியைக் கூறல் காணப்படுகிறது.

உவணச் சேவல் உயர்ந்தோ னியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்

(சிலம்பு. 14.8–10)

முதற்கொடி, துணைக்கொடி எனப் பல கொடியமைக்கக்கூடும் எனும் சிந்தனை இங்கு எழுகின்றது.

தமிழர் வாழ்வின் குறியீட்டுப் பயன்பாட்டின் பல்பரிமாணம் பற்றிய ஆய்வுக்கு அவர் கொடிகள் தொடர்பான ஆழ் கல்வியும் துணைநிற்கக் கூடும். வெறும் ஒரு அடையாளமாக மட்டுமன்றி ஆழ்பொருளுடையதாகவும், தொன்மமாகவும் கூடக் கொடிச் சின்னங்கள் அமைதல் வெளிப்படலாம். காலந்தோறும் ஏற்பட்ட கொடி பற்றிய எண்ண மாறுபாடும், கருத்து வளர்ச்சியும் தெளிய முடியும்; என்ற பல நிலையிலும் இத்தகு ஆய்வு வேண்டப்படுவதாக அமைகின்றது. உலகளாவிய நிலையில் கொடி பற்றிய சிந்தனைகள், கொடிக்குறியீடு பற்றிய எண்ணங்கள் என்பனவும் பரந்த ஆய்வில் உட்படும்.*

* Flag, The New Book of Knowledge, Grolier, Newyork, 1973, Vol. 6, p.225. Symbolism of Flags, Symbols Public and Private, Raymond Firth, George Allen & Unwin, London, 1973. pp 328-367.

# சொல்லும் பொருளும்

தமிழில், தொல்காப்பியம் முதலே காணப்படும் கொடி எனும் சொல் (தொல்.எழுத்.உயிர்.83; தொல்.பொருள்.புறத்.27. மரபு.72)லுக்கு 20 பொருள் தரும் தமிழ் லெக்சிகன் (தொகுதி-2, ப.1133) 13-வது பொருளாகத் 'துவசம்' எனச் சுட்டும் 'பொருண்மை' தொடர்பாகத் திரட்டப்பெற்ற தரவுகளை இக்கட்டுரை களமாகக் கொள்கிறது.

பெரும்பாலும் ஒரு கோல் அல்லது கயிற்றில் ஓரோரம் இணைக்கப்பெற்றதும், அளவு வடிவம் நிறம் படவரைவு ஆகியவற்றால் வெவ்வேறுபட்ட தனிப்பகுதி பெற்றதுமாகி ஒரு நாடு அரசு அல்லது அமைப்பின் குறியாகவோ, அடையாளங் காட்டுவதாகவோ பயன்படுவது 'கொடி'.*

இக்குறிப்பிட்ட பொருளில், 'கொடி' எனும் சொல்லுடன் சுமார் 60 வேறு சொற்களும் வருவதாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களும் (கி.மு. 3 நூ - கி.பி. 12 நூ.), நிகண்டுகளும் (கி.பி. 9-19நூ), தமிழ் லெக்சிகனும் (20நூ) உணர்த்துகின்றன (பார்க்க: இணைப்பு). இச்சொற்கள் தமிழ்ச்சொற்களாகவோ பிற மொழியினவாகவோ அமையலாம். இடுகுறியாகவோ காரணச் சொல்லாகவோ அமையக்கூடும். தனிச்சொல்லாகவோ இணைச்சொல்லாகவோ வர வாய்ப்புண்டு. கொடி என்ற ஒரே பொருளில் வரும் சொற்களும், பலபொருளுள் ஒன்றாகக் கொடி என்பதைக் கொள்ளும் சொற்களும் அமையலாம். இச்சொற்களிலிருந்தே கொடி பற்றிய சில பொருண்மை விளக்கங்களை அறிய இயலலாம். மேலும் கொடிகள் பல்வகையின என்ற அடிப்படையில், கொடிகளில் வகைவேறுபாடு/ காட்டிச் சொற்களமைகின்றன எனவும் கருத முடியலாம். கால

---

* The Random House dictionary of the English Language, Jess stein, Random house, New York, 1969, p.538.

அடிப்படையில், சொற்பட்டியலைப் பார்க்கும்போது, ஒவ்வொரு சேர்க்கையின் நிலையும் காரணமும் பின்புலமும் புலப்படக்கூடும். சில சொற்கள் பரவலான பயன்பாடுடையதாகவும் பிற சில சொற்கள் மிக அரிய வரவினதாகவும் காணப்படலாம். அகராதியும் நிகண்டும் சில சொற்களைப் பெருங்கொடி, சிறுகொடி, தேர்க்கொடி, வீதிக்கொடி, விருதுக்கொடி எனப் பகுத்துச் சுட்டுவதுண்டு. இலக்கியச் சொல்லிலிருந்து நிகண்டு மற்றும் அகராதிச் சொல்லைப் பிரித்துக் காணும்போது சொல்லாட்சி அல்லது சொற்றொகை நிலை பற்றிய உண்மையும் தெளியலாம். மேலும், ஒரு பொருளுக்கு/பொருளைக் குறிக்க ஒரு சொல் இருக்கும் போது பல சொற்களின் தேவை அல்லது பல சொல் வரவின் நோக்கம் என்பதும் காணப்பட வேண்டியதே. ஆசிரியரின் மொழியறிவா, யாப்புத் தேவையா அல்லது சொல்லாக்கத் திறனா காரணம் என நினைக்க முடியும்.

இத்தகைய ஒரு பொருள் பற்றிய பல சொல் ஆராய்ச்சி வழியாக அச்சொல்/சொற்கள் இடம்பெறும் இலக்கியக் காலத்தை வரையறை செய்ய இயலலாம்; அல்லது அதற்குக் கூடுதல் சான்றாகப் பயன்படலாம். கடன் சொற்கள் இடம்பெறும்போது, பிறமொழிச் சொற் கலப்புப் பற்றிய வரலாற்றுக்கும் உதவியாக அமையலாம். ஒரு சொல்லின் சிதைவாகவோ மாற்றமாகவோ மற்றொரு சொல் உருவாக்கப்பட்ட நிலை தெளியும் போது சொல்லாக்கம் தொடர்பான கருத்தும் தெளிவுபடலாம். புதிய சொல் என்ற நிலை மட்டுமன்றி, ஏற்கெனவே வேறுபொருளில் வழங்கி வந்த சொல், ஒரு குறிப்பிட்ட நூலில் 'கொடி' எனும்பொருளையும் இணைத்துக்கொண்டு சொற் பொருளாக்கமாதலும் புலப்படும். இதற்கு ஆசிரியரின் படைப்பாளுமையோ மொழித் தாக்கமோ களம் நல்கலாம்.

## கொடி–சொற்பொருள்

தொல்காப்பியம் முதலிருந்து தொடர்ந்து இன்று வரைக் கொடியைக் குறிக்கும் ஒரே தமிழ்ச் சொல் 'கொடி' என்பது மட்டுமே. இப்பொருண்மையைக் குறிக்க இச்சொல் எவ்வாறு அமைந்திருக்கக் கூடும் என்பது சிந்தனைக்குரியது.

1. 'கொடி'யின் 20 பொருண்மைகளுள் லெக்சிகன் முதலாவதாகத் தரும் 'படர்கொடி' என்ற தாவர வகை நிலை இச்சொற்பொருத்தத்தைத் தர முடியலாம். தொடக்ககாலத்தில், தாவரக்கொடியே இத்தகு அடையாளக் கொடியாகப்

பயன்பட்டதால் அச்சொல்லே இதற்கும் ஆயிருக்கலாம் என்பது கருதுகோள். ஆதொண்டைக்கொடி அடையாளமானது பற்றிய குறிப்புக் கிடைப்பினும் (அபிதான சிந்தாமணி, ப.901) இது எல்லா மொழிக்கும் மனிதவினத்தினருக்கும் பொருத்துமா என்பது பற்றி மேலும் ஆய்வுக்குரியது.

கொடி என்ற சொல்லிற்குப் படர்தாவரம் என்ற பொருண்மை தவிர இலை, தழை என்பனவற்றைக் குறிப்பதாகப் பொருண்மை சுட்டவில்லை எனினும், பந்தற்காலில் (உச்சிக்குச்சிறிது கீழ்) அரசிலைக்கொத்து/மாவிலைக் கொத்து கட்டப்படுவதும், கோயில், திருவிழா போன்ற இடங்களில் கோலின் உச்சியில் இலைக் கொத்து (மா, அசோகு/நெட்டிலிங்கம்) கட்டப்படுவதும் இன்று(ம்) காணப்படுவதால், அதுபோல் ஒரு காலத்தில் படர்தாவரக்கொத்தும் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருத வாய்ப்புண்டு. இதுவும் மேலாய்வுக்குரியதே.

தாவர வகையான மரத்தைக் கொழுகொம்பாகக் கொண்டு தாவர வகையான கொடி இடமாக/வலமாகச் சுற்றியோ நேராகப் பற்றிப் படர்ந்து ஏறியோ அமைவதன் மறுவரைவு போலக் கொடிமரமும் அதன் மேலே உள்ள கொடியும் அமைவதும், பண்பாட்டுச் சின்னங்களாகத் தொடரும் கோயில் கொடி மரங்கள் (த்வஜஸ்தம்பம்) கல், மரம், உலோகப் பொதிவுடன் அமையும்போது, படர்கொடி சுற்றியதுபோல் அமைக்கப்படுகிறது என்ற எண்ணமும் இணைத்துக் காண்டற்குரியது (இக்கருத்து முனைவர் இரா. மதிவாணன் நேரில் கூறியது).

அரசனின் காவல் மரம் மற்றும் அதன் தழை, அல்லது ஒரு இனத்தினரின் அடையாளமரமும் அதன் இலையும், அல்லது அடையாள மலருக்குரிய மரம் மற்றும் அதன் மலர் (மலர்கள்/மலர்க்கொத்து/மலரை-மலர்களைத் தாங்கிய தழைக் கொத்து) என்பவனவற்றிலிருந்து கொடி மரமும் கொடியும் உருவாயிருக்கக் கூடுமோ என்ற எண்ணமும் இதற்கு விளக்கம் தரலாம். தோன்றிய (தோற்ற) இடம் காரணமாக அசலைக் குறித்த சொல் நகலுக்கு ஆமாறு இது.

இங்குப் பலவிடத்தும் கொடி என்ற தாவரப் பெயர்ப் பொருத்தம் முழுமையாக இக் கொடியில் பொருந்தாமை அமைகிறது. எனினும் கொடி, பெரும்பாலும் துணியாலமைவ தாலும், தொடக்க காலத்தில் துணியின் பணியைச் சீரை (மரவுரி; சீலை) மற்றும் தழைகள்/இலைகள் செய்தன என்பதாலும்,

தழையினிடத்தில் துணி வந்தபோது, கொடியின் தழையும் துணியாக மாறியதாகக் கருத்துக் கொள்ளலாம். மேலும் ஆங்கிலத்தில் கொடியைக் குறிக்கும் (flag என்ற) சொல், வாள் போன்ற நீண்ட கூரிய இலையையுடைய 'ஐரிஸ்' எனும் தாவரத்தையும் குறித்து வருவதை அம்மொழி-அகராதி நுவல்வது (முன்சுட்டியது) ஒப்புமை காட்டுகிறது. இந்நிலை பல மொழிகளிலும் நிறுவப்படுவது இதற்கு மேலும் தெளிவு தரும்.

இயற்கைப் பொருட்களிலிருந்து/அவற்றைக் குறிக்கும் சொற்களிலிருந்து செயற்கைப் பொருட்கள், ஒரொத்த அமைப்புக் காரணமாகப் பெயர் பெறலாம் என்பதை மடல், ஓலை, ஏடு... என்ற பிறவிடத்துக் காண்பது போல, இக்கொடி என்பதன் ஒற்றுமை அமையலாம்.

2. 'கொடு' என்ற அடியுடன் கொடுமை எனப் பெயர்நிலை கொண்டு வளைந்தது என்ற பொருள் தரும் சொல்லிலிருந்து கொடி என்பது உருவாயிருக்கலாம் என்பது தமிழ் லெக்சிகனை நோக்கத் தெரிகிறது (முன்சுட்டியது).

ஆனால், கொடி வளைவுடையதா என்பது சிந்தனைக்குரியது. கோடு, உயர்ந்தது-நேரானது. கொடி, ஆக்கு பொருளால் வளைவும் குழைவுமுடையது என்ற நிலையில் பொருத்தமமையலாமே தவிர எல்லாவிதமான பொருட்களாலும் ஆக்கம் பெற்ற கொடிகள் வளைதல் தன்மை கொள்ளாமலிருக்கலாம் (உலோகத்தாலான கொடி, சான்று).

கொடு-கொடி என்ற தொடர்பு போல், கடு-கடி, தடு-தடி, தொடு-தொடி, படு-படி, மடு-மடி, வடு-வடி..... என அமைவனவும் விளக்கப்படல் இயலுமெனில் இக்கருத்து மேலும் வலுப்பெறலாம்.

3. திராவிட மூலச் சொல் அகராதி கொடி என்பதை, கோடு, கோடை, கோடர், குவடு, குடுமி என்ற சொற்றொகுதியுடன் தருவது சிந்தனைக்குரியது.*

உச்சி, மலையுச்சி, மலை என்ற பொருளுடைய கோடு, கோட்டின் உச்சியில்/கொம்பின் உச்சியில் அமைந்த சார்பு பற்றி, கொடி என்ற பெயர் நிலையைத் தந்திருக்கக் கூடுமோ எனவும் கருதலாம்.

---

* Dravidian Etymological Dictionary, p.185.

கொடு, கொடுமை, வளைவு என்ற அதே பொருளிலும் கோடு என்பது வரலாம் என்பதால் அதனடிப்படையும் கருதக்கூடும். எனினும் கொடு/கோடு - கொடி என்பது போன்ற இணைவு நிலை பிற சொற்றொகுப்பில் அமைவது காட்டப்படுவது மேலும் ஏற்புடைத்தாகும்.

4. கொட்கு எனும் வினைச்சொல் சுழல் (தல்), அசை (தல்) எனும் பொருள் தருவதை நோக்க, அசைகின்ற கொடிக்கு அவ்வடிப்படையில் சொல்லாக்கம் ஏற்பட்டது எனவும் கருதக் கூடலாம். கொடிக்கு, ஒருவேளை, சுழலும் தன்மை இல்லாத போதும், மெல்லிய பொருளாலாகும் போது, காற்றடிக்கும் திசைக்கேற்ப மாறி, திரும்பிப் பறந்து அமைதல் இயல்பாதலின் அப்பொருட்பொருத்தமும் கருதக் கூடலாம்.

5. கொடி எனும் சொல்லுக்குத் தமிழ் லெக்சிகன் தருகின்ற, படர்கொடி, ஆடை உலர்த்துங்கொடி, கொப்பூழ்க்கொடி, மகளிர் கழுத்தணிவகை, அரைஞாண், ஏற்றத்தின் (கோல் அல்லது) கயிறு, கண்வரி முதலியன போன்ற பொருள்கள், கொடி மெல்லியதாகவும் நீளமானதாகவும் அமையும் தன்மையை விளக்குவது, தொடக்ககாலக் கொடிகளும் மெல்லியதாக நீளமானதாக அமைவன போலும் எனும் எண்ணத்தை ஏற்படுத்துக்கின்றன. காற்றாடி, காக்கை போன்ற அதன் வேறு பொருள்கள், கயிறு போன்ற இவற்றினும் அளவில் பெரிதாக அகன்றதாகவும் நீளம் குறைந்ததாகவும் கொடி அமைவது போலும் எனும் கருத்தைப் பெற உதவுகின்றன. இதை வளர்ச்சியாகக் கருதக் கூடும்.

## கொடி—பிறசொற்கள்

சங்க இலக்கியக் காலம் முதலாகக் 'கொடி'யைக் குறிக்கப் பிறசொற்களும் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இலக்கண/இலக்கியக் காலம் (கி.மு. 3நூ - கி.பி. 12நூ), நிகண்டுக்காலம் (கி.பி. 9நூ - 19நூ), தமிழ் லெக்சிகன் (இக்) காலம் (20நூ) என மூன்று பகுதியாகப் பிரித்துச் சொற்களைக் காணலாம்.

முதற் பகுதியில், படாஅகை, படாகை, பதாகை, விலோதம் ஆகியன சங்க இலக்கியத்திலமைவதும், கதலிகைக்கொடி, விலோதனம் ஆகியன மணிமேகலையில் சேர்க்கப் பெறுவதும்; கதலிகை, கதலிகை நெடுங்கொடி, சத்திக்கொடி, படாம் என்பன பெருங்கதையால் சேர்க்கை உறுவதும்; கேது, துகிலிகைக்கொடி

என்பன சூளாமணியில் இணைவதும்; கதலி, கூவிரம், கேதனம், கொடிபதாகை, துகில், துவசம் என்பன கம்பன் தன் இராமாவதாரத்தில் பயன்கொள்வதும்; தூசு என்பது பாரத வெண்பாவில் வருவதும், உட்படுகின்றன.

இரண்டாம் பகுதியில், புதிய சொல்லிணைவுகளாக, கத்திகை, சத்தி, துகிலிகை, படங்கு, வாலி என்பன திவாகரத்திலும், தோகை, படம், வல்லி, விடங்கம் என்பன பிங்கலத்திலும்; உத்தி, கயாதரத்திலும்; சிதவல், தார், துசம், துணி என்பன பொதிகை நிகண்டிலும்; இடக்கியம், டால், வானம் என்பன நாமதீப நிகண்டிலும்; சீரை, படர், படலிகை, முகடு என்பன அரும்பொருள் விளக்க நிகண்டிலும்; சருத்தி, அகராதி நிகண்டிலும் வந்து உட்படுகின்றன.

மூன்றாம் பகுதியில், கொடிச்சீலை, சிதாரம், சிந்து, செண்டா, செருத்தி, துகிற்கொடி, துயம், துவசபடம், தொக்கயம், தொசம், நிசான், பட்டம், பதாகம், பாவட்டா, வியோம மஞ்சரம், வியோம மண்டலம், விருது, வைஜயந்திகை, ஜண்டா, ஜெண்டா என்பன உட்படுகின்றன.

## கொடிப்பொருள் மட்டுமுள்ள சொற்கள்

மேற்படி சொற்றொகுப்பை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று 'கொடி' எனும் பொருண்மை மட்டுமே உடைய சொற்கள்; பிறிதொன்று அத்துடன் பிற பொருண்மையுமுடைய சொற்கள்.

கிடைத்த தரவுகளினடிப்படையில் கீழ்வரும் சொற்களைக் கொடிப்பொருண்மை மட்டுமுடையதாக அறியமுடிகிறது. அவை:

**இடக்கியம், கதலிகைக்கொடி, கதலிகைநெடுங்கொடி, கேதனம், கொடிச்சீலை, கொடிபதாகை, சத்திக்கொடி, சருத்தி, சிதாரம், செண்டா, செருத்தி, துகிலிகைக்கொடி, துகிற்கொடி, துவசபடம், தொக்கயம், தொசம், நிசான், படலிகை, பாவட்டா, வியோமமஞ்சரம், வியோமமண்டலம், வைஜயத்திகை, ஜண்டா, ஜெண்டா**

என்பன. இவற்றில் கதலிகைக்கொடி, கொடிச்சீலை, கொடிபதாகை, சத்திக்கொடி, துகிலிகைக்கொடி, துகிற்கொடி, துவசபடம் போன்றன இரட்டைச் சொற்களாக அமைதல் கவனிக்கத்தக்கது. மேலும் இவற்றில் தமிழ்ச்சொற்கள் சிலவேயாகவும் பிறமொழிச் சொற்களே பலவாகவும் அமைதல் சுட்டற்குரியது. அன்றியும் தமிழும் பிற

மொழியும் (வடமொழி) கலந்த நிலையில் சில சொல்லாக்கங்கள் காணப்படுவதும் எண்ணத்தக்கது.

## கடன் சொற்கள்

கொடிச் சொற்கள் பல கடன்பெறப்பட்டவையாக அமைகின்றன. கொடி என்ற பொருண்மையுடன் வந்து அதே வடிவு அல்லது சிறிது மாற்றத்துடன் அமையும் சொல் உள.

இடக்கியம், தொக்கயம் என்பன டெக்கியமு எனும் தெலுங்கு மூலம் உடையன. டால் என்பது தெலுங்கில் டாலு எனவும் கன்னடத்தில் டால் எனவும் அமைவதால் அம்மூலத்தினது எனலாம். திராவிட மூலச்சொல் அகராதி முன்னதைத் தருகிறதே யொழியப் பின்னதைத் தரவில்லை. அதிலும் 'இ' இன்றி டக்கியம், டக்கயம் எனும் வடிவங்களையும் தருகின்றது (ப.256).

கதலி, கேது, துவசம், பதாகை என்பனவும் வியோம மஞ்சரம், வியோம மண்டலம், வைஜயந்திகை என்பனவும் வடமொழியிலிருந்து வந்தனவாகத் தெரிகிறது.

கதல, கதலக, கதலி என்பன களிறேந்தியகொடி என அம்மொழி அகராதியில் சுட்டப்படுகின்றன. கதலி, கதலிகை, கதலிகைக் கொடி, கதலிகை நெடுங்கொடி என்பன இணைவு காட்டுவதுடன், கத்திகை என்பதும் சிதைவு வடிவமாகத் தமிழ் லெக்சிகனில் குறிக்கப்படுவது கருதற்குரியது. கதலி, வாழை வகை என்பதால் வாழை இலை போன்ற வடிவக் கொடி எனும் ஒப்பீட்டுநிலை கருதப்படலாம்.

கேதன, கேது என்பன குறி, அடையாளம் என்ற நிலையில் அங்குக் கொடியைக் குறிக்கின்றன. கேதனம், கேது என அவை தமிழில் வருகின்றன.

கொடியைக் குறித்து வரும் த்வஜ், த்வஜ எனும் சொற்கள், போதல், அசைதல் எனும் பொருளுடைய த்வஜ், த்வஞ்ஜ் என்பதிலிருந்து உருவானமை அம்மொழி அகராதியில் காட்டப்படுகிறது. தமிழில், துசம், துயம், துவசம், துவசபடம், தொசம் எனப் பலவடிவில் வருவதாகத் தெரிகிறது.

படாக, பதாக, பதாகா என்பன அம்மொழி அகராதியில் கொடியைக் குறித்து வருகின்றன. படாக என்பது ஒரு பறவை என்ற நிலையில் சொல்லாக்கப் பொருத்தம் புலப்படுகின்றது. தமிழில் படாகை, படாஅகை, பதாகம், பதாகை, கொடிபதாகை

என்ற பயன்பாடுகள் இதனால் இணைகின்றன. படலிகை என்பதும் இவற்றுடன் கருதற்குரியதா என்பது சிந்தனைக்குரியது.

வானம், காற்று, வளிமண்டலம், சுவர்கம் எனப் பல பொருள்படும் வ்யோமன் என்பதன் அடிப்படையில் வியோம மஞ்சர (sky-cluster), வியோம மண்டல (sky-circle) என்பன கொடியைக் குறித்து வடமொழி அகராதியில் வருவது அவ்வாறே தமிழில் இணைகின்றன.

வைஜயந்த என்பது கொடி என்பதுடன் இந்திரனின் கொடி என்ற பொருளிலும், வைஜயந்திக கொடி என்பதுடன் கொடிதாங்கி (a flag bearer) என்ற பொருளிலும் வருவன அடிப்படையாகித் தமிழில் வைஜயந்திகை என்பதைத் தருவதாகத் தெரிய முடிகிறது.

இவை தவிர உத்தி, சத்தி போன்ற சில சொற்களும் வடமொழியோ எனும் ஐயத்தை ஏற்படுத்தினும், பார்த்த அளவில், இவை அங்கு வருதலோ, கொடிப் பொருண்மையுடன் வருதலோ அகராதி நிலையில் கிடைத்திலது. எனினும் சில சொற்கள் ஒலி/பொருள் சார்பு/தொடர்பு காரணமாக அங்கிருந்து வந்திருக்கலாம் போலும் எனும் ஐயத்தை ஏற்படுத்தலாம்.

சான்றாக, விலோதம், விலோதனம் எனும் சொற்கள் கொடிப்பொருளில் தமிழில் வருவது வடமொழி அகராதியில் அப்பொருளில் பெறப்படவில்லை. ஆனால் சுழல், முன்பின் அசைதல், படபடத்தல் எனவும் கலக்கல், அங்கிங்கு நடத்தல் எனவும் பொருள்பட வரும் 'விலுட்' என்பதன் அடிப்படையில், விலோட விலோடன எனும் சொற்கள் சுழல்தல், புரளுதல் எனும் பொருள் புலப்படுத்தி வருகின்றன. இவ்வாறே பிறவும் அமையலாம். கொட்கு-சுழல்வு என்ற கொடியடிப்படை போன்றது இது.

உருது மொழியிலிருந்து நேராக, அல்லது மகாராட்டிர மொழி வழியாக வந்தனவாக ஜண்டா, நிசான், பாவட்டா என்பன அமைவதாகத் தமிழ் லெக்சிகன் குறிப்பிடுகிறது. தமிழில் செண்டா, ஜண்டா, ஜெண்டா எனும் வடிவங்களும் சிந்து என்ற சிதைவுமமைவது தெரிகிறது. இச்சொல் வடமொழி, மலையாளம், கன்னட அகராதிகளில் காணப்பட்டதாகத் தெரியவில்லை. கிட்டலின் கன்னட அகராதியில் 'நிஸானி' என்பதும் மானரின் துளு அகராதியில் பாவடெ, பாவுடெ என்பனவும் அமைவது தெரிகிறது. தமிழில் இவை நிசான், பாவட்டா என லெக்சிகனில் மட்டும் இடம்பெறுவது தனிச்சிந்தனைக்குரியது.

திராவிட மூலச்சொல்லகராதியின் வாயிலாகத் தமிழிலும் மற்றொரு அல்லது பல திராவிட மொழியிலும் அமையும் சொற்கள் சிலவற்றைக் கொடிப் பொருளுடையனவாக இனம் காண முடிகின்றது. எனவே அவை பிறமொழி மூலத்தின அல்ல, கடன் வாங்கப்பெற்றன அல்ல எனக் கருத முடியலாம்.

## திராவிடச் சொற்கள்(?)

ஏற்கெனவே சுட்டப்பெற்ற இடக்கியம் எனும் சொல், தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வழங்குகிறது.

கொடி என்பது தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகியவற்றிலும் குடி எனக் கன்னடத்திலும் காணப்படுகிறது. பிறசில திராவிட மொழியிலும் ஒத்த சொல்நிலை அமைவது தெரிகிறது.

தோகை, மலையாளம் (தோக), கன்னடம் (தோகெ), தெலுங்கு (தோக), இன்னும் பிறசில திராவிட மொழியில் அமையினும், வால், மயிலின் வால் போன்று தொங்குவனவற்றைக் குறிக்கின்றனவேயன்றி கொடியைக் குறிக்கவில்லை. அவ்வாறே விருது என்பதும் அவற்றில் வேறு பொருளிலேயே வருகின்றது.

வானம், வானி என்பன அங்கமையவில்லை யெனினும், குயிமொழியில் 'வன' என்பதன் பல் பொருளிலொன்றாக 'கொடி' தரப்படுவது இணைத்துக் காணத்தக்கது.

## தமிழ்ச் சொற்கள் (?)

பிறமொழி அகராதிகளைப் பார்த்ததன் அடிப்படையில், கடன் வாங்கப்பட்டனவாக அல்லது பிறமொழிச் சார்பு காட்டுவனவாக அமையும் மேற்படி சொற்கள் சிலவன்றிப் பிறவனைத்தும் தமிழ்ச் சொற்கள் எனத் தக்கனவா என்பது ஆய்வுக்குரியது.

பழந்தமிழிலக்கியங்களிலேயே 'கொடி' என்ற பொருளிலன்றி வேறுபொருளில் வழங்கப்பட்ட சொற்கள் பிற்காலத்தில் 'கொடி'ப் பொருளும் பெறுவது ஒரு வகை. இவை இடுகுறிநிலையுடனோ - பொருட்சார்பு கொண்டோ அமையலாம்.

உத்தி - தொல்காப்பியம் 32 உத்திகள் பற்றிக் கூறும். ஆபரணத் தொங்கல், பாம்பின் படப்பொறி போன்றன லெச்சிகனின் பொருள்.

| | | |
|---|---|---|
| கூவிரம் | - | குறிஞ்சிப்பாட்டில் ஒரு மலர் வகையாக வருகிறது (வரி 66). |
| சிதவல் | - | சிதறிய துணி என்ற பொருளில் 'சிதவலர்' என அத்தகு ஆடை அணிந்தவர் குறுந்தொகையில் சுட்டப்படுகின்றனர் (146.3). |
| சிதாரம் | - | அகநானூறு சிதாஅர் என சீலை/சீரை/கந்தைத்துணி எனும் பொருட் பயன்பாடு தருகிறது (337.12). |
| சிந்து | - | இச்சொல் காணப்படவில்லையெனினும் குறிஞ்சிப்பாட்டு 'சிந்துவாரம்' என கரு நொச்சி மலரைக் காட்டுகிறது (வரி 89). |
| சீரை | - | கிழிந்த கந்தைத் துணி என்ற பொருளில் திருமுருகாற்றுப்படை முதலாகப் பயன்பாடு அமைகின்றது (வரி 126). |
| துகில் | - | ஆடை எனும் பொருளில் வருகிறது (குறிஞ்.55) |
| துகிலிகை | - | எழுதுகோல் (நற். 118.8) |
| தோகை | - | மயில் (குறிஞ். 191) |
| படம் | - | புடவை (புறநா. 260.28) |
| படர் | - | நோய் (குறிஞ். 11) |
| படாஅம் | - | ஆடை (புறநா. 141.11) |
| முகடு | - | உச்சி, தலை (கலித். 94.43, நற். 89.2) |
| வல்லி | - | வன்மை (அகநா. 191.11); வல்லிகை-குதிரை கழுத்தணி (கலித். 96.10) |
| வானி | - | ஒரு மலர் (குறிஞ். 69) |

இவற்றுள் சிதவல், சிதாரம், துகில், படம், படாஅம் என்பன ஆடையைக் குறிப்பதால் ஆடையாலான, துணியாலான கொடியையும் குறிக்கும் பொருட்சேர்க்கை/பொருள் நீட்சி பெற்றுள்ளன எனல் தரும்.

உத்தி, கூவிரம், சிந்து, துகிலிகை, தோகை, வல்லி, வானி என்பன அச்சொற்களின் மேற்படிப் பொருள் அல்லது பிற பொருளடிப்படையில் ஒப்புமைச் சார்பு பற்றிக் கொடியைக் குறித்திருக்கலாம். கொடி/குவடு என்பதுபோல முகடு, உயர்வு என்ற நிலையிலும், படர் - படர்தல் (கொடிபடர்தல்/கொடி பறத்தல்) என்ற நிலையிலும் இத்தகு இணைவு கொள்ள வாய்ப்புண்டு.

பழந்தமிழிலக்கியம் முதலே அமையும் மேற்படிச்சொற்கள் தவிர சத்தி, சருத்தி/செருத்தி, தார், துணி, தூசு, பட்டம், படங்கு, விடங்கம், விருது என வருவனவும் இத்தகு பிறபொருளொப்புமை ஆய்வுக்கு உட்படுத்தப்படுதல் தேவை.

சத்தி என்ற சொல்லின் இரு பொருண்மைகளான தேர்க்கொடி, விருதுக்கொடி என்பனவே சருத்தி/செருத்தி என்பனவற்றில் அமைகின்றன. இவற்றின் பொருத்தம் புலப்படவில்லை. ஆய்வுக்குரியதாக அமைகிறது.

தார், மாலையைக் குறிப்பதுடன் கொடிப்படையையும் குறிப்பதால், பின்னதன் சார்பு பற்றி, கொடிக்குப் பெயராகியிருக்கலாம்.

ஆடை எனப் பொருள்படும் துணி, தூசு (தூசி - கொடிப்படை), படங்கு என்பன மேற்படி துகில் என்பது போல் பொருத்தற்குரியன.

உத்தி என்ற சொல் போல் பட்டம் என்பதும் மாதர் நுதலணி எனப் பொருள்படுவதால் இணைத்துக் காண்டற்குரியது. மேலும் பட்டம், விருது என்பன ஒருவர் சிறப்பிக்கப்பட்டமைக்கு அடையாளமாக (வெற்றிச்சின்னம்) அமைவதால் 'விருதுக்கொடி' இப்பெயர்கள் கொண்டிருக்கலாம்.

விடங்கம், வீட்டின் முகடு என்ற பொருளைத் தந்து அங்கமைந்த கொடியையும் குறிக்கிறது எனப் பொருத்தலாம்.

## தொகையுரை

1. கொடி எனும் சொல் தொல்காப்பியம் முதல் இன்று வரை 'கொடி'யைக் குறித்து வரும் ஒரே சொல்லாகத் தொடர்ந்து அமைகிறது.
2. கொடியைக் குறிக்க சுமார் 60 சொற்கள் தமிழில் தெரியவருகின்றன.
3. கொடி எனும் சொல்லும் பொருளும் படர்கொடியிலிருந்து வந்திருக்கலாம்.
4. பழந்தமிழிலக்கியத்தில் வேறுபொருளில் காணப்பட்ட சில சொற்கள் காலப் போக்கில் கொடிப் பொருண்மையைக் கொண்டுள்ளன.
5. பிறமொழிச் சொற்கள் பலவற்றைத் தமிழ் லெக்சிகன் இணைக்கிறது.
6. கொடியின் ஆக்குபொருளின் அடிப்படையில் பல சொற்கள் ஏற்பட்டுள்ளன.

**இணைப்பு**

# கொடி – சொற்கள்

| சொற்கள் | இலக்கண இலக்கியங்களில் | நிகண்டுகளில் (கி.பி.) | | தமிழ் லெக்சிகனில் |
|---|---|---|---|---|
| 1. இடக்கியம் | ✕ | நாமதீப (1800) | (1) | ✓ |
| 2. உத்தி | ✕ | கயாதரம் (1450) | (2) | ✓ |
| 3. கத்திகை | ✕ | திவாகரம் (8நூ) | (7) | ✓ |
| 4. கதலி | கம்பன்(4824) | வடமலை(1700) | (3) | ✓ |
| 5. கதலிகை | பெருங்கதை(1.52.14) | கயாதரம் | (3) | ✓ |
| 6. கதலிகைக்கொடி | மணிமேகலை(1.52) | ✕ | | ✕ |
| 7. கதலிகை நெடுங் கொடி | பெருங்கதை(1.38.8) | ✕ | | ✕ |
| 8. கூவிரம் | கம்பன்(9877) | திவாகரம் | (4) | ✓ |
| 9. கேதன(ம்) | கம்பன்(965) | திவாகரம் | (7) | ✓ |
| 10. கேது | சூளாமணி(1335) | பிங்கலம் (9நூ) | (4) | ✓ |
| 11. கொடி | தொல்காப்பியம் (எழு.உயிர்.83) | திவாகரம் | (13) | ✓ |
| 12. கொடிச்சீலை | ✕ | ✕ | | ✓ |
| 13. கொடிபதாகை | கம்பன்(7524) | ✕ | | ✕ |
| 14. சத்தி | ✕ | திவாகரம் | (6) | ✓ |
| 15. சத்திக்கொடி | பெருங்கதை(2.6.56) | ✕ | | ✕ |
| 16. சருத்தி | ✕ | அகராதி நிகண்டு (19நூ) | (1) | ✓ |
| 17. சிதவல் | ✕ | பொதிகை (18நூ) | (2) | ✓ |
| 18. சிதாரம் | ✕ | ✕ | | ✓ |
| 19. சிந்து | ✕ | ✕ | | ✓ |
| 20. சீரை | ✕ | அரும்பொருள் விளக்கம் (19நூ) | (1) | ✕ |
| 21. செண்டா | ✕ | ✕ | | ✓ |
| 22. செருத்தி | ✕ | ✕ | | ✓ |
| 23. டால் | ✕ | நாமதீப | (1) | ✓ |
| 24. தார் | ✕ | பொதிகை | (1) | ✕ |
| 25. துகில் | கம்பன் (2360) | பிங்கலம் | (3) | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26. | துகிலிகை | ✗ | திவாகரம் | (5) | ✓ |
| 27. | துகிலிகைக்கொடி | சூளாமணி (41) | ✗ | | ✗ |
| 28. | துகிற்கொடி | கம்பன் (2049) | ✗ | | ✓ |
| 29. | துசம் | ✗ | பொதிகை | (2) | ✓ |
| 30. | துணி | ✗ | பொதிகை | (1) | ✓ |
| 31. | துயம் | ✗ | ✗ | | ✓ |
| 32. | துவசம் | கம்பன் (1260) | திவாகரம் | (9) | ✓ |
| 33. | துவசபடம் | ✗ | ✗ | | ✓ |
| 34. | தூசு | பாரத வெண்பா(780) | ✗ | | ✗ |
| 35. | தொக்கயம் | ✗ | ✗ | | ✓ |
| 36. | தொசம் | ✗ | ✗ | | ✓ |
| 37. | தோகை | ✗ | பிங்கலம் | (5) | ✓ |
| 38. | நிசான் | ✗ | ✗ | | ✓ |
| 39. | பட்டம் | ✗ | ✗ | | ✓ |
| 40. | படங்கு | ✗ | திவாகரம் | (8) | ✓ |
| 41. | படம் | ✗ | பிங்கலம் | (4) | ✓ |
| 42. | படர் | ✗ | அரும்பொருள் விளக்கம் | (1) | ✓ |
| 43. | படலிகை | ✗ | அரும்பொருள் விளக்கம் | (1) | ✗ |
| 44 | படாகை | ச.இ (பரிபாடல்.9.78) | திவாகரம் | (5) | ✓ |
| 45. | படாஅகை | ச.இ (கலித்தொகை.101.37) | ✗ | | ✗ |
| 46. | படாம் | பெருங்கதை (2.2.155) | சூடாமணி (10நூ) | (2) | ✓ |
| 47. | பதாகம் | ✗ | ✗ | | ✓ |
| 48. | பதாகை | ச.இ (பட்டினப்பாலை) 182) | திவாகரம் | (9) | ✓ |
| 49. | பாவட்டா | ✗ | ✗ | | ✓ |
| 50. | முகடு | ✗ | அரும்பொருள்விளக்கம் | (1) | ✗ |
| 51. | வல்லி | ✗ | பிங்கலம் | (3) | ✓ |
| 52. | வானம் | ✗ | நாமதீப | (1) | ✗ |
| 53. | வானி | ✗ | திவாகரம் | (8) | ✓ |
| 54. | விடங்கம் | ✗ | பிங்கலம் | (7) | ✓ |
| 55. | வியோம மஞ்சரம் | ✗ | ✗ | | ✓ |

| | | | | |
|---|---|---|---|---|
| 56. வியோம மண்டலம் | ✕ | ✕ | | ✓ |
| 57. விருது | ✕ | ✕ | | ✓ |
| 58. விலோதம் | ச.இ. (மதுரைக் காஞ்சி, 449) | சுயாதரம் | (4) | ✓ |
| 59. விலோதனம் | மணிமேகலை (5.5) | திவாகரம் | (6) | ✓ |
| 60. வைஜயந்திகை | ✕ | ✕ | | ✓ |
| 61. ஜண்டா | ✕ | ✕ | | ✓ |
| 62. ஜெண்டா | ✕ | ✕ | | ✓ |

1. முதலில் சொல் இடம் பெறும் நூல் மட்டும் தரப்படுகிறது.
2. நூலின் காலவரிசை, மு. அருணாசலம் கருத்தின் அடிப்படையிலமைகிறது.
3 பார்க்கப்பட்ட 13 நிகண்டுகளில் எத்தனை நூலில் சொல்வரவு அமைகிற தென்பதை அடைப்புக்குறி எண் தருகிறது.
4. இவை தவிர அங்கம், ஆக்கம், தொங்கல், தோரணம் என்பனவும் 'கொடி'ப் பொருண்மை உணர்த்தக் கூடுமெனினும் சான்றுகள் மேல்மூன்றிலும் கிடைத்தில.
5. மேலும் சிறுகொடி, பொருங்கொடி, சித்திரக்கொடி..... போன்று வருவன உளவெனினும் அவை அடைநிலையாகத் தனித்துக் கருதப்படுகின்றன.

# அரசர் கொடிகள்

'அளவு, வடிவம், வண்ணம், வரைவுரு ஆகியவற்றால் வகைப்பட்டு, துணியாலாகி, பெரும்பாலும் கயிறு அல்லது கோலின் ஓரோரத்தில் இணைக்கப்பெற்று, தேசம், நாடு, அமைப்பு ஆகிய ஒன்றன் குறியீடாகவோ, அடையாளங்காட்டவோ பயன்படுவது' எனக் கொடி விளக்கம் பெறுகிறது.[1]

'கொடி' எனும் சொல், தமிழில் பல பொருண்மைகளில் வழங்கப்பெறினும்[2] மேற்சுட்டிய விளக்கம் தரும் வண்ணமும் பயன்படுகின்றது.

தமிழிலக்கியங்களையும் நிகண்டு-அகராதிகளையும் பார்க்கும் போது, நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட சொற்கள்[3]

---

1. A piece of cloth varying in size, shape, color and design usually attached at one edge to a staff or cord and used as the symbol of a Nation, State or organization, as a means of signalling, etc.

   - The Random House Dictionary of the English Language, Jess Stein, Random House, New York, 1969, p.538.

2. 1. படர்கொடி, 2. சித்திரமூலம், 3. ஆடை உலர்த்துங் கொடி, 4. கொப்பூழ்க்கொடி, 5. மகளிர் கழுத்தணிவகை, 6. ஞாண், 7. ஏற்றத்தின் கோல் அல்லது கயிறு, 8. கண்வரி முதலியன, 9. ஒழுங்கு, 10. நீளம், 11. சிறுகிளை வாய்க்கால், 12. ஏரியிலிருந்து வழியும் நீரைக்கொண்டு செல்லும் வாய்க்கால், 13. துவசம் (Banner, Flag, Standard, Streamer), 14. காற்றாடி, 15. காலத்துவசம் என்னும் யோகம், 16. கேது, 17. காக்கை, 18. கிழக்குத்திசை, 19. கொடியடுப்பு, 20. அவிட்டம் - தமிழ் லெக்சிகன், தொகுதி-2, ப. 1133, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1931.

3. இடக்கியம், கதலி, கதலிகை, கத்திகை, கூவிரம், கேதனம், கேது, கொடி, சத்தி, சருத்தி, செருத்தி, சிதவல், சிதாரம், சிந்து, செண்டா, டால், துகில், துகிலிகை, துசம், துவசம், துயம், தொசம், தோகை, தொக்கயம், நிசான், படம், படாம், படாகை, பதாகை, பதாகம், பட்டம், படங்கு, படம், படர், பாவட்டா, வல்லி, வானி, விடங்கம், விலோதம், விலோதனம், வியோமமஞ்சரம், விருது, வைஜயந்திகை, ஜண்டா, ஜெண்டா. சுமார் அறுபது சொற்கள் தனியாய்வில் மேற்கொள்ளப் பெறுகின்றன. (முன் இயல் காண்க).

கொடியைக் குறித்து வருவது தெரியினும், கொடி என்பதே பெருவழக்கினதாக அமைவது புலப்படுகிறது. அகராதிச் சொற்கள் பல தமிழிலக்கிய வழக்குப் பெறாமையும் பிறமொழிச் சார்பில் அமைவதும் காணப்படுகிறது.

கொடியின் வெவ்வேறுபட்ட தன்மைக்கேற்ப பெயர்ப்பன்மை அமைவதை, ஆங்கிலமொழியில்[4] காண்பது போன்று, இங்கும் அமைத்துக் காணலாமோ எனப் பிறிதொரு ஆய்வுக்கும் வாய்ப்புண்டு.

## சங்க இலக்கியத்திற்கு முன்

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமாகிய சங்க இலக்கியங்களுக்கு முன்பும் கொடி பற்றி அறிய இயல்கின்றது. தொல்காப்பியம், கொடி எனும் சொல்லைத் தருவதுடன்[5], கடவுட் கொடி[6], அரசர் கொடி ஆகிய செய்திகளையும் சுட்டுகின்றது.

அரசருக்கு உரியனவற்றின் பட்டியல் இரண்டாவதாகக் கொடியைத் தருகிறது.

**படையும் கொடியும் குடையும் முரசும்**
**நடைநவில் புரவியும் களிறும் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய**

**(தொல்.பொருள்.மரபு.72)**

எல்லா அரசர்க்கும் கொடி உரியது எனவோ, 'தெரிவுகொள் செங்கோல் அரசர்' என்பதால் குறிப்பிட்ட அரசர்க்கு உரியது எனவோ கொள்ளலாம். அத்தகைய அரசர் யார் என்பது விளக்கம் பெறவில்லை.

---

4. See, Random House Dictionary;
1. Banner, 2, Ensign, 3. Pennant (Pennon), 4. Standard, 5. Streamer, 6. Burgee.

5. கொடி முன் வரினே ஐ அவண் நிற்ப
கடிநிலை இன்றே வல்லெழுத்து மிகுதி (தொல்.எழு.உயிர்மயங். 83)

6. கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (தொல்.பொருள்.புறத். 27)

இளம்பூரணர் இதனைக் கொடி என ஏற்பினும், 'கொடிநிலை' என்பது கீழ்த்திசை - ஞாயிறு என உரைக் குறிப்புப் பெறுவதும் உண்டு.

பார்க்க: தொல். மூலம், கழகம், சென்னை, 1961.

தொல்காப்பியம், சிறப்பாகப் புறத்திணையியல், அரசர் செயல்கள் பலவற்றைப் போர்ச் சூழலில் தந்தபோதும், மன்னர், வேந்தர் போன்ற பிற பெயர்களையும் ஆண்ட போதும், அவர் கொடிகள் பற்றிய வேறு எந்தக் குறிப்பும் தரவில்லை.

மேலும், இதன்கண் தமிழ் மன்னர் அல்லது மூவேந்தர் பற்றிய சிறப்புக் குறிப்புகட்கு வாய்ப்பில்லாத போதும்,

**உறுபகை**
**வேந்திடை தெரிதல் வேண்டி, ஏந்து புகழ்**
**போந்தை வேம்பே ஆர் என வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்**
**(தொல்.பொருள்.புறத்.5)**

என, பனம்பூ, வேப்பம்பூ, ஆத்திப்பூ ஆகிய அவ்வேந்தரின் படைகளின் அடையாள மலர்கள் சுட்டப்படுவதால், அரச அடையாளம் பற்றிய எண்ணம் இருந்தது புலப்படுகிறது; இந்நிலையில் கொடியடையாளம் பற்றிக் கூறப்படாமை சிந்தனைக்குரியது. இதனால், கொடி என்பதும் அதன்கண் அமையும் அடையாளம் அல்லது வரைவுரு என்பதும் தொடர்புடையதா அன்றா எனவும் ஐயம் எழுகின்றது. எனவே, சங்க இலக்கியத்தில் அரசர் கொடிகள் பற்றிய செய்திகள், அடுத்த படிநிலையில், இந்த ஐயத்தைத் தெளிவுபடுத்தலாம் என்பது கருதுகோளாக அமையப்பெறுகின்றது.

## *சங்க இலக்கியத்தில்*

கொடிகள் தொடர்பான சுமார் 140 குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. (1) அடிப்படையில் இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். (1அ) ஒன்று 'கொடி' என்ற சொல் பெற்று வருவன:

**ஊர்தி வால் வெள் ஏறே சிறந்த**
**சீர்கெழு *கொடியும்* அவ்வே றென்ப (புறம்.க.வா.)**

கொடி என்ற சொல் இன்றியும், அதன் பரியாயச் சொற்கள் வரும் சூழலும் தென்படுவது இதனுடன் இணைத்துக் காணத்தக்கது.

**பல்வே றுருவிற் *பதாகை* நீழல் (பட். 182)**

**தடாக மேற்ற தண்சுனைப் பாங்கர்**
**படாகை நின்றன்று (பரி. 9.78)**

(1ஆ) மற்றொரு வகை, உயர்த்தல், ஏந்தல் போன்ற சொற் பயன்பாடு காரணமாகக் கொடியைச் சூழலில் உணர்ந்து கொள்ளுமாறு அமைதல். இங்குக் கொடி என்ற சொல் வருவதில்லை.

**சேயுயர் பணை மிசை எழில் வேழம் ஏந்திய**
**வாய்வாங்கும் வளை நாஞ்சில் ஒருகுழை ஒருவனை**
**(பரி. 1.4–5)**

என்பதில் பலராமன் ஏந்திய யானைக் கொடி சுட்டப்பெறுகின்றது.[7]

**ஏற்று வல னுயரிய எரிமரு ளவிர்சடை**
**மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோனும் (புறம். 56.1–2)**

எனும் வரிகளில் சிவனுடைய காளைக் கொடி தரப்பெறுகின்றது.[8]

(2) சொல் பெறுதல் - சொல் பெறாமை என்ற மேற்கண்ட பகுப்புத் தவிர, கொடி தொடர்பான குறிப்புகளை மற்றொரு நிலையிலும் இருவகையாகப் பிரிக்க முடிகின்றது. (2.அ) ஒன்று, கொடியிலுள்ள வரைவுரு அல்லது அடையாளம் என்ன என்ற குறிப்புடன் வருவன.

**மீனேற்றுக் கொடியோன் போல் மிஞிறார்க்குங் காஞ்சியும்.....**
**ஆனேற்றுக் கொடியோன்போ லெதிரிய இலவமுமாங்கு**
**(கலி. 26.3,5)**

என்பதில் காமன், சிவன் ஆகியோர் கொடிகள் மீன் (சுறா/ மகரம்)[9], காளை ஆகியவற்றை வரைவுருவாகப் பெற்றமைவது தரப்பெறுகின்றது. (2ஆ) இவ்வாறன்றிப் பெருவரவினவான குறிப்புகள் உருவமாகக் குறிக்கப்படுவது என்ன எனும் எவ் விளக்கமுமின்றி அமைகின்றன.

---

7. மிக உயர்ந்த மூங்கிற்கோலின் உச்சியிலே கட்டப்பட்ட அழகிய யானைக் கொடியை உயர்த்தியவனும், கூர்மை செய்யப்பட்ட வளைந்த கலப்பைப் படையுடையவனும், ஒற்றைக் குழையை உடையவனுமாகிய பலதேவன்......
 - பரிபாடல், கழகம், சென்னை, 1957, ப. ரு(உரை).
8. ஆனேற்றை வெற்றியாக உயர்த்த அழல் போலும் விளங்கிய சடையினையும் விலக்குதற்கரிய மழுப் படையையு முடைய நீலமணி போலுந் திருமிடற்றையுடை யோனும்.
 - புறநானூறு, உ..வே.சா., சென்னை, 1971, ப. 136 (உரை)
9. சுறாஅக் கொடியான் கொடுமையை நீயும், கலி. 147.52
 மகரத்தின் கொடியோன் எய்த புதுப்புண்கள். சிலம்பு. 7.37

வரைமிசை யிழிதரும் அருவியின் மாடத்து
வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு தெருவில்
(பதிற். 47.3–4)

உருவம் குறிக்கப்பெறும் கொடிகளைக் காணும்போது இருவகையான எண்ணங்கள் எழுகின்றன. ஒன்று, 'கடவுளர் சார்புடைய கொடிகளே உருவக் குறிப்புடன் வருகின்றனவோ', என்பது. மற்றொன்று கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, தொகைகளின் கடவுள் வாழ்த்து போன்றனவே இவ்வுருவங்களைத் தருவதால் 'இவை, காலத்தால் பிற சங்க இலக்கிய நூல்களை - பாடல்களை விட்டு அகன்றவைதான் என்பதற்குத் துணைச் சான்றாகுமோ' என்பது. இவை மேலும் ஆய்தற்குரியன.

## கொடி வகைகள்

சொல், உருவம் ஆகியவற்றினடிப்படையிலான வகைப்பாடு தவிர, சார்புகளின் அடிப்படையிலும் கொடிகளை வகைப்படுத்தலாம்.

(1) மேலே சுட்டிய பல சான்றுகள், கடவுட் கொடி என்ற சார்பைப் புலப்படுத்துகின்றன. இவை இருநிலையில் தரப்படுகின்றன. (1அ) ஒன்று, கடவுளரையும் அவர் கொடிகளையும் சொல்வது.

மணிமயி *லுயரிய* மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி வொண் *செய்யோனும்* (புறம். 56)

(1ஆ) மற்றொன்று, கொடிவழியாக, கடவுளை உணர்த்துவது.

சேவலங் கொடியோன் (குறு.க.வா)
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளின்
நிவந்தோங் குயர் கொடிச் சேவலோய் (பரி.3)

(2) போட்டிக்கொடிகள் மற்றொரு வகையாகும். கல்வி-கேள்விகளில் சிறந்து நிற்பவரை இனங்காட்டும் முகமாக அமையும் போட்டிகளைக் குறிக்க இவை அமைவதைப் பட்டினப்பாலை, பரிபாடல் (9.72-8) போன்றன காட்டும்.

பல் கேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும் (பட். 169–171)

(3) வணிக அல்லது விளம்பரக் கொடிகள் எனப் பொதுமையாக அணுகுதற்கு முழு நிலையில் இடமில்லாத போதும், ஒரு குறிப்பிட்ட பொருளின் வியாபாரம் கொடிச் சார்பில் தரப்படுவது சிந்தித்தற்குரியது.

..... நறவு நொடைக் கொடியோடு (பட். 180)

..... கள்ளின் களி நவில் கொடியொடு..... (மதுரைக். 372)

(4) விழவுக் கொடி என்பதனைச் 'சாறயர்ந்தெடுத்த உருவப் பல்கொடி' (மதுரைக். 366) என்பதில் உணர முடிவதுடன், அதன் பன்மையும் வேறுபடுத்திப் பெறப்பட முடிகிறது.

(5) அரசக் கொடி, மேலும் மிகப் பல்வேறு வகையாக வகைபெறவும், பல்வகைச் சார்புடன் நோக்கப் பெறவும் இடந்தருகின்றது. பல்வேறு இடங்களில், பல்வேறு சூழல்களில் பல்வேறு நோக்கங்களில் அமைகின்ற இவை வண்ணம், வடிவம், உருவு, அளவு ஆகியவற்றால் வேறுபட்டனவா, வேறுபடாதனவா? எல்லா அரசர்க்கும் கொடி உண்டா? தமிழ் அரசர் கொடிகள் பற்றி என்ன குறிப்புகள் தெரிகின்றன? பகையரசர் கொடிகள் பற்றிய குறிப்பு உண்டா? இவற்றை இனங்காட்டும் அல்லது வேறுபடுத்தும் கூறுகள் எவை? ஒரு அரசனைச் சார்ந்த நகரில் காணப்படும் கொடிகள் அனைத்தும் அரசக் கொடிகள் எனக் கொள்ளத் தக்கனவா? அல்லது மக்கட் சார்புக் கொடிகள், அரசச் சார்புக் கொடிகள் என ஒரு நகரின் கொடிகளை வேறுபடுத்த முடியுமா? கொடிகள் காணப்படும் இடத்தின் அடிப்படையில், அரசக் கொடிகளா அன்றா எனக் கணிக்க இயலுமா? ஒரு குறிப்பிட்ட அரசனை அல்லது அரசர் குடியைச் சார்ந்த இலக்கியம் தருவதனைத்தும் அவ்வரசச் சார்புக்கொடி தான் என நிறுவலாமா? அதாவது மதுரைக் காஞ்சி பாண்டியன் கொடியை (கொடிகளை)யும், பட்டினப்பாலை சோழர் கொடியையும், பதிற்றுப்பத்து சேரர் கொடியையும் தரும் என்ற கருதுகோள் ஏற்புடையதா? - என்பன போன்று பல கேள்விகள் எழ வாய்ப்புண்டு.

## கொடிப் பன்மை

மதுரைக் காஞ்சியும், பட்டினப்பாலையும், ஒரு நகரில் ஒரு அரசனின்/அரசின் கீழுள்ள நகரில் - பல கொடிகள் அமையும் என்பதைப் புலப்படுத்துகின்றன.

......கொடியோடு
*பிற பிறவு* நனி விரைஇப்
பல்வே றுருவிற் பதாகை (பட். 180–182)

.......கொடியொடு நன்பல
*பல்வேறு குழூஉக்கொடி பதாகை* நிலைஇ (மதுரைக். 372–73)

‘பிற’, ‘பல்வேறுரு’ என்ற சொற்களால் வகைப்பாடு குறிப்பாக உணர்த்தப் பெற்ற போதும், இவற்றில் காணப்பட்ட உரு இன்னது எனத் தெரியாததால், இவற்றைத் தனிப்படுத்தி இனங்காண இயலவில்லை.

**இடப் பன்மை**

கொடிகள் பறக்கவிடப்படும் இடங்களாகப் பல தரப்படுகின்றன. அசையும் பொருள் மீதும் அசையாப் பொருள் மீதும் நிலத்திலும் நீரிலும் உயர்த்துதல் காணப்படுகின்றது. இவை எல்லாமே அரசச் சார்பின எனலாகாது; எனினும் பெரும்பான்மை அச்சார்பினவாகப் புலப்படுகின்றன.

நீரின் மீதமையும் கப்பலில் (நாவாய்) பறக்கவிடப் பெற்ற கொடி (பட். 172-75; அகம். 110; மதுரைக். 75-84) உள்நாட்டுக் கொடியா, வெளிநாட்டுக் கொடியா, வணிகக் கொடியா, அரசக் கொடியா என்பது, இலக்கியமல்லாத பிற சான்றுகள் வழி தெளியப்படக்கூடும்.

மறுகு (நற். 227, அகம். 149), மாடம் (பதிற். 47), நியமம் (நற். 45.4) போன்ற பலவிடங்களில் அமையும் கொடிகளும் இவ்வாறே பிறதுறை சார்ந்து ஆய்ந்து முடிவிற்கு வரவேண்டியனவாகும்.

அரசச் சார்பினவாக, தேர், யானை, பாசறை, நகர மதில் போன்றவற்றின் மீதமையும் கொடிகள் ஏற்கப்படலாம்.

கொடித்திண் தேர் (பரி. 11) நெடுங்கொடிய தேர் (பதிற். 34) என வருவது பொதுமையுடையதாக அமையினும், கொடித்தேரான் வையைக்கியல்பு (பரி.16), கொய்யுளை மான்றோர்க் கொடித் தேரான் கூடல் (பரி. 17), கொய் சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன் (அகம். 36, 57) போன்றன அரசச் சார்பில் தேர்க் கொடிகள் அமைந்ததைக் காட்டுகின்றன.

மேலும் தமிழ்ப் பெருவேந்தரன்றி, கொடிச்சார்புடன் சங்க இலக்கியத்தில் பெயர் குறிப்பிடப்படும் மூன்று வேறு அரசர்கள்,

தேர்க்கொடியுடனேயே குறிக்கப்படுவது சுட்டத்தக்கது. நன்னன், கோசர், மோரியர் ஆகியோர் இவ்வாறு தரப்படுகின்றனர்.

**கொடித் தேர்**
**பெலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென (அகம். 396)**

**வெல்கொடித் துனைகாலன் புனைதேர் கோசர் (அகம். 251)**

**விண்பொரு நெடுங்குடைக் கொடித் தேர் மோரியர்**
**(புறம். 175)**

ஆகியன அக்குறிப்புகள்.

யானையின் மீதெடுக்கப்பட்ட கொடிகள், தேர் போன்றே, போர்ச் சூழல் கொண்டமைவது தென்படுவதால் அரசச் சார்பினவாக உணரத் தக்கன.

**கொடி நுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து (பதிற். 52)**
**வென்றெழு கொடியொடு வேழஞ் சென்று புக (நெடுநல். 87)**
**கொல்களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும் (புறம். 9)**
**அரசர், யானை கொண்ட துகிற்கொடி போல (அகம். 111)**

இவற்றில் வரும் கொல்களிறு, வென்றெழு கொடி, அரசர் யானை போன்றன மேற்படி கருத்திற்கு அரணாகின்றன. மேலும் அரசனின் படை பற்றிப் பேசுமிடத்தும் கொடி ஏந்திய களிறாலது அமைந்தது தரப்பெறுகின்றது (புறம். 38. 1-4).

பாசறையின் கொடி பற்றிய அரிய வரவே அமைகின்றது.[10]

**பகைபெறா மையிற் றெய்வஞ் செப்ப**
**ஆரிறை யஞ்சா வெருவரு கட்டூர்ப்**
**பல்கொடி நுடங்கு முன்பிற்..... (பதிற். 82.1-3)**

முன்சுட்டிய, நகரத்தில் அமையும் பல்கொடிகட்கு வேறாக நகர வாயிலில், கோட்டை மதிலில் அமையும் கொடி பற்றிய செய்தி அமைகின்றது.

நகரம் கொடியுடையதாகச் சுட்டப்படும் சூழலில் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ அரசச் சார்பு புலப்படுகின்றது. சோழனின் அம்பர் நகர்,

---

10. ஆர் இறை அஞ்சாக் கட்டூரென்றது வீரர் அரிதாக
இறுத்தலை யஞ்சாத பாசறை யென்றவாறு
- பதிற்றுப்பத்து, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1957, ப. 219 (உரை). கழகப் பதிப்பின் (1968) உரை (ப.393), இதனை, பாசறையின்கண் காணப்பெறும் களிற்றுக் கொடிகளாக உணர உதவுகின்றது.

**ஏந்துகோட் டியானை இசைவெம் கிள்ளி**
**வம்பணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த......** **(நற். 141.9-10)**

எனவும், சேரனின் வஞ்சி நகர்,

கடும்பி னடுகல் நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவ னொன்றோ (புறம். 32.1-2)

எனவும், பாண்டியனின் கூடல் நகர்

**மீளிவேற் றானையர் புகுதந்தார்**
**நீளுயர் கூடல்** நெடுங்கொடி யெழவே (கலி. 31.24-25)

எனவும் தரப்படுகின்றன. பிற சில நகரங்களும் இவ்வாறு அமைக்கப்பட்டு குறிப்பிட்ட அரசச் சார்பு காட்டுகின்றன.[11]

இவற்றின் விரிவு அல்லது விளக்கமாகவே மதில் (ஏந்துகொடி யிறைப் புரிசை - புறம். 17.27), எயில் (தண்ணடை தழீஇய கொடி நுடங் காரெயில் - அகம். 84.14), அதில் அமையும் 'நாட்கொடி' (எழுவிட்டமைந்த திண்ணிலைக் கதவின் அரைம ணிஞ்சி நாட்கொடி நுடங்கும், புறம். 341.4-5) என்பன அமைவதாகக் கருதலாம். நிலத்தில் அமையும் தானை கொடியேற்றிய அரிய குறிப்பமைவது (புறம். 314.5-6) சுட்டத்தக்கது.

## நோக்க ஒருமை

அரசச் சார்பும் போர்ச் சூழலும் 'வெற்றி' எனும் ஒரே நோக்கை, அடைச் சேர்க்கை மூலம் கொடியில் உணர்த்துவது தனித்துச் சிந்தித்தற்குரியது. வெல்கொடி (ஐங். 429) என எளிமையாகவும், விசய வெண்கொடி (புறம். 362), வென்றெழு கொடி (நெடுநல். 87), விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு (முல்லை. 89) என்பன போன்றும் இது பெருகி அமையும். பாசறையில் வெற்றிக் கொடி (அகம். 354), அரண் மீதமையும் வெல்கொடி (ஐங். 429), தேரில் அக்கொடி அமைதல் (அகம். 251), யானையின் மீது வெற்றிக் கொடி (பதிற். 69.1), படை ஏந்திய அத்தகு கொடி (பதிற். 67.5) எனப் பலவிடத்து இது அமைகின்றது.

கொடியெடுத்தல் என்பதே வெற்றியைக் குறித்துவிடுதலை 'வென்று கொடி யெடுத்தனன் வேந்தனும்' (அகம். 354) என்பது

11. படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காட் டாங்கண். நற்.227.

காட்டுவது போன்று கொடியறுத்து பகைவரைத் தோல்வியுறச் செய்தல் பரிபாடலில் 'கொடியறுபிறுபு' (2.38) என்று காண்பிக்கப்படுகிறது.

## மூவேந்தர் கொடிகள்

போந்தை, வேம்பே, ஆர் எனத் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் (புறம். 338) குறிப்பாக மூவேந்தராகிய சேர சோழ பாண்டியரை இணைத்துத் தருகின்றன. அன்றியும் புறநானூறு 'கடந்தடுதானை மூவிரும்' (110) எனத் தருவதனைக் கொளு 'மூவேந்தர்' எனச் சுட்டுகிறது. இம் மூவேந்தராகிய தமிழ் மன்னருக்கு உரிய கொடிகள் பற்றிச் சிந்தித்தல் இங்குத் தேவையாக அமைகின்றது.

சேரனுக்குக் கொடியுள்ளமை பற்றிய குறிப்புகள் ஒப்பீட்டு நோக்கில் பிற இருவரினும் மிகுதியாக அமைகின்றது. பதிற்றுப்பத்து பல குறிப்புத் தருவது இதற்குக்காரணம்.

**கொடித் தேர்ப் பொறைய (பதிற். 73.15)**

**குடவர் கோவே கொடித்தே ரண்ணல் (பதிற். 55.9)**

**வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்**
**குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்கு**
**(பதிற். 5-ஆம் பதி.)**

இவ்வாறே பாண்டியனுக்கும்,

**கொடி நுடங்கு யானை நெடுமா வளவன் (புறம். 228.10)**

**கொற்ற நீள்குடைக் கொடித் தேர்ச் செழியன் (புறம். 24.23)**

**வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்**
**களிறணி வெல்கொடி........ (அகம். 162.21-22)**

எனக் குறிப்புகள் உள. சோழனுக்கு, ஊர்ச் சார்புடன், முன் சுட்டிய வண்ணம் (நற். 227), கொடி தரப்படுகின்றது.

சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை, இவ்வாறு திரட்டப்பெற்ற குறிப்புகளெதிலும் சேர, சோழ, பாண்டியர் கொடிகள், எத்தகைய வரைவுரு உடையனவாக இருந்தன எனத் தரப்படவில்லை.

## கொடியும் பொறியும்

சங்க இலக்கியங்களில் வில், உழுவை, கயல் குறித்து ஏழு இடங்களில் வருகை அமைகின்றது.[12] இவை 'கொடி' என்ற குறிப்புடன் வரவில்லை. பொறி எனப் பெயராகவும், வினையாகவும் வரும் ஆட்சிச் சார்பே இவற்றில் வெளிப்படுகின்றன.

தமிழ் லெக்சிகன் 'பொறி' என்பதற்கு 32 பொருண்மைகள் தந்தபோதும், அதில் 'கொடி' என்று முதன்மையாகவோ சார்த்தியோ காணத்தக்க பொருள் அமைந்திலது.

கொடியில் வரையப்பெற்ற உருவாக அன்றி, கோட்டை, மலை போன்றவற்றில் பொறிக்கப்பட்டதாகவே இது அமைந்தது.

*கொடுவரிக்*
*கோண்மாக்* குயின்ற சேண்விளங்கு தொடு*பொறி*
**நெடுநீர்க்** ***கெண்டை*****யொடு** ***பொறித்த*** **(புறம். 58)**

**அமைவர லருவி யிமையம்** ***விற் பொறித்து*** **(பதிற்.பதி. 4)**

பொறிக்கப்பெற்ற சின்னமாக அமைந்த இவை கொடியின் சின்னமாக வளர்ந்து உருப்பெற்றமையைச் சிலப்பதிகாரம் வழி உணரலாம். வல்வில் பொறி (29.25), விடர்ச் சிலை பொறித்த (28.136), விற்புலி கயல் பொறித்த நாள் (29.1) என்று பழக்கமான பெயர் - வினை நிலை அமைந்து சங்க இலக்கியக் குறிப்பின் தொடர்ச்சி காட்டுகின்றன; அத்துடன் அமையாது கொடுவரியொற்றி (5.98) கயலெழுதிய இமய நெற்றி (17.1), மலை வில் பூட்டிய வானவர் தோன்றல் (25.2), செழு விற் கயற் புலி..... வரைக (25.171) எனப் பலவேறு வினைச் சொற்கள் வந்து எழுதுதல் - வரைதல் போன்றவற்றால் கல்-மலை தவிர பிறசிலவற்றிலும் இவை அமைந்திருக்கலமோ எனும் எண்ணத்தை எழுப்புகின்றன.

மேலும் சிலப்பதிகாரம் தான், இம்முச்சின்னச் சார்போடு மூவேந்தர் கொடிகளை முதன் முதல் காட்டியது.

**உழைப்*புலி கொடித்தே* ரூரவோன் கொற்றமொடு (10.142)**

12. புறம். 29, 33, 39, 174; பதிற்.பதி.4; அகம். 396; கலி.104. கலித்தொகை மூன்றையும் இணைத்துத் தருகிறது. வில் நான்கு முறையும், உழுவை நான்கு முறையும், கெண்டை இருமுறையும் வருகின்றன.

வானவர் கோ னாரம் வயங்கிய தோட் பஞ்சவன்றன்
*மீனக் கொடி* பாடும் பாடலே பாடல் (29.27)

சேயுயர் *விற்கொடிச்* செங்கோல் வேந்தே (26.138)

இதனைச் சங்க இலக்கிய - சிலப்பதிகாரக் கருத்து வேறுபடுகின்றமை அல்லது வளர்ச்சி எனலாம். மேலும் பொறிச் சின்னங்களாக அமைந்தனவே நாளடைவில் கொடிச் சின்னமாயின என்ற கருத்தும் நிறுவப்படலாம்.

## பொறியும் பொருளும்

கொடிச் சின்னத்திற்கு அடிப்படையாக அமைந்த இம் மேற்படி பொறிகள், ஆழ்பொருள் நிலையில், குறியீட்டு அணுகுமுறையில் சிந்திக்கத்தக்கன.

> **தமிழ் அரசர்க்குக் காட்டப் பெறும் பொறி (இலச்சினை)- கொடிச் சின்னம் - என்பனவும் வெறும் அடையாள மாகவன்றி, குறியீடுகளாகக் கருதி அணுகத்தக்கன.... பல பரிமாண அணுகுமுறையில் கொடிச் சின்னங்களின் பொருள் மன்னர்க்கும் இறைவர்க்கும் தேரப்படக் கூடும்.......இப் பல்வகையான கொடியில் குறிபெறும் பொருள் உயிர்ப் பொருளாக, உயிரில் பொருளாக, விலங்காக, பறவையாக, நீர் வாழ்வினதாக, செயற்கைப் பொருளாக அமைதற்கேற்பப் பன்முகமான நுட்பமான கருத்து விளக்கங்கள் கிடைக்கும் எனவும் எண்ணலாம்.[13]**

இன்ன குறிக்கு இன்ன அடிப்படை எனவும், இன்னின்ன பொருண்மை எனவும் தமிழிலக்கிய பண்பாட்டுச் செய்திகளை

---

13. குறியீட்டியல் அணுகுமுறை, அன்னி தாமசு - திறனாய்வு அணுகுமுறைகள், (பதி.) கு. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989, ப. 252.

பார்க்க: 1. தமிழர் கொடிகள் ஆய்தல்: முதல் இயல்.

2. Tamil's Flags - Types and Symbols, S.V. Subramanian & Annie Thomas, ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள், மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1999, பக். 575-587.

அடிப்படையாக்கி உருவாக்கும் அகராதி ஏற்பட்ட பின்பு,[14] அதனடிப்படையில் வில், கயல், உழுவை ஆகியவற்றிற்குத் தெளிவான விளக்கம் பெறப்படலாம்.

இக்குறிகள் வானியல் சார்ந்து நோக்கப்படல் கூடும் எனவும் எண்ணம் எழுகின்றது. தனுசு, மீனம், சிம்மம் (Leo-Leopard என இணைக்கலாமா?) எனும் இராசிகள் இவ்வெண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

புராணச் சார்புடன், திருமாலின் 'அவதாரங்கள்' சில (கோதண்டராமன், மச்சம், நரசிம்மம்)வற்றைச் சார்த்தியும் பார்க்க வாய்ப்பமையலாம். மன்னனைப் 'பூவை நிலையில்' திருமாலுடன் சார்த்துதலும் இதற்கு உதவலாம்.

மீனக் கொடியினனாக மன்மதன் அமைவதும், பாண்டியனின் மீன் சின்னமும் இணைத்துப் பார்க்கப்பெறலாம். இவ்வாறு பிறவற்றிற்குமமையுமா எனக் கணிக்கலாம்.

இனக்குழுக் குறியீடாக உருவாகியிருக்கக்கூடிய இவை (Totem) உடலும் வலிமையும் (புலி), உயிரும் ஆன்மாவும் (மீன்), செயலும் கலையும் (வில்) எனவோ, உடல், உளம், பொருள் (Physical, Mental, Material) எனவோ அணுகப்பட இடம் தரலாம் என்பதைப் பிறமொழியிலமையும் இத்தகு அணுகுதல்கள் உணர்த்துகின்றன.[15]

**நிறைவுரை**

கொடிகள் தொடர்பான ஆய்வு விரிந்து பரந்ததாகவும் ஆழமானதாகவும் அமைகின்றது. இலக்கியச் சான்றுகளுடன் நின்று விடாமல், பிறவகைத் தரவுகளும் பெற்று இணைத்துக் காணும்போதே இது முழுமையடைய இயலும் மேலும் இனக்குழுக் குறியீட்டடிப்படையில் இவற்றின் இயைபை ஆய,

---

14. Dictionary of Symbols, Tom Chetwynd, Granda Publishing Ltd. London, 1982.
A Dictionary of Symbols, Translated from the Spanish by Jack Sage, Philosophical Library, New York, 1962.
Dictionary of Symbols and Imagery, Ad de Vries, North Holland Publishing Company, London, 1974.
என நூல்களமைவது இவ்வெண்ணத்தை ஏற்படுத்துகின்றது.

15. மேற்படி.

மானுடவியல், சமூகவியல் துறைச் செய்திகளின் சார்வும் தேவையாக அமைகின்றன. உளவியல் சார்த்தியும் இதனைக் காணும் போது குறியீடுகள் தெளிவுபெறும் எனக் கருதலாம்.

# கடவுளர் கொடிகள்

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமாகிய சங்க இலக்கியத்தில் 'கொடி' தொடர்பாக வரும் 140 குறிப்புகளில், 48 கடவுட்கொடி தொடர்பாக அமைகின்றன. இவை முறையே திருமால் (18), முருகன் (15), பலராமன் (6), சிவன் (4), மன்மதன் (3), இந்திரன் (1), வழிபாட்டுக் கொடி (பொது) (1) என்ற நிலையில் அமைகின்றன. எண்ணிக்கை மிகுதி பற்றி மாயோன், சேயோன் ஆகியோரின் முதன்மை வெளிப்படுகிறது என்றோ, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியன இம் மிகுதிக்குக் களம் வழங்குவதால் அவை கடவுட்கொடி பற்றிய கல்வியில் முதன்மைப்படுகின்றன என்றோ கூறலாம்.

சங்க இலக்கியக் கொடிக் குறிப்புகளனைத்தையும் கணிக்கும்போது கடவுட் கொடிக்கும் பிற கொடிகளனைத்திற்கும் இடையே குறிப்பிட்ட - பெருத்த வேறுபாடு அமைகின்றது. கடவுட்கொடிகளில் மட்டுமே உருவப்படம் (design) வரையப் பெற்றிருந்தது என்பது தெரிகிறது. பிற கொடிகளில் இக்குறிப்பு தரப்பெறவில்லை. கொடிகளிடையேயுள்ள வேறுபாட்டை வண்ணம், வடிவம், அளவு என்பனவற்றை விட அவற்றில் வரையப்பெற்ற அடையாளம்/உருவப்படம் இனங்காணச் செய்யும் என்ற பொதுவான எண்ணம் இங்கு மாறுபடுவதாகத் தெரிகிறது.

## கடவுட் கொடிகள்

தொல்காப்பியம், பொருளதிகாரத்தின் புறத்திணையியலில், "கொடி நிலை........... கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொல். பொருள். புறம். 27) என்று கூறுவதில் கடவுட்கொடி பற்றிய சிந்தனை தென்படுவதாகக் கொள்ளலாம். கடவுள் வாழ்த்தில் அவ்வக் கடவுட்குரிய கொடி பற்றிய சுட்டும் அமையும் எனவோ, கடவுட் கொடியை வாழ்த்திப் பாடும் பாடல் அமையும் எனவோ இதனைக் கருதலாம்.

சங்க இலக்கியக் கடவுட் கொடிக் குறிப்புகளில், இவ் வாழ்த்தியல் சார்ந்த நிலை அருகி வெளிப்படக் காணலாம்; கடவுள் வாழ்த்தாக வரும் பாடலில் கொடிக் குறிப்பு அமையும் முதல்வகையும், மக்களால் கடவுட்கொடி வாழ்த்தப்பெறும் இரண்டாம் வகையும் இவற்றில் அமைகின்றன. கடவுளர்க்கு எடுக்கப்பெறும் விழாவில் அவர் கொடி குறிக்கப்பெறும் பாங்கும் உண்டு.

குறுந்தொகையின் கடவுள் வாழ்த்து 'சேவலங் கொடியோன்' என முருகனின் சேவற் கொடியைக் குறிப்பிடுகிறது. புறநானூற்றின் கடவுள் வாழ்த்து சிவபிரானின் ஊர்தியான காளையே, அவன் கொடிச் சின்னமாகவும் அமைந்ததை,

**ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப**

என்று கூறுகின்றது. பரிபாடல், திருமாலுக்கு அமைக்கும் வாழ்த்துப் பாவில் 'சேவலங் கொடியோய்' எனவும் 'புள்ளின் கொடியவை' எனவும் அவனது கருடக் கொடியைச் சுட்டுவதுடன் (க.வா. 11.57),

**சேயுயர் பணைமிசை யெழில் வேழ மேந்திய**
**வாய் வாங்கும் வளை நஞ்சில் ஒருகுழை யொருவனை**
**(க..வா. 4–5)**

எனப் பலராமனின் யானைக் கொடியையும் (வேழம்) சுட்டுகின்றது. இவ்வரிகளில் 'வேழம்' என்பதற்கு 'மேழி' என்பதும் பாடமாக அமைவதால், கலப்பைக் கொடி (நாஞ்சில்) எனவும் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

திருமுருகாற்றுப்படை, முருகனின் கொடி வாழ்த்தப்படுவதைத் தருகின்றது. கோழிச் சின்னம் (சேவல்) பொறித்த வெற்றிக் கொடியை 'வாழ்க' எனச் சூரர மகளிர் பிற பலருடன் பாடி, சோலையில் ஆடுகின்றனர்.

**கோழி யோங்கிய வென்றடு விறற் கொடி**
**வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்**
**சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்**
**சூரர மகளிர் ஆடும் சோலை (38–41)**

பட்டினப்பாலையும், திருமுருகாற்றுப்படையும் முருகனுக்கு எடுக்கப்பெற்ற விழாவினைக் கொடி சார்த்தியும், கொடி வாழ்த்துச்

சார்த்தியும் காட்டுகின்றன. இவற்றிலிருந்து தொல்காப்பியம் கூறும் "கொடி நிலை" என்பது முருகனுக்கு மட்டும் உரியதுதானோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

> ஓங்குவரை மருங்கின் நுண்தாது உறைக்கும்
> காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
> செறிதொடி முன்கை கூப்பிச் *செவ்வேள்*
> வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
> குழலகவ யாழ்முரல
> *விழவறா* வியலாவணத்து
> மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
> மலரணி வாயிற் பலர் தொழு *கொடியும்* (152–160)

என்ற பட்டினப்பாலைப் பகுதி செவ்வேளாகிய முருகனுக்கு, காந்தள் மலர்போலும் கரங்களைக் கூப்பி மகளிர் வெறியாட, இசைக் கருவிகளொலிக்க, விழா எடுக்கும் களத்தில் ஏற்றப் பெற்ற கடவுட் கொடியைப் பலர் தொழுவதைக் காட்டுகின்றது. இத்தகு விழா ஊர்தோறும் மறியறுத்துக் கொடியேற்றிக் கொண்டாடப்பட்டதை,

> சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
> *வாரணக் கொடி*யொடு வயிற்பட நிறீஇ
> ஊரூர் கொண்ட சீர்கெழு *விழ*வினும்
> ஆர்வல ரேத்த மேவரு நிலையினும் (218–21)

என முருகாற்றுப்படை தருகின்றது. மேலே சுட்டிய பட்டினப்பாலை அடிகளில் என்ன அடையாளமிட்ட கொடி என்ற சுட்டுதல் இல்லாதிருக்க, இங்கு, முருகாற்றுப்பட்டையில், வாரணக் கொடி என (கோழி) வெளிப்படுகிறது. (வாரணம் யானையையும் குறிக்கலாம்.) அகநானூறு, முருகனின் திருப்பரங்குன்றத்தில், விழவுக்கொடியாக மயில் அமைந்ததைத் தருவதும் இங்கு விழா நிலையில் சுட்டத்தக்கது:

> (நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
> கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது)
> பல்பொறி *மஞ்ஞை* வெல்கொடி யுயரிய
> ஓடியா *விழ*வின் நெடியோன் குன்றத்து (அகம். 149)

இக்குறிப்புகளும், கடவுளர் சார்ந்து வரும் பிற கொடிக் குறிப்புகளும் பல்வகையில் அணுகத்தக்கன.

கடவுளர் அனைவருக்கும் கொடி உண்டா? ஒவ்வொரு கடவுளர்க்கும் அமையும் கொடி என்ன? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றுக்கு மேல் கொடிகள் உளவா? அதன் காரணமென்ன? கடவுட் கொடியுருவம் ஒரே சொல்லால்தான் மீண்டும் மீண்டும் குறிக்கப்படுகின்றனவா அல்லது ஒவ்வொரிடத்தும் பொருள் வேறுபடாத வெவ்வேறு சொல்லால் (பரியாயச் சொல்) தரப்படுகின்றனவா? இச்சொல் வேறுபாட்டிற்கு ஏதேனும் காரணம் உண்டா? இதனால் கருத்துக் குழப்பம்/தெளிவின்மை ஏற்படுகிறதா? கொடியுருவாக அமைவனவற்றின் தேர்ச்சி அடிப்படை, உட்பொருள் அல்லது குறியீட்டு நிலை என்ன என்ற தெளிவு தரப்படுகிறதா? மன்னர் கொடிக்கும் கடவுளர் கொடிக்கும் ஏதேனும் ஒற்றுமை-வேற்றுமை உண்டா? சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை எந்தக் கடவுட் கொடி மிகுதியாகப் பேசப்படுகிறது? ஏன்? கொடி என்ற சொல்லாலேயே அனைத்தும் குறிக்கப்படுகின்றனவா அல்லது பரியாயச் சொல்லாலா அல்லது சூழ்நிலையால் விளக்கம் பெறுதலா அமைகின்றன? கொடிகளை வைத்துக் கடவுளரிடையே முதன்மை-துணைமை-சார்பு போன்ற உயர்-தாழ்வுப் படிநிலைகள் புலப்படக்கூடுமா? கடவுட் கொடிகள் எங்கெல்லாம் அமைகின்றன/ பறக்கவிடப்படுகின்றன? எப்போது ஏற்றப்படுகின்றன/பறக்கவிடப்படுகின்றன? பல கடவுளர்/கடவுட் கொடிகள், பட்டியல் போல இணைத்துத் தரப்படும்போது, அவ்வைப்பு முறைக்குக் காரணம் தேர இயலுமா? ஒரு கடவுளுக்குப் பிற பல கடவுளரின் கொடிகளை ஏற்றிக் கூறப்படுதல் உண்டா? அதன் காரணம் - பொருத்தம் என்ன? எல்லாக் கடவுளர்க்கும் ஊர்தி - கொடியுருத்தொடர்பு அல்லது படைக்கலம் (ஆயுதம்) - கொடியுருத் தொடர்பு அமைகின்றதா - அமையவில்லையா? இவ் அமைப்பொருமை (pattern) அல்லது இன்மைக்கு அடிப்படை காணலாமா? கடவுளால் கொடியை இனங்காட்டல் உண்டா அல்லது கொடியால் கடவுளை இனங்காணல் அமையுமா? கடவுட் கொடி பெறும் அடைகளால் அதன் ஆக்கு பொருள், வண்ணம், அளவு, வடிவம் போன்றன விளக்கம்பெறக் கூடுமா? கொடியிலமையும் சின்னங்கள், உயிர்ப்பொருள்/உயிரிலிப் பொருள்; இயற்கை/செயற்கை; அருவம்/ உருவம்; உண்மைப் பொருள்/கற்பனைப்பொருள்; எனப் பலவாறு பகுத்துப்பார்க்கப் பெறும்போது புலப்படும் கருத்துகள் என்ன? அனைத்துக் கொடிகளும் வெற்றிக் கொடிகளா? போன்ற பல கேள்விகள் எழுகின்றன. சங்க இலக்கியக் குறிப்புகள் வழி இவற்றில் சிலவற்றிற்குத் தெளிவு காண இயலும்.

## கடவுட் கொடிச் செய்திகள்

1) சிவபிரானுக்குக் காளை கொடியாக அமைகிறது. அதுவே அவரது ஊர்தியாகவும் (வாகனம்) குறிக்கப்படுகின்றது (புறம்.க.வா.) கொடி என்ற சொல் இன்றி, 'உயர்த்தல்' என்பதாலும் கொடி சுட்டப்படுதலைப் பிறவிடத்துக் காணலாம் (புறம். 56). அங்கு, 'ஏற்று வலன் உயரிய' என்பதால் ஏற்றை - காளையை, வெற்றிக்கு அடையாளமான கொடியாகச் சிவபெருமான் உயர்த்தியது வெளிப்படுகின்றது.

2) திருமாலுக்குக் கொடியாக அமைவது கருடன். இது புள் எனவும் (பரி.க.வா), உவணம் (பரி. 2.60) எனவும், சேவல் (பரி. 4.36) எனவும், பாப்புப்பகை எனவும் (பரி. 13.38) சுட்டப்படுகிறது.

**மண்ணுறு திருமணி புரையு மேனி**
**விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும் (புறம். 56)**

மேலும், பல கொடிகள் இவருக்கமைவதாகப் பரிபாடலில் தரப்படுகின்றது. கருடனுடன், பலராமனுக்கு உரிய பனை, நாஞ்சில், யானை ஆகிய அடையாளமிட்ட கொடிகளும் இவற்கு உரியதாக அமைக்கப்படுகின்றன.

சேவலோங் குயர்கொடி யோயே;
சேவலோங் குயர்கொடி;
நின்னொன றுயர்கொடி *பனை:*
நின்னொன் றுயர்கொடி *நாஞ்சில்,*
நின்னொன் றுயர்கொடி *யானை,*
*நின் ஒன்றா வுயர்கொடி யொன்றின்று*
விடமுடை யரவினுட லுயிருருங் *குவணம்.....*
**(பரிபாடல் 4.36-42)**

என்றதன் இறுதிப் பகுதி, எல்லா (இறைவர்)க் கொடிகளும் மாலுக்கு ஏற்புடையன எனும் எண்ணத்தையும் ஏற்படுத்துக்கின்றது. உவணம் இவருக்கு ஊர்தியாகவும் அமைகின்றது (பரி. 3.15).

3) முருகனுக்குக் கோழி (சேவல்)யும், மயிலும் (மஞ்ஞை) என இருகொடி நிலைகள் அமைகின்றன. இவற்றுள் மயில் ஊர்தியாகவும் அமைதல் கூறப்படுகின்றது (புறம். 56).

சேவலங் கொடியோன் காப்ப (குறு.க.வா)

பல்பொறி மஞ்ஞை வெல் கொடி யுயரிய
ஓடியா விழவின் நெடியோன் குன்றத்து (அகம். 149)

திருமுருகாற்றுப்படை, சேவற் கொடியை, 'வாரணக்கொடி' (219) எனவும் 'ஆண் (மாண்)டலைக் கொடி' (227) எனவும் வேறு பெயர்களிலும் குறிப்பிடுகிறது. 'ஆண்டலை' என்பது வேறு சின்னம் எனவும் கருத வாய்ப்புண்டு.[1] மேலும், 'தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங் கொடியன் நெடியன் தொடியணி தோளன்' (முருகு. 210-211) என்பதால், தகர் (ஆடு) என்பதை ஊர்தியாக மஞ்ஞையுடன் கொள்வதுபோல, கொடியாகவும் கொள்ள வைப்பு முறை இடந்தருவதாகத் தோன்றுகிறது. மேலும், தகர் மட்டுமன்றி யானையும் இவன் ஊர்தி ஆதலாலும் வாரணம் என்பது யானையையும் குறித்தலாலும் அதன் கொடிப் பொருத்தமும் சிந்தனைக்குரியது.

4) பலராமனின் கொடிகள் குறிக்கப்படுவதும் இங்கு இணைத்து நினைக்கத்தக்கது. மேற்சுட்டியபடி, திருமால் கொடிகளில் பலராமனுக்குரிய பனை, நாஞ்சில் (மேழி), யானை (வேழம்) என்பன இணைகின்றன. நாஞ்சில் பலராமனின் ஆயுதமாகவும், கொடியடையாளமாகவும் அமைவது வேறுபாடு.

கடல் வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடியோனும் (புறம். 56)

வேழமும், மேழியும், பாடவேறுபாட்டு நிலையில், கொடிக்குறிப்புப் பெறுவது முன்பு சுட்டப்பெற்றது (பரிபாடல். க.வா.). அவ்வாறே திருமாலின் கொடிகளாக, பனை, நாஞ்சில், யானை என்பன சுட்டப்படல் (பரி.4), பலராமன் சார்பு குறித்து என்பதும் மீண்டும் நினைவு கொளற்குரியது.

மேற்கண்ட இறைவர் கொடிகட்கும் பலராமன் கொடிக்கும் அடிப்படை வேறுபாடு அமைகின்றது. அவர்க்குப் பறவை அல்லது விலங்கு அடையாளம் கொடியில் அமைய, இவற்கே பனை எனத் தாவரமும், நாஞ்சில் அல்லது மேழி எனச் செயற்கைப் பொருளும் கொடியடையாளம் ஆகின்றன.

---

1. தற்போது, கர்நாடகத்திலுள்ள சுப்ரமண்யாவின் முருகன் கோயிலில் கொடிச் சின்னமாக இருதலைச் சேவல் அமைந்துள்ளது, எல்லாக் கடவுள்ர்க்கும் இவ்வாறு தற்போதைய நிலை சார்ந்தும் ஆயப்பெறலாம் எனும் எண்ணத்தை எழுப்புகின்றது.

தொல்காப்பியம் (எழுத்து, உயிர்மயங்கியல். 82-83) ஐகார உயிரீற்றின் முன் கொடி எனும் சொல் வந்து புணர்வதைத் தரும்போது, உரையாசிரியர் முன் நூற்பாவை நோக்கி, 'பனைக்கொடி' என்பதைத் தருவது இங்குப் பழமையான எண்ணம் என்ற நிலையில் இணைத்துக் கருதத்தக்கது. பலராமனின் பனைக்கொடி பற்றியே உரையாசிரியர் சுட்டியிருக்கலாம் என்பதுடன் தொல்காப்பியமும் அதனை உணர்ந்துள்ளது போலும் என எண்ணத் தோன்றுகிறது.

மேலும், சேர மன்னருக்குரிய மலரடையாளமாகப் பனம்பூ (போந்தை) அமைவது இப் பலராமனின் பனைக்கொடி என்பதுடன் தொடர்புற்று நோக்கப்படலாம். அன்றியும் சேரர் பகுதியான நாஞ்சில் நாடு என்பதும், பலராமனின் நாஞ்சில் கொடியும் இணைத்துக் கருதப்பெற வாய்ப்பாகலாம்.

5) காமன் (மன்மதன்) 'சுறாஅக் கொடியான்' (கலி. 147) எனக் காட்டப்படுகின்றான். சுறா, மீன் ஏறு எனவும் (மீனேற்றுக் கொடியோன், கலி. 26) குறிக்கப்படுகின்றது. பாண்டியன் மீனவன் எனவும் மீனை அடையாளமாகவுடையவன் எனவும் வரும் குறிப்புகளுடன் இது இணைத்துக் காணத்தக்கது.

மன்னரும் கடவுளரும் தொடர்புபடுத்தப்பட முடிதல் பலராமன், காமன் ஆகியோர் கொடிகளில் அமைவது தனித்துச் சிந்திக்கத்தக்கது.

6) இந்திரனுக்கு யானைக்கொடி கருதப்பட திருமுருகாற்றுப் படை இடம்தருகிறது. ஆயிரம் கண்களுடையவனாகவும், பல நூறு யாகங்கள் செய்தவனாகவும், நான்கு தந்தங்களுடைய (ஐராவதம் எனும் வெள்ளை) யானையை ஊர்தியாக உடையவனாகவும் இதில் இந்திரன் தரப்படுகின்றான். மாயோன், சிவன் ஆகிய இருவரும் கொடிச்சார்புடன் சுட்டப்பெற்றுத் தொடர்ச்சியாக இந்திரனின் இவ்வருணனை அமைவதால் (வரி. 155-59), **'உயர்த்த யானை எருத்தம் ஏறிய'** என்பது ஊர்தியை மட்டுமன்றிக் கொடியையும் குறித்திருக்கலாம் எனக் கொள்ள வாய்ப்புத் தருகின்றது (ஆனால், பின்னிலக்கியங்கள் 'இடி'க் கொடியையே இந்திரனுக்குத் தருகின்றன).

## இருநிலை

கடவுட் கொடிகள் இருநிலையில் தரப்பெறுகின்றன. ஒன்று, கொடியைச் சுட்டி இறைவனை உணர்த்துதல்: 'சேவலங்

கொடியோன்' (குறு.க.வா.) என முருகன் உணர்த்தப்படுதல் அது. மற்றொன்று கொடி ஒரு அடையாக வந்து கடவுளரை இனங்காட்டுவது.

வெள்ளேறு
வலம் வயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்.....
(திருமுருகு. 151-154)

இதில் சிவபிரான் உணர்த்தப்பெறுகின்றார்.

## சொல்

கடவுட் கொடிகள் அனைத்துமே, பெயர்ச்சொல்லுடன் குறிக்கப்பெறும்போது, 'கொடி' என்ற பெயரையே பெறுகின்றன. சங்க இலக்கியம் தரும் பிற பரியாயச் சொற்களான படாம், பதாகை என்பன இவற்றிற்கு வரவில்லை. இது ஏதேனும் சிறப்பு நிலையை உணர்த்த முடியுமா என்பது ஆய்தற்குரியது. அன்றியும் தமிழிலக்கியத்தின் பிற காலகட்டங்களிலும் இதே நிலைதான் அமைகிறதா என்ற தொடர் ஆய்வும் தேவை.

ஏந்திய, உயரிய ஆகிய சொற்கள் கடவுட் கொடிகள் 'கொடி' எனும் பெயர்ச்சொல் இன்றி வினைச் சூழலால் குறிப்பிடப்படுமிடத்தில் பயனாகின்றன. ஆங்கிலத்தில் (hoist) உள்ளது போல் இவை கொடிச் செயலுக்கே உரியவனா, அல்லவா எனக் கண்டு, அத்துடன் இணைத்துக் கருதத்தக்கன.

ஏற்றுவல *னுயரிய*....... (புறம். 56)

என, சிவபிரானும்,

சேயுயர் பணைமிசை யெழில் மேழி (வேழம்) *ஏந்திய*

வாய்வாங்கு வளைநாஞ்சில் ஒரு குழை ஒருவனை....
(பரி.க.வா. 4-5)

என, பலராமனும்,

மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண் செய்யோனும் (புறம். 56)

என முருகனும் தரப்படுவதில் இவ்விரு வினைச் சொல்லாட்சி அமைகின்றன.

**அடை**

இறைவர் கொடிகளும், கொடிச் சின்னங்களும் பல்வகையான அடைகள் பெறுகின்றன. காமன் கொடியோ, கொடிச் சின்னமாகிய சுறவோ அடை பெறவில்லை என்பது குறிப்பிடற்குரியது.

உயர்கொடி (பரி. 2.4(6) என்ற அடை, பன்முறையும் 'ஓங்கு உயர் கொடி' (பரி. 13), 'நிவந்தோங்குயர் கொடி' என்பனவும் (பரி. 3) திருமால் கொடிகளுக்கு மட்டுமே வருவது தனித்துக் குறிப்பிடத்தக்கது. பொலங்கொடி (பரி. 15) நீள்கொடி (முருகு. 151) புனைகொடி (பரி. 13) என்பனவும் இக் கடவுட்கே உரியன.

'சிறந்த சீர்கெழு கொடி' எனும் அடை சிவபிரானின் (காளைக்) கொடிக்கு மட்டுமே வந்தது (புறம். க.வா.).

'செருப் புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி' (முருகு. 67) எனப் போரும், அதன் வெற்றியும் கொடியொடு தொடர்புடையன என்ற நிலையில், வெற்றியைக் காட்ட கொடியெடுக்கப்படுகின்றமை தெரிகிறது. முருகனின் கொடி இச்சார்புடன் தரப்பெறுதல் சிறப்பாகச் சுட்டற்குரியது. வெல்கொடி (அகம். 145.14, முருகு. 122), வென்றிக் கொடி (பரி. 21.17), வென்றடு விறற்கொடி (முருகு. 38) என்பன வருகின்றன. 'பலர்தொழுகொடி' (பட். 160) எனும் அடை விளக்கமும் முருகனின் கொடிக்கு மட்டுமே வருகின்றது.

சின்னங்கட்கு வருகின்ற அடை அல்லது அடைகள், அதன் தன்மையை உணர்த்தவும், பெயர் சுட்டப்படாவிடத்து இன்ன சின்னம் என இனங்காண/அடையாளம் காணவும் உதவியாக அமையும்.

வால்வெள் ஏறு (புறம்.க.வா), ஆனேறு (கலி. 26), வெள்ளேறு (முருகு. 151) என எளிய அடை பெறுவது சிவபெருமான் கொடிச்சின்னம் (ஊர்தியும்). அவ்வாறே, அடல்வெந் நாஞ்சில் (புறம். 56), வாய்வாங்கும் வளை நாஞ்சில் (பரி. க.வா.) என, பலராமனைச் சுட்டுமிடத்து நாஞ்சிலுக்கு வருவன கொடியன்றி ஆயுதமாக மட்டும் இருக்கலாம். எழில் மேழி (பரி.க.வா.), பொலம்பனைக்கொடி (பரி.2.22), வானுற வோங்கிய வயங்கொளி பனைக்கொடி (கலி. 104) என பலராமனின் கொடி தரப்படுமிடத்து, பின்னிரு அடைநிலைகள், பனைக்கு முன் வரினும், கொடிக்கே அடையாகப் பொருந்தும் தோற்றம்

கொள்கின்றன. பொலம் பனைக்கொடி என்பதுடன் புள்ளணி பொலங்கொடி என்பதையும் இணைத்து நோக்கலாம்.

திருமாலுக்குரிய கொடிச் சின்னங்கள் பெறும் அடையிலும் இந்நிலை காணப்பெறுகின்றது. சிறு அடை, அல்லது ஒரு வரியிலமையும் அடைநிலை இன்றி, வருணனை போன்ற 'விளக்க அடைநிலை' கருடனுக்குக் காணப்படுகிறது.

**கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வாலெயிற்று**
**அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்**
**பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்**
**புள்..................** **(முருகு. 148-51)**

பாம்பை அழிக்கும் இந்நிலை 'விடமுடையரவினுடலு யிருருங்குவணம்' (பரி. 4.42) எனச் சுருக்கமாகவும்,

**படர் சிறைப் பன்னிறப் *பாப்புப்பகை* (யைக்**
**கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை)**
**(பரி. 3. 38-9)**

என்பதின் பாப்புப்பகை என்ற பெயராக்கத்தில் மேலும் செறிந்தும் அமைகிறது. செவ்வாயுவணம் (பரி. 2.60) எனச் சிறுஅடை நிலை உண்டு. 'பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்' (பரி. 3.17) என்பதில் புராணச் செய்தி அடையாகிறது. விண்ணுயர் புட் கொடி (புறம். 56) எனவும்,

**இறுவரை இழிதரும் பொன்மணி யருவியின்**
**நிறனொடு மாறுந்தார்ப் புள்ளுப்*பொறி* புனைகொடி**
**(பரி. 13.3)**

எனவும் வருவன, புள்ளுக்கேயன்றி, கொடிக்கும் அடை நிலையாகின்றன போலும்.

முருகனுக்குரிய கொடிகளின் சின்னங்கட்கும் அடை, வகைப்பட்டு அமைவது புலப்படுகின்றது. ஆனால் மஞ்ஞை மட்டுமே பெரும்பான்மையான இடத்து அடை பெறுகிறது; கொடிச் சின்னமாகக் கோழி, வாரணம், புள் என வருமிடம் எதுவும் அடை பெற்றில. 'பல்பொறி மஞ்ஞை' என்பது இருமுறையும் (அகம். 149; முருகு. 122), மணி நிற மஞ்ஞை (பரி. 20), மணிமயில் (புறம். 56) என்பன ஒவ்வொரு முறையும் வருகின்றன. 'புகரில் சேவலங் கொடியன்' (முருகு. 210) என்பது கொடிக்கும் சின்னத்திற்கும் ஒருங்கே பொருந்தலாம்.

குறிப்பிட்ட கடவுட் சார்போ, சின்னச் சார்போ இன்றி, ஆனால் வழிபாட்டுச் சார்புடையதாகத் 'துகிற் கொடி' என்ற அடையுடனமைவது பட்டினப்பாலையில் காணப்படுகிறது.

வருபுனற் றந்த வெண்மணற் கான்யாற்று
உருகெழு கரும்பினொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாளரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசு மெழுக்கிற்
காழூன்றிய கவிக்கிடுகின்
மோலூன்றிய துகிற்கொடியும் (பட். 161-168)

கரும்பின் பூப்போன்ற துகிற் கொடி என்பது புலப்படுகிறது. அடையாளம் இன்மையால் எக்கடவுட் கொடி என இனங்காண முடியவில்லை.

## அடை தரும் விளக்கம்

மேற்கண்ட குறிப்புகளையும், அடைகளையும் பார்க்கும்போது, ஒரு கொடியில் ஒரு சின்னமா, ஒன்றிற்கு மேற்பட்ட சின்னம் உண்டா; கொடியின் நிறம் என்ன; சின்னத்தின் நிறம் என்ன; சின்னத்தின் வடிவமைப்பின் போக்கு என்ன; கொடியின் அளவு, வடிவம் என்னென்ன; எப்போது எங்கெங்கு பறக்கவிடப்பட்டன போன்ற எண்ணங்கள் ஐயநிலையிலமையினும் முழு விளக்கமோ தெளிவோ எல்லாவற்றிற்கும் கிடைக்கின்றது எனக் கூறவியலாது.

பலராமன், 'அடல் வெந் நாஞ்சில் பனைக் கொடியோன்' (புறம். 56) எனக் கூறப்படுமிடத்து நாஞ்சில் படை எனக் கொள்வதுடன், நாஞ்சிலும் பனையும் கொடிச் சின்னம், ஒரே கொடியிலமைந்த சின்னம் எனவும் கருத வாய்ப்பு அமையலாம்.

நின்னொன் றுயர் கொடி பனை
நின்னொன் றுயர் கொடி நாஞ்சில் (பரி. 4)

எனத் தனித்தனியாகக் கூறப்படுவதாலும் இருசின்ன இணைவுக் குறிப்புகள் சங்க இலக்கியத்தில் வெளிப்படப் பிறவிடத்தெங்கும் இன்மையாலும், மேற்படிக் கருத்தை மறுக்கவும் கூடும்.

'பொலம்பனைக் கொடி' (புறம். 58) எனவும் வயங்கொளிபனைக் கொடி (கலி. 104) எனவும் வருவன,

பனைச்சின்னம் பொன்னிறமாக(Golden Yellow)வோ, ஒளிரும் (shining) தன்மையினதாகவோ அமைந்ததை உணர்த்தலாம். இதுபோல், 'புள்ளணி பொலங் கொடி' (பரி. 15) என்பது செவ்வா யுவணம் பொன்னிறமாகக் (Golden Eagle) காட்டப்பட்டதை உணர்த்தலாம். அதுபோலவே, (கரு) மலையும் (வெண்) அருவியும் போல இப் புள்ளும் அதன் கழுத்துவரியும் எழுதப் பெற்றிருக்கலாம் எனவும் உணரமுடிகிறது (பரி. 13). பல நிறம் காட்டும் விரிந்த பெரிய சிறகுகளுடன், அலகில் அல்லது கால்களில் சீறும் விடப் பாம்பைப் பற்றியதாக இவ் உவணச் சித்திரம் வரையப் பெற்றிருக்கலாமோ எனவும் சில பகுதிகளைப் பார்க்கத் தோன்றுகிறது (பரி. 13, முருகு. 148-151). முருகனின் மயில், பல வண்ணத்துடனோ, நீல (மணி) நிறமாகவோ சித்திரிக்கப்பட்டிருக்கலாம் என்பதை அடைகள் குறிப்பாகச் சுட்டினாலும், ஆடும் மயில் வடிவமா பிறிதா தரப்படுகின்றது என்பது புலப்பட்டிலது. சிவபிரானின் காளை, வெள்ளேறு எனத் தரப்படுவதால் அக்கொடிச் சின்னம் வெண்மையாதல் வேண்டும்; ஆனால் சின்னம் படுத்த காளையா, நின்ற வடிவமா என்பதோ, சின்னத்தின் பின்புலமாக அமையும் (கொடித்துணியின்) வண்ணம் என்ன என்பதோ, கொடியின் அளவு, வடிவு என்னென்ன என்பதோ, பிற கொடிகளில் போல் இங்கும் விளக்கம் பெற்றில. மேலும், கொடி, துணியால்தான் அமைந்ததா என்பதும் துகிற்கொடி (பட். 168) எனுமிடம் தவிரப் பிறவற்றில் புலப்பட்டிலது.

வழிபாடு அல்லது விழவுச் சூழல் கொடி பறக்கவிடப்பட ஏதுவாயிற்று என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. முருகனின் கொடி சுட்டப்படுமிடத்து மட்டுமே அது பலவிடங்களில் பறக்கவிடப்பட்டமை தரப்படுகிறது. இதன் பொருத்தம் ஆழ் சிந்தனைக்குரியது:

**ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்**
**வேலன் றைஇய வெறியயர் களனும்**
**காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்**
**யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினு**
**மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர**

**(முருகு. 221-227)**

என இது அமைகின்றது. மாட்சிமையுடைய கொடி எனவோ ஆண்தலைக்கொடி எனவோ இதனை விளக்கலாம்.

முன்சுட்டிய கொடிகளில், கருடனும், கோழியும் சேவல் எனவும் கருடனும் மயிலும் புள் எனவும் குறிக்கப்பட்டுள்ளதால் கருத்து மயக்கம் ஏற்படலாமெனினும் அடைகளும், வரும் சூழலும் மயக்கந் தவிர்க்க உதவுகின்றன.

## கொடியுரு - குறிப்பு

கொடியும் சின்னங்களும் குறியீட்டுப் பொருள் நிலையின; மனிதன் இனக்குழுக் குறிகளை (totem)[2] அமைத்துக்கொண்டுள்ள பாங்கின் ஒரு எதிரொளியாக - பிரதிபலிப்பாகக் கடவுளர்க்கு அவனமைக்கும் குறிகளாக இக்கொடிச் சின்னங்கள் கருதப்படக் கூடும். இந்நிலையால் அவை ஆழ்பொருள்/குறிப்பு-குறியீட்டுப் பொருள் வழங்க வாய்ப்புளது. பொதுவாகக் கொடிகள் வெற்றிக்கும் தன்னிலை நாட்டலுக்கும் குறியீடாகும்[3] என்பது தரப்படுகின்றது.

குறிப்பிட்ட கடவுளுக்குக் குறிப்பிட்ட சின்னம் ஏற்படப் புராணக் கதைக் காரணம் அமையலாம். சின்னப் பொருளின் உட்கருத்து அல்லது குறியீட்டுப் பொருண்மை தேர்ச்சிக் காரணமாகக் கூடும் என்பது குறியீடுகள் பற்றிய அகராதிகளை நோக்கத் தெரிகிறது.[4] அவற்றுள் சில, சான்று நிலையில் இங்குச் சார்த்திக் காணத்தக்கன.

திணை/நிலத்திற்குரிய கருப்பொருட்களின் பட்டியலில்..... மா, மரம், புள்...... ஆகியனவும் தொல்காப்பியத்தின்படி (பொருள்.அகத். 20) அமைகின்றன. மேற்கண்ட கொடிச் சின்னங்கள் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் அடங்குவனவாக உள்ளன. இவற்றை ஐம்பூதங்களில் சிலவற்றுடனும் இணைத்துக் காணும் நிலை குறியீட்டாய்வில் காணப்படுகிறது.

---

2. Historically speaking the flag or banner derives from totemistic insignia as found in Egypt and indeed in most countries - A Dictionary of Symbols, p.103
3. ...... the general symbolism of the banner as a sign of victory and self assertion - Ibid.
4. A Dictionary of Symbols, Translated from the Spanish by Jack Sage, Philosophical Library, New York, 1962.

   Dictionary of Symbols and Imagery, Ad de Vries, North Holland Publishing Company, London, 1974.

விலங்கு (Animal) என்பதில் மாவும் புள்ளும் இணைக்கப் படுவதும் உண்டு. விலங்குக் குறியீட்டின் தோற்றம் விலங்கு வழிபாடு, இனக்குழுக் குறியீடு என்பனவற்றுடன் மிகுந்த நெருக்கமுடையது. காட்டு விலங்கும், வீட்டு விலங்கும், அல்லது அடக்கப்பெற்ற விலங்கும் வேறுபட்ட பொருண்மை தரலாம். கீழ்நிலை விலங்கை மேனிலை விலங்கு ஆளுதல்/அடக்குதல் கீழுணர்வை மேல்வாழ்வு மேற்கொள்வதைத் தரும். மீன் போன்ற விலங்குகள் (உயிரினம்) நீரையும், தோற்றம், ஆக்கம், மறுபிறப்பு என்பனவற்றையும் சுட்ட வல்லன. ஊர்வன மண்ணுடனும், பறவைகள் காற்றுடனும், வெம்குருதி விலங்குகள் நெருப்புடனும் பொருத்தப் பெறுகின்றன. இயற்கை விலங்குகள், கற்பனை விலங்குகள் என்று பிரித்தால் பின்வகை, அருவத்தை வெளிப்படுத்தப் பயன்படும். மயக்கந்தரும் வடிவுடைய விலங்குகள் மாற்றத்தை வலியுறுத்தும். கருடன், சிங்கம் போன்றன, அழகு, போராடும் குணம் ஆகியவற்றைக் குறிக்கும். காளை என்பதும் இதில் இணையலாம். ஊர்தி, பலிவிலங்கு, கீழுயிர் என்ற நிலைகளால் இவை வெவ்வேறு தகுதி பெற வாய்ப்புண்டு என்பதும் தெரிகிறது. மேலும் விண்மீன் கூட்டங்களின் (ராசி) சார்பு பற்றிச் சில விலங்குகள் (சிம்மம், மீனம், மேஷம், ரிஷபம்....... என்பன) பிறிதொரு பரிமாண நிலையிலும் கருதப்படுகின்றன. இவற்றுட் சில தம்முட் சார்பு கொண்டும், சில முரண்பட்டும் அமைவதும் வெளிப்படுகின்றது.

கடவுட் சார்பு (கொடி) விலங்குகட்கு, மேலே கண்ட பொதுவான குறியீடுகள் பொருத்தமானதாகவோ அல்லாததாகவோ அமையலாம். சில குறியீடுகள் தனிநிலையினதாகவும் சில உலகளாவியதாகவும் அமைதல் இதற்குக் காரணமாகும்.

காளை (bull/ox) இராசியின் இரண்டாம் சின்னமான (Second sign of the Zodiac) ரிஷபம் (Taurus) என்பதுடன் இயைவுற்று மழை, உழுதலும் விதைத்தலும் (வேளாண்மை), கருவுயிர்த்தல், இனவிருத்தி, உருவாக்க வலிமை, அமைந்த ஆற்றல், பணி, பொறுமை, அடி(மை)ப்படுதல், ஆண்மை, பலி, வெற்றி எனப் பலவற்றைச் சுட்டுகின்றது. மதி, கதிரவன் ஆகியவற்றின் குறியீடாகவும், காளை அமையலாம். சிவபெருமானின் காளை (ஊர்தி)க் கொடியும் இவற்றில் சிலவற்றுடன் பொருந்தலாம். வெள்ளேறு என்பதனால் வெண்மையின் குறியீட்டுப் பொருண்மையுள் சிலவான தூய்மை அறிவுடைமை என்பனவோ, ஒளிபெறுதல், ஏற்றம் பெறுதல், வெளிப்படுதல், மன்னிப்பு என்பனவோ, பொருத்திப் பார்க்கப் பெறலாம். (நந்தியின் சார்புடன்,

காளை வேதக் குறியீடாகப் பிற்காலத்தில் வெளிப்படுவதாகத் தோன்றுகிறது).

பறவை (bird)க் குறியீடு ஆவி அல்லது ஆன்மா என்பதை ஒட்டியது. எண்ணம், கற்பனை என்பனவற்றையும் சார்ந்தது. ஐம்பூதங்களுள் காற்றுடன் (வான்) தொடர்புறும் பறவை, கருடன் போன்றவற்றால் உயர்ச்சி, உன்னதம் என்பனவற்றையும் குறிக்கவல்லது. விடுதலை, விரைவு, தூய்மை, இறை, தூது, மகிழ்ச்சி, பெண்மை, அழகு, ஒளி, போன்று பலவற்றைக் குறிக்க வல்லது. குறிப்பிட்ட சில பறவைகள், தம் பண்பு நிலைக்கேற்ப தனிக் குறியீட்டுப் பொருண்மைகள் வழங்குவன (சேவல் - விடியல்; ஊனுண் பறவை - பேராசை).

கடவுட் கொடிகளில் தென்படும் உவணம், சேவல் போன்ற சில பறவைகளை மேற்படி கருத்துகளின் அடிப்படையில் சார்த்தியும் வேறுபடுத்திக் காணலாம்.

உவணம் (eagle) கதிரவனின் சார்புடன் உயர்ச்சியைக் குறித்து அமைகிறது. வீர மேம்பாட்டைக் குறிக்கும் நிலையில் போர்புரியும், ஆற்றலுடைய கடவுளுடன் சார்புபடுத்தப்பெறுகின்றது. பாம்புப் பகையாகக் காட்டப்படும் நிலையில் கீழுணர்வை வெல்லும் மேலுணர்வாக அமைகின்றது. பருந்து (hawk) என்ற நிலையில் நெருப்பு, வெற்றி என்பனவற்றையும், கருடன் (falcon) என்ற பாங்கில் ஒளி, மேன்மை, இறவாமை, நீண்ட வாழ்நாள் என்பனவற்றையும் குறிப்பதாகத் தெரிகிறது. திருமாலின் உவணக்கொடிக்கு இவற்றுள் சில பொருத்தம் கொள்ளலாம்.

சேவல், விடியல் பறவையானமையால் கதிர்க்குறியீடாகவும் பொருந்துகின்றது. விழிப்பு, செயற்பாடு, மீட்டுயிர்ப்பு, ஒளி பெறுதல், உயர்ச்சி, எதிர்கால நோக்கு, தூய்மை, போரிடுதல், துணிவு போன்ற பல சார்புபடுத்தப்பெறுகின்றன. சேயோனின் சேவற் கொடிக்கு இவற்றுள் சில பொருந்த வாய்ப்பமையலாம். கடவுட் சமயக் கோட்பாட்டுச் சார்வும், புராணத் தொடர்பும் கொண்டு இவற்றுள் சில தேர்ந்து கொள்ளப்படுதல் பொருத்தம் பெறலாம். இவற்றில் குறிப்பிடப்படாத புதிய பரிமாணங்களும் புலப்படலாம்.

மரம், மிகுந்த குறியீட்டுப் பன்மை வழங்கவல்லதாக அமைகிறது. மரப்பொதுவும், குறிப்பிட்ட மரமும் இதில் அடங்கும். உயிர்ப்புத் தத்துவத்தை மரம் குறிக்கிறது. அதனால் இறவாமைக்குக் குறியீடாகிறது. மேனோக்கிச் செல்லுதல், மூவுலகை இணைக்கும்

அச்சு, மனித இயல்பு என்பனவும் இதன் பொருளாம். இலையுதிரா மரம் நிலைபேறுடைய ஆவியைச் சுட்டுகிறது. அரசத்துவத்தை (Kingship)ச் சுட்டும் நிலையில் காவல் மரத்துடனும், இறைமையைத் தருநிலையில் தல மரத்துடனும் சார்த்தவும் கூடும். அறிவு, அறம், அழகு, அடைக்கலம் என்பனவும் மரத்தால் காட்டப்படுகின்றன.

பனை (palm) வளம், வெற்றி, உயர்ச்சி, தியாகம், மகிழ்ச்சி, அறிவு, கொடை, அறம் போன்ற பலவற்றைக் குறிப்பது, பலராமனின் பனைச் சின்னத்திலும் ஓரளவு பொருத்திப் பார்க்கப் பெறலாம்.

## நிறைவுரை

சங்க இலக்கியம் தரும் கொடிக்குறிப்புகளில் சுமார் 34% குறிப்புகளே கடவுளர் கொடி பற்றியன. கொற்றவை போன்று, கொடி சுட்டப் பெறாத கடவுளரும் உளர். தொடர்ந்த காலத்தின் சமயச் சார்பிலக்கியங்கள் தரும் குறிப்புகளோடு இணைத்தும் ஒப்பிட்டும் ஆயும்போது பல கருத்துகள் விளக்கம் பெறலாம். கடவுளுருவத்தின் பல கூறுகளும் பண்புகளும் சார்புக் கதைகளும் குறியீட்டு நோக்கினவாகையால் அம்முழுப்பார்வையின் அடிப்படையில் கொடிச் சின்னமும் இணைத்துப் பார்க்கப் பெறல் வேண்டும். சமூகவியல், மானுடவியல் கோட்பாடுகளும், இலக்கியம் தரும் செய்திகளுக்கு மேலும் தெளிவும் விளக்கமும் வழங்கலாம்.

# காப்பியங்கள்

## முதற் காப்பியங்கள்

### (கி.பி. 2–8நூ)

கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரையுள்ள தமிழிலக்கியக் களனில் கொடி பற்றிய குறிப்புகளைக் காண வாய்ப்பாக, இக்காலப் பகுதியில் உட்படுவனவாகப் பதினொரு காப்பியங்கள் தென்படுகின்றன. அவை சிலப்பதிகாரம் (கி.பி. 2-3நூ), மணிமேகலை (5-6நூ), பெருங்கதை (7-8நூ), கம்பராமாயணம், சிந்தாமணி, வளையாபதி, பாரத வெண்பா (8-9நூ), குண்டலகேசி, நீலகேசி சூளாமணி (9-10நூ), பெரியபுராணம் (12நூ) என்பன. இவற்றுள் வளையாபதி குண்டலகேசி ஆகியன கொடிக் குறிப்புத் தரவில்லை. பிற ஒன்பது காப்பியங்களுள், விரிவு தவிர்க்க முதல் மூன்று காப்பியங்களிலுள்ள தரவுகள் மட்டும் இக்கட்டுரையில் அணுகப்பெறுகின்றன.

இவற்றில் கொடி பற்றி வரும் தரவுகள் பொதுவான சில எண்ணங்களை எழுப்புகின்றன. கொடி என்ற சொல் வரவு மிகுதியாக அமைகிறதா; அவற்றுள் 'துவசம்' என்ற பொருளில் இச்சொல்லின் வரவு-எண்ணிக்கையும் விழுக்காடும் எவ்வளவு; கொடியைக் குறிக்க இவற்றில் வரும் பிற சொற்கள் எவை? அவற்றின் பயிற்சி எத்தகையது; காப்பியங்கள் வழி தமிழ் மொழியில் வந்த கொடி சுட்டும் புதிய சொற்கள் உளவா? எவை யெவை? இவை புகுந்த நிலை என்ன; கொடி வகைகள் பற்றித் தெரிய இயலுகின்றதா; கொடியின் வண்ணம், வடிவம், அளவு, வரைவு, ஆக்குபொருள் பற்றிக் கிடைக்கும் தகவல் என்னென்ன; அடையாளக் கொடிகளை இனங்காட்ட முடிகிறதா; கொடி பறக்குமிடங்கள் தொடர்பான செய்திகள் என்னென்ன; கொடிக்கு வரும் அடைகளால் பெறப்படும் உண்மைகள் எவை; கொடியின் செயல் அல்லது கொடியைக் குறிக்குமிடத்து வரும் வினைச்சொற்கள்வழி பெறப்படும் தரவுகள் என்ன; கொடியால், கொடிச் சின்னத்தால் நபர் பெயர் பெறுதல் எவ்வாறமைகிறது; கொடி சுட்டும் நோக்கங்கள் என்ன; 'கொடி'ப் பெயரின்றியும்

கொடி சுட்டப்படும் சங்கப்பாடல் நிலை காப்பியங்களில் தொடர்கிறதா; சின்னம் இல்லாத/சுட்டப் பெறாது கொடி குறிப்பிடல் அங்குப் போல இங்கும் உளதா; பொறி - கொடிச்சின்னம் தொடர்புறல், அல்லது, கருவி அல்லது அடையாளம் - கொடிச்சின்னம், ஊர்தி - கொடிச்சின்னம் தொடர்புறல் என்பது இங்கும் தெரிகிறதா; அரசனுக்கும் கொடிக்குமுள்ள தொடர்பு எங்ஙனம்; இறைவர் கொடி, பிறர் கொடி பற்றி அறிய முடிகிறதா; ஒரு கொடி-பல்கொடி என்ற பான்மை எதைக் குறிக்கின்றது; கொடியின் பயன்பாடு பற்றிய புதிய சிந்தனைகள் கிடைக்கின்றனவா - என்பது போல் இவை பல்கி அமைகின்றன.

## கொடி–சொல்வரவு

சிலப்பதிகாரத்தில் ‘கொடி’ எனும் சொல் 78 இடங்களில் வருகிறது. அவற்றுள் 31 இடங்கள் துவசப் பொருளுடையன. இது சுமார் 40% காட்டுகின்றது.

மணிமேகலையில், 91 வருகையில், 13 மட்டுமே துவசப் பொருள் தருவது, சுமார் 14% கொள்கிறது.

பெருங்கதையில் 153 வருகையில் 57 இடங்கள் துவசப் பொருண்மை கொண்டு சுமார் 37% குறிக்கின்றது.

இப்புள்ளி விவரங்களிலிருந்து, காப்பியத்தில் கொடிச் சொல்லின் வருகையில் ஐம்பதை விடக் குறைந்த விழுக்காட்டினவே துவசப் பொருள் கொள்வது தெரிகிறது. அடை, வருணனை, உவமை, உருவக நிலையில் செயற்கையான துவசத்திலும் இயற்கையான (தாவரக்) கொடியே கவிஞனால் மிகு பயிற்சிக்குட்படும் எனும் கருதுகோளுக்கு இங்கு அடிப்படை அமைகின்றது.

## கொடி – (பரியாயச்) சொற்கள்

கொடியை (flag)க் குறிக்கத் தமிழில் சுமார் 60 சொற்கள் வழங்கப்படுவதாகத் தெரியவருகின்ற போதும், மேற்சுட்டிய காப்பியங்களில் அவற்றில் சிலவற்றின் வரவே அமைகின்றன. மேலும் அவை ‘கொடி’ எனும் சொல்லோடு ஒப்பிடச் சிறுவரவினவாகவே அமைவதும் புலப்படுகிறது. அன்றியும் இவை ஒருபொருள் பலசொல் எனும் பரியாயச் சொல்நிலை காட்டுவதுடன் அமைந்துவிடாது, சிலவிடங்களில் சாதாரணக்

கொடியிலிருந்து தம்மை வேறுபடுத்தியும், கொடி வகையாகத் தம்மை இனங்காட்டியும் அமைவதுபோலத் தெரிகின்றது.

சிலப்பதிகாரம், (1) படாகை, (2) கொடிப்படாகை எனத் தருவனவற்றை ஒரு சொல்லாகவோ, இருசொல்லாகவோ கருத முடியும். இவை ஒவ்வோரிடத்து மட்டும் வருகின்றன.

**பாவை விளக்குப் பசும்பொற் *படாகை.....***
**மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்கு........ (5.154,56)**

இதனைக் 'கொடி' யெனவே அடியார்க்கு நல்லாருரை விளக்குகிறது.

**விசும்பகடு திருகிய வெங்கதிர் நுழையாப்**
**பசுங்*கொடிப் படாகைப்* பந்தர் நீழற்.... (14.215-216)**
**(பா.பே. - பதாகை)**

என்பதனைத் துகிற்கொடி என அரும்பத உரையும், 'கொடியும் படாகையு'மெனக் கொண்டு கொடி - சிறுகொடி, படாகை - பெருங்கொடி என் அடியார்க்கு நல்லார் உரையும் விளக்குகின்றன (தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1985). இங்கு வகைமை புலப்படுவதாகக் கொள்ளலாம்.

கொடிப்படாகை என்பதைப் புதிய சொல்லாக்கமாகக் கொள்ள வாய்ப்புளதா என்பது சிந்திக்கத்தக்கது. படாகை என்ற சொல் ஏற்கெனவே சங்க இலக்கியத்தில் இடம் பெறுவதாகும். (பரி. 9.78). பதாகை எனும் (பாடபேதச்) சொல்லும் அங்கு வந்ததாம் (பட்டி 182).

**மணிமேகலை,** (1) கதலிகைக்கொடி (2) விலோதம் (3) விலோதனம் எனத் தருவனவற்றை இரண்டு சொல்லாகவோ மூன்று சொல்லாகவோ எண்ணிக்கையிடலாம். இவை ஒவ்வொரிடத்து மட்டுமே வந்தன.

***கதலிகைக் கொடியும்* காழூன்று *விலோதமும்***
**மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின் (5.52-53)**

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் மற்றும் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையாகியோர் உரை (கழகம், 1992, ப. 19) 'கதலிகைக் கொடி, விலோதம் என்பன துகிற்கொடி வேறுபாடுகள்' என்று சுட்டுவதால் வெறும் பரியாயச் சொல் நிலையன்றி இருவகைக் கொடிகள் என்ற உண்மை உணர்த்தப்படுவதாகக் கொள்ளலாம். மேலும் ஓரிடத்தில் (5.52-53)

இரு சொற்களும் வருமாறும், இப்பொருள் கொள்ள வலுச் சேர்க்கும்.

விரைமல ரைங்கணை மீன *விலோதனத்து*
உருவி லாளனொ டுருவம் பெயர்பட (5.5)

என்பதற்கு மேற்சுட்டிய உரை 'மீனக்கொடி' என்பது, இதனைப் பரியாயச் சொல்லாக உணர உதவுகிறது.

கதலிகைக்கொடி, விலோதனம் ஆகிய இரு சொற்களும் முதலில் இக்காப்பியம் வழியே தமிழில் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (விலோதம் சங்க இலக்கிய வரவினது - மதுரை. 449).

கொடிப்படாகை என்பது போல கதலிகைக்கொடி என்பதையும் புதுச்சொல்லாக்கமாகக் கருதக்கூடும்.

பெருங்கதை, (1) படாகை, (2) கதலிகை நெடுங்கொடி, (3) கதலிகை, (4) படாம், (5) சத்திக்கொடி எனும் சொல்லாட்சிகளைத் தருகின்றது. படாம், இக்காப்பியம் புகுத்தும் புதுச்சொல்லாகும். சத்திக்கொடி எனும் சொல்லாக்கமும் இக்காப்பியத்தில் முதலில் வருவதாம்.

படாகை எனும் சொல் 14 இடங்களில் வந்து பயிற்சி கொள்கின்றது. 57 இடங்களிலமையும் கொடிச் சொல்லுடன் ஒப்பிட, சுமார் ¼ பங்கு காட்டுகின்றமை தனித்துச் சுட்டற்குரியது.

படாகை என்பது ஓரளவு அருகியே தனித்து வருகின்றது (6/14). பிறவிடங்களில் கொடியைக் குறிக்கும் பிற சொற்களை அண்மி அல்லது இணைந்து வருகின்றது.

**விடாஅ விளக்கொளி வெண்பூத் தாமமொடு**
***படாகையும்* விதானமும் பாற்கடல் கடுப்ப (2.1.11-12)**
**(*அடையாளக்கொடி, பெருங்கொடியுமாம்).**

**கவரியுங் கயலுந் தவிசுந் திருவும்**
**முரசும் *படாகையும்* அரசிய லாழியும் (2.5.30-31)(*கொடி)**

**பல்காழ்த் திரையும் *படாகையுங்*கொட்டிலும்**
**(2.12.44)(*பெருங்கொடி)**

**திருமணிச் சிவிகையும் பெருவினைப் *படாகையும்***
**(3.23.33) (*கொடி)**

**பஞ்ச வண்ணத்துப் *படாகை* நுடங்க (4.7.238) (*கொடி)**

---

*உரை: பொ.வே. சோமசுந்தரனார்; கழகம், 1973.

வல்லோர் வகுத்த மாடந் தோறும்
நல்லோ ரெடுத்த பல்பூம் *படாகை* (5.6.65-66) (*கொடி)

எனத் தனித்து வருமிடங்கள் இதனை வெறும் ஒரு பரியாயச் சொல்லாகவோ அல்லது தனிக்கொடி வகையாகவோ கருத இடம் தரலாம்.

பிறவிடங்களில் இச்சொல் வருகை, கொடி என்பதுடன் மட்டும் இணைந்தோ, பிற இரு-பல கொடிச் சொற்களுடன் இணைந்தோ வருமாறு புலப்படுகின்றது. இவ்விரு நிலையாலும் சில கருத்துகள் பெற முடியலாம். கொடி வேறு, படாகை வேறு என்ற வகைமையை முன்னது காட்டக்கூடும்.

வரித்த *பூங்கொடி* விரித்து விசும்பிவரப்
பத்திரப் *படாகை* பல்வயி னுடங்க (2.6.20-21)
(*அழகிய கொடிகள்,
மங்கலக் கொடிகள்)

பகலங் காடியிற் பல்லவர் எடுத்த
பல்வேறு *கொடியும் படாகையு* நிரைஇ..... (2..6.20-21)
(*கொடியும்
பெருங்கொடியும்;
அடையாளக் கொடியுமாம்)

*கொடியும் படாகையும்* வடிவுபட வுயரிச்
செறிந்த கதவந் திறந்தன ரெதிர்கொள..... (3.27.205-206)
(*கொடியும்
படாகையும் - பெருங்கொடி)

வரைநிரைத் தன்ன மாடந் தோறும்
திரைநிரைத் தன்ன *படாகையுங் கொடியும்* (5.7.51-52)
(*பெருங்கொடிகளையும்
சிறுகொடிகளையும்)

பத்திப் *படாகையும்* பல்பூங் *கொடியும்* (5.9.19)
(*பெருங்கொடி, சிறுகொடி)

இவற்றில், கொடி, சிறுகொடி எனக் கொடியும், மங்கலக் கொடி, பெருங்கொடி, அடையாளக்கொடி எனப் படாகையும் உரையில் காட்டப்படுகின்றன (முன்சுட்டியது).

பிறசொற்களுடன் வரும் இடங்களும் இதே எண்ணத்திற்கு வர இடம் வழங்குகின்றன எனினது மிகையன்று.

.........மறுகின்

மாலை யணிந்த மணிக்காழ்ப் படாகையொடு
கால்புடைத் தெடுத்த கதலிகை நெடுங்கொடி

(1.38.6-8)

(*பெருங்கொடிகளும் கதலிகை என்னும்
நீண்ட கொடிகளும்; படாகை -
பெருங்கொடி; கதலிகைக்கொடி -
ஒருவகைக்கொடி)

கதலிகை நெடுங்கொடி என்பது இவ்வாறு ஒரு இடத்தில் மட்டுமே வந்தது.

கதலிகை தனித்தும் பிற கொடிகளுடனிணைந்துமென ஈரிடங்களில் வந்தது.

உழைக்கோ டணிந்து பீலி நாற்றிக்
கழைக்கோ றொடுத்த *கதலிகை* நுடங்க (1.52.113-14) (*கொடி)
காம வல்லியுங் *கதலிகை* யணிந்த
தாமவல்லியுந் தண்பெரும் *படாகை*யும்........
........பத்திப் *படாமும்* சித்திரக் *கொடி*யும் (2.2.151-52......155)

(*கதலிகை - துகிற்கொடி;
படாகை - அடையாளக் கொடி;
பத்திப்படாகை - ஒருவகைத்
துகிற்கொடி, சித்திரம்
வரையப்பட்ட கொடி)

படாம் என்பதன் ஒரே வருகையும் இவ்வாறு பிற கொடிகளுடன் இங்கமைந்துவிடுகின்றது. சத்திக்கொடி,

பத்திப் பல்வினைச் சித்திரக்குலாவின்
ஒத்தமைத் தியன்ற *சத்திக்கொடி* யுச்சி (2.6.55-56)

(*கொடி, கொடிக்குழி)

என அமைகின்றது. உரையை நோக்க, கதலிகை நீண்ட இயல்புடைய கொடி வகையாக உணரப்பட முடிகிறது. முன்பும் பிறவிடத்தும் கருதுவதுபோல, வாழை வகையின் பெயராகவும் கதலி அமைவதால்,அதன் இலையினமைப்புடைய நீண்டுயர்ந்த கொடியின் பாங்கு இங்கு இணையலாம். படாம், 'துகிற்கொடி' என உரைக்கப்படுவதால் 'வெண்' கொடி எனவும், படாகை எனும் அடையாளக் கொடியினின்று வேறுபடுத்தப்படுகிறது எனவும் கொள்ளலாம். சத்திக்கொடி என்பது மேலும் தெளிந்துகொள்ள வேண்டிய ஒன்றாக அமைகிறது.

இவற்றிலிருந்து, கொடியைக் குறிக்கும் பரியாயச் சொற்களாகவோ, கொடி வகையைக் குறிக்கும் சொற்களாகவோ,

காப்பியத்தில், கொடி என்பதுடன் படாகை, கொடிப்படாகை, கதலிகைக் கொடி, விலோதம், விலோதனம், கதலிகை நெடுங்கொடி, கதலிகை, படாம், சத்திக்கொடி என மொத்தம் பத்துச் சொற்கள் அமைவது தெரிகிறது. இவற்றுள் கதலிகை, கதலிகைக்கொடி, கதலிகை நெடுங்கொடி, கொடிப்படாகை, சத்திக்கொடி, படாம், விலோதனம் எனும் ஏழு சொற்களும் (முதற்) காப்பிய காலத்தில் புகுந்தனவாக இனங்காண முடிகிறது.

பரியாயச் சொல் என்று கொண்டுவிட்டால், 'கொடி' எனும் சொல்லிருக்க இவற்றின் தேவை நிறுவப்படுதல் வேண்டும். எதுகை/மோனை போன்ற யாப்புத் தேவைகள் பிற (மொழிச்) சொல்லிணைவுக்குக் காரணமாகவிருக்கலாம். பசும்பொற் படாகை; பசுங்கொடிப் படாகை என மோனையும் விடாஅ.... படாகையும்; ஒத்தமை..... சத்திக்கொடி என எதுகையும் வருகின்றன. சீர்நிரப்புதல் தேவையுமிணைந்து கொடிப்படாகை, கதலிகைக்கொடி, கதலிகை நெடுங்கொடி, சத்திக்கொடி எனும் அமைப்புகள் உருவாகியுள்ளன எனலும் தகும்.

தொல்காப்பியத்துக்குப்பின், சங்க இலக்கிய காலத்தில், படாகை, படாஅகை, பதாகை, விலோதம் எனும் சொற்களே இணைந்தமை வடமொழித் தாக்கத்தின் ஒரு அளவினைக் காட்டுகிறது என்றால், காப்பிய காலத்தில் இணைந்த மேற்படிச் சொற்கள் இதன் மிகு தாக்கத்தைக் காட்டுகின்றன எனலாம். புராண மாந்தரான மன்மதனின் கொடியைக் குறிப்பிடும்போது மட்டுமே விலோதனம் எனும் சொல்லாட்சி உட்படுவதும் பண்பாட்டுத் தொடர்பு என்ற நிலையில் சிந்திக்கத்தக்கது.

## கொடி–வகைகள்

கொடி எனும் சொல்லும், மேற்சுட்டிய கொடிச்சொற்களும், எல்லா வகையிலும் வேற்றுமையற்ற ஒரே கொடியைக் குறிக்கின்றன என்பதற்கில்லை. இவை பல வேளையும் கொடிவகைகளைக் காட்டுகின்றன. அருகி வேறுபடுத்தியும் காட்டுகின்றன.

முன்சுட்டிய சிலம்புக் குறிப்புகள் படாகையை, வீதியில் அமைந்த கொடியாக உணர உதவுகின்றன (5.154, 14.216). பெருங்கதை, அரசக் கொடியாகவும் (2.5.31), போர்ப் பாசறைக் கொடியாகவும் (2.12.44), மாடக்கொடியாகவும் (5.6.66), அங்காடிக் கொடியாகவும் (2.6.21) மற்றும் இதனை வேறுபடுத்தித் தருகின்றது. 'பஞ்சவண்ணத்துப் படாகை' (4.7.238) என்பதால் பல்நிற இணைவு

இதில் மட்டும் அமையும் போலும் எனவோ ஒவ்வொரு படாகையும் வேறுவேறு நிறத்தில் அமையுமெனவோ கொள்ள முடியலாம்.

ஆயின் இவற்றை இனம் பிரித்துக் காட்டுகின்ற கூறுகள் எவை என்பது இன்னும் ஆழாராய்வுக்குரியதாம். அன்றியும் நிகண்டுகள் சிறுகொடி, பெருங்கொடி, விருதுக்கொடி, வீதிக்கொடி....... என்று சொல்நிலையில் வேறுபடுத்திச் சுட்டும் தெளிவு நிலை இங்கு மேலும் தேரற்குரியதாக அமைகின்றது.

கொடி உரிமையுடையோர் யார் என்ற அடிப்படையில் கடவுட் கொடிகள், அரசக் கொடிகள்...... என வகை காண முடியலாம். கொடியின் நோக்கம் என்ற பாங்கில் வியாபாரக் கொடி, விழாக்கொடி..... என்பன போல் வேறுபாடு கருதலாம். கொடிகள் பறக்குமிடம் அல்லது அமைக்கப்படுமிடத்தினடிப் படையில் நகர், எயில், வீதி, மாடம், வாயில், வீடு, தேர், யானை - எனப் பகுக்க இயலும். வெண்கொடி - வண்ணக்கொடி என நிறநிலையிலும், துகிற்கொடி என ஆக்குபொருணிலையிலும் பிரித்துக் காணமுடியும். கொடியில் வரையப்பெற்ற சின்னம்/சித்திரம் என்ற அடிப்படையிலும் தனிப்படுத்தி வகுக்கலாம்.

## கடவுட் கொடி

மூன்று காப்பியங்களும் கடவுட்கொடி பற்றிய ஒருசில குறிப்பைத் தருகின்றன. கொடி எனும் சொல்லுடனோ 'உயர்த்தல்' எனும் வினை சுட்டியோ இவை வரலாமென்பது சங்க இலக்கியத்தில் போல் சிலம்பில் அமைகின்றது.

> உவணச் சேவ *லுயர்த்தோ* னியமமும்
> மேழி வலனு*யர்த்த* வெள்ளை நகரமும்
> கோழிச் சேவற் *கொடி*யோன் கோட்டமும்.... (14.8-10)

என மால், பலராமன், முருகன் கொடிகள் அவர் கோயிலிலமைந்தமை சுட்டப்பெறுகின்றன. கொடியாலேயே இவர் இங்குச் சுட்டப்பெறுவது தனித்துச் சுட்டற்குரியது.

> தாங்கிய கொள்கை தருநிலைக் கோட்டத்து
> *மங்கல நெடுங்கொடி* வானுற வெடுத்து (5.145-146)

என இந்திரனுக்குரிய கொடி விழவுக் காலத்தில் எடுக்கப்படுவது குறிப்புறுகின்றது. முன்னதில் உவணம் (கருடன்), மேழி (கலப்பை), கோழிச்சேவல் என்றமைந்த உருவரைவு பின்னதில் அமையவில்லை. 'மற்றவன் புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்' (11.135-136)

எனப் பிறிதிடத்தில் வேறு சொல்லால் உவணம் குறிக்கப்படுகிறது. கொற்றவையின் கொடி,

> கொள்ளுங் *கொடி*யெடுத்துக் கொற்றவையுங்
> கொடுமரமுன் செல்லும் போலும் (12.14.4)

என்பதில் ‘ஆளி’ அடையாள மிருக்குமென்பதை அரும்பத உரை காட்டும். மன்மதனின் கொடி பன்முறை சுட்டப்பெறுவதுடன் (4.83; 5.210; 7.37.3; 8.10-12; 28.18-20) கொடியாலேயே அவன் குறிக்கப்பெறல் தொடர்கின்றது (மகரவெல் கொடிமைந்தன் - 4.83; மீனேற்றுக் கொடியோன் - 5.210).

இக்கடவுட்கொடிச்சுட்டு மிகுதி மணிமேகலையில் இல்லை. மன்மதனின் மீன்கொடி மட்டும் ஏற்கெனவே சுட்டியபடியும் (5.5), வேறிடத்தும் அமைகின்றது.

> வான்றேர்ப் பாகனை *மீன்றிகழ் கொடி*யனை (20.91)

பெருங்கதையும், முருகனின் புட்கொடி, மற்றும் மன்மதனின் மீன்கொடியை மட்டும் காட்டும்.

> அருவரை பிளந்த வஞ்சுவரு நெடுவேல்
> ஒருவலத் துயரிய பொருளில் *புட்கொடித்*
> தளையவிழ் நறுந்தார்த் தனக்கிணையில்லா
> இளையவன்....... (2.5.147-150)

> *மகர வெல்கொடி* மகிழ் கணைக் காமற்கு (3.5.30)

முருகனின் பெயர் சுட்டப்படாமையும், புள் என்பதால் சேவலாகவோ, மயிலாகவோ அமையலாமென்பதும், பின்னது மகரம் எனச் சின்னமும் ‘காமன்’ எனப் பெயரும் சுட்டி வருவதும் சுட்டற்குரியன. மூன்று காப்பியங்களும் கொடிச் சார்புடன் சுட்டும் ஒரே கடவுளாகக் காமன் அமைவது தனித்த சிந்தனைக்குரியது.

## அரசர் கொடி

கடவுட்கொடி போலவே அரசர் கொடி தொடர்பாகவும் சிலம்பே மிகுதியான குறிப்புகளைத் தருகின்றது. அரசனின் கொடி, சின்னத்துடன் குறிக்கப்படுதல், சங்க இலக்கியத்தில் காணப்படாமல் இங்கே முதல் முதல் காணப்படுகின்றது. பல மன்னர் பற்றிய செய்தி அமையினும் சேர, சோழ, பாண்டியர் கொடிகளே குறிப்புப் பெறுகின்றன.

உழைப்*புலிக் கொடித்*தே ருரவோன் கொற்றம் (10.142)

நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர் செங்களத்துக் *கொடுவரி கயற்கொடி*
பகைப்புறத்துத் தந்தன ராயினும்........ (25.152-154)

சேயுயர் *விற்கொடிச்* செங்கோல் வேந்தே (26.139)

வானவர்கோ னாரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
*மீனக்கொடி* பாடும் பாடலே பாடல் (29.27. 3-4)

என இணைந்தோ, தனித்தோ வருகின்றன. மேலும் சின்ன நிலை மட்டும் வெளிப்படப் 'பொறி'யாகவும் (29.23.5, 25.5), அச்சின்னத்தைப் பொறித்தலாகவும் (5.96-98; 17.1.1-2; 17.30.1; 24.26.5; 25.1-3, 171-172; 28.136; 29.1.8, 18.2-3),

தென்குமரி யாண்ட செரு *வில் கயற் புலியான்* (29.25.2)

ஆங்கு நீணில மன்னர் நெடு*விற் பொறையன்* (29.29.1)

என நபரைச் சுட்டும் பெயராக்கத்திற்குப் பயன்படுவதாகவும் வருகிறது. 'வில்லவன் வந்தான்' (27.238) எனச் சேரன் அவன் கொடியின் வில் இலச்சினையால் குறிக்கப்படுதலும் இது. மேலும் சிலம்பே, அரச பூதத்தின் கொடியையும் (22.52-53) அருச்சுனனுக்குரிய குரக்குக் கொடியையும் (22.111) தருவதும் இங்கு நினைக்கப்படலாம்.

மணிமேகலை இரு மன்னரின் கொடியைச் சுட்டும் ஒரு குறிப்பு மட்டுமே தருகின்றது.

*சிலைக்கய னெடுங்கொடி* செருவேற் றடக்கை
யார்புனை தெரிய லிளங்கோன் றன்னாற் (19.124-125)

(சேர பாண்டியர் கொடிகளான சிலை, கயலும், சோழனுக்கு 'ஆர்' எனப் பூவும் இணைகின்றன).

பெருங்கதை, தமிழ்மன்னர் கொடிக்குறிப்புத் தர வாய்ப்பில்லை. எனினும் அரசக் காப்பியமானதால், உதயணன், பிரச்சோதனன்....போன்றோர் கொடிகள் குறிக்கப்பட வாய்ப்பிருந்தும் அமைந்தில. அரசப் பெருங்கொடி (3.19.196) என்ற பொதுச்சுட்டு மட்டும் காணப்படுகிறது. மேலும் அரசனுக்குரிய பல பொருட்களுள் கொடியுமொன்றாகச் சுட்டுப்பெறுகின்றது (1.57.58; 2.5.31). பாஞ்சாலராயனான ஆருணியரசனை உதயணன் போரிட்டு வெல்லும் சூழலில், அவன் "சக்கரக்கொடி" வீழ்ச்சி தீநிமித்தமாகச் சுட்டப்படுவது தனித்தது:

சக்கர நெடுங்கொடி யற்றன வாகி
இருநில மருங்கிற் சிதைவன விழவும்...... (3:27. 77-78)

உதயணனுக்குப் பிரச்சோதனன் தூதாக அனுப்பிய ஓலையில் அமைந்த பொறி, 'உட்குறு முவண முச்சியிற் சுமந்த சக்கர வட்டமொடு சங்குபல பொறித்து' (4.10.92-93) அமைவதாகத் தெரிவது பொறி (முத்திரை) என்ற நிலையில் கருதற்குரியதாகலாமெனினும் கொடிநிலை கொண்டதாகத் தெரியவில்லை.

## அரசச் சார்புக் கொடிகள்

அரசன் அல்லது அரசின் சார்பில் படை கொடிதாங்கிச் செல்லல், போருக்கு எழுவது சுட்டும் கொடி, படைப்பகுதியான தேர்க்கொடி சுமத்தல், எயில் (கோட்டை), அதன் மதில், அதன் வாயில் (கதவம்), அரண்மனை, அரசனின் தலைநகரம், அதன் தெரு போன்றன கொடியணிதல் போன்ற சிலவற்றை இத்துணைத் தலைப்பிலடக்கிக் காண முயலலாம். இவற்றுள் ஒருசில தம்முள் மயங்கியமையும் வாய்ப்புக் கொள்கின்றன. சிலம்பில்,

விரவுக் கொடியடுக்கத்து நிரயத் தானையோடு (26.37)

எனப் படை காட்டப்படுகிறது.

போருழந் தெடுத்த வாரெயி னெடுங்கொடி (13.189)

எனச் சிலம்பு, எயிலிலமைந்த நிலையில் போரின் வெற்றி குறிக்க எடுத்த கொடியைத் தருகிறது. பெருங்கதை படையெழுச்சியில், போர் செய்வதற்கு எடுக்கும் கொடியாகப் படாகையை அமைக்கிறது (* போர்த் தொழிலில் உயர்த்துங்கொடி).

மேல்வருந் தானை நால்வரு முதலா
இருநூ றானையு மிராயிரங் குதிரையும்
அறுநூற் றிரட்டி யுடன்மணித் தேரும்
அறுபதி னாயிர ரெறிபடை மள்ளரும்
திருமணிச் சிவிகையும் *பொருவினைப் படாகையும்*
(3.23.29-33)

மேலும், 'கொடிப்படை கோமகனாக' (1.53.138) எனவும், 'கொடிப்படை நீக்கிப் படிப்படை நிறீஇ' (3.24.39) எனவும் கொடி தாங்கிச் செல்லும் முன்படை சுட்டப்படுவதும் அமைகிறது.

தேர்க்கொடி, பயிற்சி மிகுதி கொள்கிறது. சிலம்பில், 'கொடித்தேர் வீதியும்' (5.40, 22.109), 'கொடித் தேர் வேந்தனொடு' (5.182), 'உழைப்புலிக் கொடித்தே ருரவோன்' (10.142), 'கொங்கவிழ்

நறுந்தார்க் கொடித்தேர்த் தானை' (30.177) என வருமிவை தேரோடும் வீதிகள் கொடியுடையன, அரசனின் தேரில் கொடியமையும், சோழ மன்னனின் தேர்க்கொடியில் புலிச் சின்னம் உளது; படையிலுள்ள தேர்கள் கொடியணிந்திருக்கும் எனப் பல செய்திகளையும் தருகின்றன.

மணிமேகலையும், 'கொடித்தேர்த் தானைக் கொற்றவன்' (1.19), கொடித்தேர் வீதியும் (4.37, 21, 120), கொடித்தேர் வேந்தன் (7.79) என வீதி, அரசு, தானைச் சார்பில் தேர்க்கொடியைத் தந்தது.

பெருங்கதையில், 'கொடித்தேர் வீதியும்' (1.36.358), 'கொடியணி தேரும்' (1.47.113), 'பூங்கொடித் தேரும்' (3.16.15), 'கொலை வினைப் படை மாக்கொடி யணி நெடுந்தேர்' (3.17.249), 'கொடித் தேர்த்தானைக் கோமான்' (3.26.89), 'கொடித்தேர் முற்றத்து' (5.7.64), கொடித்தேர்க் கோமான்' (5.8.138) என இது பன்முறை வருகின்றது. இங்கும் வீதி, அரசச் சார்பு உளது கண்கூடு.

களிறு, புரவி என்பன கொடி தாங்கின குறிப்புக் கிட்டிற்றில.

சிலம்பில் எயிற்கொடி வந்தமை ஏற்கெனவே சுட்டப்பெற்றதுடன் மதில், வாயில் என்பதன் கொடிகளும் இணைத்துக் காணலாம்.

> *மதிலக* வரைப்பிற்
> குடகாற் றெறிந்து *கொடி* நுடங்கு மறுகிற் **(14.69-70)**
> கோவலன் பெயர்ந்தனன் *கொடிமதிற்* புறத்தென் **(14.219)**
> ஞாயிலுஞ் சிறந்து நாட்*கொடி* நுடங்கும்
> வாயில் கழிந்து **(15.217-18)**

ஊருக்குக் காப்பாகவே எயில், மதில் என்பன அமைவதால் அவ்விணைவுடன்,

> *கொடி மதின் மூதூர்* நடுநின் றோங்கிய **(28.49)**

எனச் சிலம்பிலும்,

> *கொடி மதில் மூதூர்* குடக்கண் நின்று ஓங்கி **(28.164)**
> *பொன் கொடி மூதூர்ப் புரிசை* வலங்கொண்டு **(28.170)**

என மணிமேகலையிலும் வருவன இணைத்துக் காணத்தக்கன. மேலும் மணிமேகலை வாயிற்கொடிகளை,

> கதலிகைக் கொடியும் காழ் ஊன்று விலோதமும்
> மதலை மாடமும் *வாயிலும்* சேர்த்துமின் **(1.52-53)**

தேவர் புகுதரூஉம் செழுங்*கொடி வாயிலும்* (6.40)

*கொடிமிடைவாயில்* குறுகினள் புக்கு (28.28)

எனவும் குறிக்கிறது.

பெருங்கதையில் இவ்வகையின் பயிற்சி பரந்து அமைகின்றது. கோட்டையின் கொடி,

*கொடித்தலை* மூதெயில் கொள்வது வலித்தனன் (4.8.64)

எனவும், மதிற்கொடி,

*கொடியணி* நெடுமதிற் (1.54.55; 1.54.76)

எனவும், வாயிற்கொடி,

அச்சங்கொள்ள ஆடுகொடி நுடங்கி.......
*வாயிலும்* வனப்பு மேவி வீற்றிருந்து..... (2.20.110...114)

நட்டோர்க் காற்று நன்ன ராளன்
வரவெதிர் கொள்கென *வாயிலும்* வீதியும்
விரைமலர்ப் பூங்கொடி வேறுபட வுயரி.... (3.18.66-68)

*கொடிபட* நுடங்கும் கடிநகர் *வாயில்* (4.17.100)

எனவும் தரப்படுகின்றன.

எயிலிலும் மதிலிலும் வாயிலிலும் மட்டுமன்றிக் கதவிலும் கொடியமைந்ததைப் பெருங்கதையில் காண முடிகின்றது.

*கொடியும் படாகையும்* வடிவுபட வுயரிச்
செறிந்த *கதவந்* திறந்தன ரெதிர்கொள (3.27.205-206)

கதவில் போன்று, அரண்மனையில் கொடியமைதல் பெருங்கதையில் மட்டுமே உண்டு.

கொடியணி கோயில் குறுகலும்...... (3.13.65)

ஊர் அல்லது நகர், அரசனின் தலைநகர் என்ற சார்பில் கொடியுடன் குறிக்கப்படுவதாகக் கொள்ள முடிகின்றது. சிலம்பு,

பொற்கொடி மூதூர் பொழிலாட் டமர்ந்தாங்கு (14.82)

எனப் பொதுவாக(வும் 'கொடி மாடக் கூடல்' (24.22.3) என நகர்ப் பெயர்ச்சுட்டியும்) தருகிறது. மணிமேகலை,

பொன்கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து (2.40)

எனப் பொதுவாகவும், கோசம்பி நகரை,

**கொடிக் கோசம்பிக் கோமகனாகிய (15.61)**

என நகர்ப் பெயர்ச் சுட்டியும் தருகின்றது. கொடிக்கோசம்பி என்ற இத்தொடர் பெருங்கதையில் மிக்குப் பயின்றது (1.48.69; 1.54.76; 2.2.50; 2.8.184; 3.27.194; 4.15.149; 4.17.22; 5.1.103; 5.9.2). பொதுவான 'கொடி நகர்' (5.6.50) என்ற சுட்டும் அங்கு உண்டு.

நகரின் வீதிகளும்/தெருக்களும் கொடியுடன் காட்டப்படுகின்றன. கடை வீதிகளும், இவற்றிலடங்கலால் வியாபாரக் கொடிகளும் இணைத்துக் காட்டப்படலாம். சிலம்பு, 'பசும்பொற் படாகை...... வீதியிற் செறிந்தாங்கு' (5.154,156) எனவும் இவ்வாறு செறிதல் பந்தல் போலவ்விடத்தையாக்கிவிடுகின்றது எனவும் கூறுகின்றது (14.215-216; 26.192). மணிமேகலை, 'கொடிமிடை வீதியுள் வருவோள்' (22.146) எனச் சுட்டுகின்றது. இங்கும் பெருங்கதை பயிற்சி கொள்கிறது. மறுகு (1.38.6), கம்பலைத் தெரு (1.38.25) என்பனவற்றில் கொடிகளைக் காட்டுகிறது. 'உருவச் செங்கொடி தெருவத்துப் பரப்பி' (1.38.351), 'கொடியணி வீதிக் கோநகர் வரைப்பிற்' (3.25.9), 'நெடுங்கொடி வீதி' (4.7.148), போகுகொடி வீதி (5.8.75) எனப் பயில்கின்றது.

கூலம், பொன் போன்ற வியாபாரங்களில் கொடி பயன்பட்டதைச் சிலம்பு குறிப்பிடுகின்றது.

**கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்**
**மாலைச் சேரி மருங்குசென் றெய்தி (6.132)**

**ஓங்கிய கொள்கையிற்**
**பொலந்தெரி மாக்கள் கலங்களு ரொழித்தாங்**
**கிலங்குகொடி யெடுக்கு நலங்கிளர் வீதியும் (14.202-204)**

மணிமேகலையில் இத்தகு குறிப்புக் கிடைத்திலது. பெருங்கதை 'கொடியணி கூலம்' (1.35.152) எனக் கூலவீதி/கடைத்தெருக் கொடியைச் சுட்டியது.

## மக்கட் சார்புக் கொடிகள்

மேற்சுட்டிய வணிகக் கொடிகளை, அரசச் சார்பு நீக்கி, மக்கட் சார்பில் கொள்ள இயலும். இவை தவிர மாடம், இல்லம், சோலையில் இன்பம் நுகர்தல் சூழல் ஆகியவற்றில் கொடி பற்றிக் கிடைக்கும் குறிப்புகளை இப்பகுதியில் அணுகலாம்.

கூடல் பற்றிய சுட்டில் 'கொடி மாடம்' எனச் சிலம்பு கூறும் (24.22). மணிமேகலை இதைத் தந்திலது. பெருங்கதை 'மாடக்கொடி' (3.14.278) எனவும் விழாக்காலத்து, 'மாடத்து மீமிசை

யெடுத்த விரிப்பூங்கொடி' (4.7.233-34) எனவும் தருவதுடன் கொடி மட்டுமன்றிப் படாகையும் இவற்றிலமையலாம் என்பதை,

**வல்லோர் வகுத்த மாடந் தோறும்**
**நல்லோர் எடுத்த பல்பூம் படாகை (5.6.65-66)**

**வரைநிரைத் தன்ன மாடந் தோறும்**
**திரைநிரைத் தன்ன படாகையும் கொடியும் (5.7.51-52)**

என அமைக்கிறது. வீடுகளில் கொடியமைதலும் (3.16.18-21), சோலையில் இன்பநுகருமிடத்து அமைந்த கொட்டிலில் (பாடிவீடு) கொடியமைதலும் (2.12.44) பெருங்கதை சுட்டுவது மட்டுமே.

## *பிற தகவல் சில*

பெருங்கதை பிறநூல்கள் நவிலாத சில செய்திகளை கொடி பற்றித் தருகிறது. கொடி குறி தந்து அடையாளமாகப் பயன்பட்டு இனங்காட்டுகின்றது எனக் கருதும் வண்ணம், 'அறியச் செய்த குறியுடைக் கொடியர்' (3.19.217) என அமைக்கிறது. பொதுவாகக் கொடியின் நோக்கம் இது ஆயினும் இங்கு விதந்து ஓதப்படுவதாகக் கொள்ளலாம்.

கொடியின் ஓவியம் இன்னது என்று வெளிப்படக் கூறப்படாதபோதும், கொடியில் ஓவியம் தீட்டுதல் எனும் செயல் சுட்டப்படுகின்றது.

**இடையற வில்லாக் கடைமுத றோறும்**
**கைவ லோவியர் மெய்பெற வெழுதிய**
**உருவப் பூங்கொடி யொசிய வெடுத்து (3.5-40-42)**

ஒரு கொடி பறத்தலென்ற நிலையன்றிப் பலகொடி நுடங்குதல் என்பதும் இதன்கண் பயின்றது (1.58.77; 2.1.9; 3.22.190; 3.27.112).

மங்கல நெடுங்கொடி எனச் சிலம்பும் (5.146), மங்கலப் பெருங்கொடி எனப் பெருங்கதையும் (2.2.114-115) அடை தந்து சிறப்பிக்கின்றன. பசும் பொன் படாகை (சிலம்பு. 5.154) என்ற அடை பொன் எனும் ஆக்கு பொருளையோ, அழகு, ஒளி எனும் தன்மையையோ உணர்த்தலாம். திண்கொடி (சிலம்பு. 7.37.3), வெல்கொடி (சிலம்பு. 8.10), நீள்கொடி (சிலம்பு. 11.136), நெடுங்கொடி (சிலம்பு. 13.189), பொற்கொடி (சிலம்பு. 14.82), இலங்கு கொடி (சிலம்பு 14.204), பசுங்கொடிப் படாகை (சிலம்பு 14.216), நாட்கொடி (சிலம்பு. 15.217), விரவுக்கொடி (சிலம்பு. 26.37), துகிற் கொடி (சிலம்பு. 26.192) எனச் சிலம்பு தரும்

அடைகள் அளவில் பெரிதாக, உயரத்தில் பறப்பதாக, பல வண்ணத்ததாக, துகிலாலமைந்ததாக, நாடோறும் எடுக்கப்படுவதாக, வெற்றி உணர்த்துவதாகக் கொடியை உணர்த்துகின்றன.

மணிமேகலை செழுங்கொடி (6.40) எனும் அடையைப் புதியதாகத் தந்து, அழகு சுட்டி நிற்கிறது.

பெருங்கதை உயர்கொடி (1.37.229), உருவச் செங்கொடி (1.38.351), பூங்கொடி (2.1.9), சித்திரக் கொடி (2.2.155), வண்ணக்கதலிகை (3.3.36), உருவப் பூங்கொடி (3.5.42), பெருங்கொடி (3.19.196), நூற்படாகை (3.27.94), வெண் கொடி (3.27.94), விரிப்பூங்கொடி (4.7.234), பூம்படாகை (5.6.66), போகுகொடி (5.8.75) என அழகு, வண்ணம், சித்திரம், துணியாலாதல் எனும் பண்புகளை விளக்குகின்றது.

வினைச்சொற்களாகக் கொடியெடுத்தல் (சிலம்பு. 5.146; 6.132) என்பதுடன் நுடங்கு (சிலம்பு. 14.70, 15.217; பெருங். 1.52.14; 1.58.77; 2.5.21), உயர்த்து (சிலம்பு. 14.8), மிடைதல் (மணி. 22.146. 28.25), ஆடல் (பெருங். 1.38.16), விசும்பிவர்தல் (பெருங். 2.5.20) என்பன காணப்பட்டு முன்நூல் தொடர்ச்சி காட்டுகின்றன.

சிலம்பு மட்டுமே, அரசர்க்குரிய பொறியும் கொடிச் சின்னமும் தொடர்புறுவதைக் காட்டுகின்றது. கடவுட் கொடிகள், ஊர்தி, கருவிச் சின்னமே கொள்ளினும், இந் நூல்களிலே இருநிலைத் தொடர்பும் கிட்டிற்றில. சேரன் (வில்லவன்), காமன் ஆகியோரே கொடிப்பெயரால் தம் பெயர்ச் சார்பு கொள்கின்றனர்.

## தொகையுரை

முன் இலக்கிய காலத் தொடர்ச்சியுடன் முதற் காப்பியத்திலுள்ள கொடித் தரவுகளைக் காணும்போது கீழ்வரும் உண்மைகள் புலப்படுகின்றன.

1. அங்குப் போல கொடி எனும் சொல்லே பெருவரவினது.
2. புதிய சொற் சேர்க்கைகள் அமைகின்றன. அவை பிறமொழிப் பண்பாட்டுச் சார்பு கொள்கின்றன.
3. சங்க இலக்கியம் அரசச் சின்னங்களையே குறிக்க அச்சின்னம் தாங்கிய கொடிகளைச் சிலம்பு தருகிறது.
4. மக்கட் சார்பிலும் கொடிகளைக் காணும் வாய்ப்பு இங்கு அமைகிறது.

# கம்பராமாயணம்

கவிமாமன்னன் கம்பன் இயற்றிய இராமாவதாரக் காவியக்களன், பேரண்டத்தையே (macrocosm) தன்னுள் அடக்கிய நுண்ணமைப்பாகி (microcosm), மக்கள் வாழ்வின் சமூகக் கலை பண்பாட்டுப் பரிமாணங்களின் பதிவைத் தாங்கிய நிரந்தரக் களஞ்சியமாக அமைகின்றது. ஆட்சியிலும் காட்சியிலும் அமைந்து மக்கள் வாழ்வில் அடையாளமாகி வண்ணமும் வனப்புமூட்டிய கொடிகளும் இதன்கண் காணப்பட்டுக் குறியாகவும், கருத்து விளக்க உத்தியாகவும் பயன்பட்டு பொருண்மை நிறைவும் முருகியல் ஆழமும் கொள்கின்றன.

கொடி என்ற சொல்நிலையால் 'வளைவு'டையதாகத் (1) தாவரக் கொடியும் (creeper), (2) துவசம் - பதாகை எனப் பல பரியாயப் பெயர் பெறும் அடையாளக் கொடியும் (flag) அமைவது புலப்படுகின்றது. இருவகைக் கொடிகளும், காற்றில் அசைதல், கொழுகொம்பைச் சார்ந்திருத்தல் என்ற நிலையிலும் ஒப்புடையனவாம். தொல்காப்பியம் முதலே பயன்படும் கொடி, தமிழ் லெக்சிகனில் 20 பொருள் பெறினும், 'துவசம்' எனப் பொருள்பட்டு வருநிலையிலுள்ள கம்பராமாயணத்தரவுகள் இங்குக் களனாகின்றன.

## விளக்கம்

'பெரும்பாலும் ஒரு கோல் அல்லது கயிற்றில் ஓரோரம் இணைக்கப்பெற்றதும், அளவு வடிவம் நிறம் படவரைவு ஆகியவற்றால் வெவ்வேறுபட்ட துணிப்பகுதி பெற்றதுமாகி, ஒரு நாடு அரசு அல்லது அமைப்பின் குறியாகவோ, அடையாளங் காட்டுவதாகவோ பயன்படுவது கொடி'* என்பது பொது விளக்கம்.

---

* The Random House Dictionary of the English Language, p.538

**சொல்**

கம்பராமாயணத்தில் சுமார் 160 குறிப்புகள் வழி கொடி பற்றி அறிய முடிகிறது. கொடி என்பது மட்டுமன்றிப் பரியாயச் சொற்களும் பயன்படுகின்றன.

கதலி - கால் நெடுந் தேர் உயர் கதலியும் - 7121*

கேதனம் - வள் உறை வயிரவாள் மகர கேதனன் - 965

கொடி - விரிமுகிற் குலம் எனக் கொடி விராயின - 2427

கொடிபதாகை - பரந்த வெண்குடை சாமரை நெடுங் கொடிபதாகை - 7524

தார்க்கொடி - தேர்க்கொடி யானையின் பதாகை சேண்உறு தார்க்கொடி என்று இவை ததைந்து - 7372

துகில் - முகிலொடு வேற்றுமை தெரிகிலா முழுத் துகிலொடு நெடுங்கொடிச் சூலம் மின்னுவ - 128

துகில்கொடி - பல்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட துகில்கொடி - 482

துவசம் - கொய்நிறைத் தாரன் குசத் துவசப்பேர் நெய்நின்ற வேலவன்...... - 126

பதாகை - காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போல் தான்நிமிர் பதாகையின் குழாம் தழைத்தன - 130

இவற்றுள் கொடி என்பது முன்நூல்களில் ஆளப்பெற்றதாகும். கம்பனில், புதியதாக வருவன கதலி, கேதனம், கொடிபதாகை, தார்க்கொடி, துகில், துகிற்கொடி, துவசம் என்பனவாம். சிலப்பதிகாரம் பதாகை என்பதைப் பாடபேதமாகத் தந்தது (சிலப். 5.154). எனினும், முன்நூல்களில் பயிலும் கதலிகை

---

* பாடல் எண்கள், கம்பராமாயணம், கம்பன் கழகப் பதிப்பின் அடிப்படையில் அமைந்தன

(பெருங். 1.52.14), கதலிகைக்கொடி (மணி. 1.52), கதலிகை நெடுங்கொடி (பெருங். 1.38.8), சத்திக்கொடி (பெருங். 2.6.56), படாகை (பரி. 9.78), படாம் (பெருங். 2.2.155), விலோதம் (மதுரைக். 449), விலோதனம் (மணி. 5.5) என்பன இங்குக் காணப்படவில்லை. கொடியைக் குறிக்கும் பரியாயச் சொல்லுள் ஒன்றான 'கேது' என்பது 'தூமகேது' என்பதில் கம்பனிடம் (1427) காணப்படினும் அது 'புகைக்கொடி'யான வால் நட்சத்திரத்தைக் குறித்த நிலையில், இங்குக் கொள்ளப்படவில்லை.

இச்சொற்கள் வெறும் பரியாயச் சொற்களாகவோ அன்றி, வெவ்வேறுபட்ட கொடியைக் குறிப்பனவாகவோ அமையலாம். தேரில் கதலியும், மனிதர் ஏந்திய பதாகையும், யானை மீது கொடியும் தரப்படுவதுண்டு.

**கால் நெடுந் தேர் உயர் *கதலியும்* கரத்து**
**ஏனையர் ஏந்திய *பதாகை* ஈட்டமும்**
**ஆனையின் *கொடி*களும்...... ........** **(7120)**

ஆயின், எல்லா வருகையிலும், இன்ன சொல் இன்ன வகைக் கொடியைக் குறித்துத் தான் வருகிறது எனக் கம்பன் களத்தில் வரையறுக்க முடியவில்லை. தேர்க்கொடி, யானையின்பதாகை (7372), துவசத்தின் புரவித் திண்தேர் (8172), நிருதர் புயக் கல் செறிந்த கதலிக் கானம் (9604) போன்று சான்றுகள் பல வழி இதனை நிறுவலாம்.

'கொடி'ச் சொல் இன்றி, 'உயர்த்தல்' என்ற வினையடிப்படையிலும் கொடி குறிக்கப்படும் மரபுத் தொடர்ச்சியும் இங்குக் காணப்படுகிறது. மீனக் கொடியினனான காமன்,

கான் உயர்த்த தார் இராமன் மேல் நோக்கிய காதல் காரிகையர்க்கு

***மீன் உயர்த்தவன்* மருங்குதான் மீளுமோ** **(5035)**

எனவும், உவணக் கொடியினனான திருமால்,

***புள் உயர்த்தவன்* திகிரியும்** **(5843)**

எனவும் சுட்டப்படுவது சான்றாகும்.

## வருகை

கம்பனில் கொடிகளின் வருகை, சொற்சுட்டாகவும், அடைச்சேர்க்கையுடனும் எளிய வருணனை நிலையிலும், உயர்வு

நவிற்சியுடனும், உவமையாகவும், உவமிக்கப்பெற்றும், தற்குறிப்பேற்றத்துடனும் அமைவது காப்பியப் பொது மரபாகலாம். இதனால் காப்பியக் களனில் இன்றியமையாகக் கூறாகவும், உத்தியாகப் பயன்பட்டும் சிறப்புச் சேர்க்கக் காணலாம்.

வெண்மேகங்கள் ஆகாயமெங்கும் பரந்து ஓடி, நீருண்ணுவதற்காகக் கடல் நீரில் பரக்கின்றன; அதனைப் போல, அயோத்தி நகரின் மாடத்தில் ஆடுகின்ற வெண்கொடிகள் வான ஆற்றின் நீர் வற்றும்படி உண்ணுகின்றன எனக் கம்பனின் கற்பனை வியப்புச் சேர்க்கின்றது.

> **நானா விதமா நளிமாதிர வீதி ஓடி**
> **மீன் நாறு வேலைப் புனல் வெண்முகில் உண்ணுமா போல்**
> **ஆனாத மாடத்திடை ஆடு*கொடிகள்* மீப்போய்**
> **வான் ஆறு நண்ணி புனல் வற்றிட நக்கு மன்னோ (162)**

மேகம் மட்டுமன்றி இன்னும் பல பொருட்களும் கொடிக்கு உவமையாவதைக் கம்பனில் காணமுடிகின்றது. அரம்பை (481), அலகை (2806), கதலி (130), கை (480), திரை (5606, 8325), தூசு (5406), புள் (1435), மாதர் (2273) என இவை பல்கி அமையும். இவ்வுவமைகள் வழி, கொடியின் வண்ணம், வடிவம், அமைப்பு, அசைவு, எண்ணிக்கை, அழகு போன்ற பல தன்மைகள் வெளிப்பட வாய்ப்பு அமைகின்றது.

இராமன் சீதையை மணக்கவருகிறான் என்ற முன்னுணர்வில் மிதிலைக் கொடிகள் அரம்பையராகின்றன:

> **நிரம்பிய மாடத்து உம்பர் நிரை மணிக் *கொடிகள்* எல்லாம்**
> **தரம் பிறர் இன்மை உன்னித் தருமமே தூது செல்ல**
> **வரம்பு இல் பேர் அழகினாளை மணம் செய்வான்**
> **வருகின்றான் என்று**
> **அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடலின் ஆடக் கண்டார்**
> **(481)**

சூழலில் மாற்றம் ஏற்பட்டு, போர்க்களம் புலப்படுத்தப்படும் போது, இடத்திற்குப் பொருத்தமாகக் கொடிகள் அலகை போல்கின்றன:

> **காடு துன்றி விசும்பு கரந்தென**
> **நீடி எங்கும் நிமிர்ந்த நெடுங்*கொடி***
> **ஓடும் எங்கள் பசி என்று உவந்து எழுந்து**
> **ஆடுகின்ற *அலகை*யின் ஆடவே (2806)**

சிலப்பதிகாரத்தில், "வாரல்" (13.189-90) என மறித்துக் காட்டிய கையாகக் கொடியை இளங்கோ காட்ட, இங்கு "ஒல்லைவா" எனக் (480) கையசைத்து அழைப்பது புதுமையாகும். தற்குறிப்பேற்ற உத்தியாகிக் காப்பியக் கதைப்போக்கிற்குப் பயன்பட்டு இவை காப்பியக் களனில் இன்றியமையா இடனைக் கொடிக்கு அளிக்கின்றன.

கொடியே உவமையாதல் என்ற நிலையில், கானேகிய இராமன், காட்டில் தொங்கும் பாம்புத் தோல்களைச் சீதைக்கு, அயோத்தி நகரின் கொடிகளை நினைவூட்டுவதாகக் கூறிக் காட்டுவது அமைகின்றது.

**மதக் கதமா**
**அடங்கு பேழ்வயிற்று அரவு உரி அமை தொறும் தொடக்கி**
**தடங்கள் தோறும் நின்று ஆடுவ தண்டலை அயோத்தி**
**நுடங்கு மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்**
**(2049)**

இராமனிருக்குமிடம் சீதைக்கு மட்டுமல்ல, இராமனுக்கே அயோத்திதான் எனும் எண்ணம் இதில் எழுகின்றது!

பல கொடிகள் இணைந்து காட்டப்படுதல் என்ற பாங்கும் கம்பனுக்கு உரியது. கதலிக்கானம் (130), கொடியின் கானம் (2131), கொடியின் காடு (786), பதாகைக் காடு (8095) எனக் காட்டின் மரச் செறிவு போலக் கொடிகள் மிகுந்து அமைந்துள்ளன. கொடிப் படலை (742), கொடிக்குலங்கள் (9387), பதாகை ஈட்டம் (5556) என்பதிலும் கொடிப் பன்மை புலப்படுகின்றது. நகர அலங்காரத்திலும், போர்க்களப் படையெடுப்பிலும், விழாச் சூழலிலும், ஊர்வல எழுச்சியிலும் இக் கொடிப்பெருக்கு அமைவது தனித்த சிந்தனைக்குரியது. எண்ணற்ற கோடியாகக் கொடியமைவது கம்பன் காட்டும் காட்சி:

**வேதனை வெயிற்கதிர் தணிக்க மென் மழைச்**
**சீத நீர் தொடு நெடுங் *கொடியும் சென்றன***
**கோதை வெஞ் சிலையவன் கோலங் காண்கிலா**
**மாதரின் நுடங்குவ *வரம்புஇல் கோடியே*** **(2273)**

கொடிக்குறிப்புகள் பலவற்றில் கொடி அடையுடன் சுட்டப்படுதல் காப்பியப் பொது இயல்பின் வெளிப்பாடாகும். பெயரடை, வினையடை, பல அடையடுக்குதல், தொடராக அடை வருதல் என அமையும் பல நிலைகள் படைப்பாசிரியரின்

சொற்தேர்ச்சிப் புலமைக்குச் சிறந்த சான்றாகும். ஆடுகொடி (2324), உயர்கொடி (4791), சுடர்க்கொடி (3483), செழுமணிக்கொடி (480), நகுகொடி (2360), நிரைமணிக்கொடி (481), நெடுங்கொடி (2273), பொலங்கொடி (5406), பொன்கொடி (6548), பொன்திணிகொடி (9133), பொற்கொடி (மிகை. 1102), மாக்கொடி (2269), வான்கொடி (6712), வீரக்கொடி (8118) எனவும்; சித்திரப்பதாகை (5556), திண்பதாகை (9379), பெரும்பதாகை (8411), மின் உறு பதாகை (8120) எனவும்; வீரத்துவசம் (8172) எனவும் எளிய அடைப் பயன்பாடு பரவலாகக் காணப்படுகிறது.

## இடங்கள்

மக்கள் வாழ்விலும் மன்னர் வாழ்விலும் கொடி யிடம்பெற்றதால் அவை மிகப்பலவான இடங்களில் பறக்கவிடப் பெற்றமையையும் கம்பனின் காவியக்களன் தருகின்றது. அரசத் தலைநகரங்கள் கொடியுடன் காட்டப்படுகின்றன: 'போர்த்து எழு பொலங்கொடி இலங்கை' (5406) எனப் பொதுவாகவும், கொடிமதில் மிதிலை (754), கொடி மதில் அயோத்தி (10291) என நகர மதிலில் கொடியமைந்ததாகவும், மருவுவான் கொடி மாட இலங்கை (6712) என மாடத்திலும், இஞ்சி சூழ் மிதிலை புனையும் நீள் கொடிப் புரிசை (464) எனப் புரிசையிலும் கொடி யமைந்ததாகவும் காட்டப்படுகின்றன.

அரசச் சார்பு பற்றியே போர்ச் சூழலிலும் கொடிகள் காட்டப்படுகின்றன போலும். தானை மாக்கொடி (5606), நமர் கொடிப் படை (6127) எனச் சேனையும்; நெடுங்கொடித் தேர் கடாவி (580), கொடி நெடுந்தேர்மிசைக் கொண்டான் (1363) எனத் தேரும்;

**மேக்கு உயர் *கொடி*யுடை மேக மாலை போல்**
**நூக்கிய *கரி*களும் புரள நுங்கினான் (5633)**

**தீஉறு பொறியுடைச் செங்கண் *வெங்கைமா*.....**
**ஆய்பெருங் *கொடி*யன கடலில் ஆழ்வன (5639)**

என யானையும் காட்டப்பெறுகின்றன. மக்கள், மாளிகையிலும் மாடத்திலும், வீட்டிலும் (மனை) கொடியைப் பறக்கவிட்டிருக்கின்றனர்.

***கொடித்*** **திண் *மாளிகை* இடிந்தன (5529)**

***கொடி*****மிடை *மாடக்* குன்றை (6854)**

> கொடியடங்கின *மனைக்* குன்றம் (1804)

என இவை வரும். வீதிக்கொடி அல்லது வணிகத் தெருக்கொடி பற்றிய குறிப்பு சிலம்பில் 'கொடி நுடங்கு மறுகு' (14.70) என வருவதுபோல் கம்பனில் அமைந்திலது. கப்பல் - நாவாய்க் கொடிகள் உவமச் சார்பில் பொருந்துவது கம்பனில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

> *கொடி*யொடு *வங்கம்* வேலை கூம்பொடு படர்வபோல
> (2351)

> **பூவாய் வாளிச் செல் எறி காலைப் பரி பொன்ற**
> **கோ ஆர் விண் வாய் வெண்*கொடி* திண்பாயொடு கூட**
> **மா வாய் திண் தேர் மண்டுதலால் நீர் மறி வேலை**
> ***நாவாய்* மானச் செல்வன காண்மின் நமரங்காள்** (9590)

போர்க்களக் காட்சியில் கொடி தாங்கின யானை, கொடியுடைய வங்கமாகவும், கொடி தாங்கிய தேர், கொடியுடைய நாவாயாகவும் இவற்றில் இணைகின்றன.

## பெயரும் சின்னமும்

கம்பராமாயணம், குசத்துவசன் (1260), அழற்கொடியோன் (8370), மகர கேதனன் (965) எனக் கொடிச்சொற்களுடன் நபர் பெயர்களை அமைக்கின்றது.

கொடியில் இடம்பெறும் சின்னம், கொடிபற்றிய ஆய்வில் முதன்மையுடையதாக அமைந்தபோதும், கம்பன் காவியக் களனில் இது வருகை குன்றியே காணப்படுகின்றது. காமனின் மீனக்கொடி, இந்திரனின் இடிக்கொடி, இராவணனின் வீணைக்கொடி, கும்பகர்ணனின் சீயக்கொடி, திருமாலின் கருடக்கொடி ஆகியன குறிக்கப்படுகின்றன.

மன்மதனின் கொடிச்சின்னம் மீன் எனவும் (2625), மகரம் எனவும் குறிக்கப்படுகின்றது (401). இராமன் சூரிய குலமானபோதும் எங்கும் அச்சின்னக் கொடி காட்டப்படவில்லை. இராவணனோடுள்ள போரில், இராமனுக்கு உதவியாக இந்திரன் தேர் கொடுத்த சூழலில், அசனி ஏறு (9717), கொற்ற மா இடியின் ஏறு (9737),

> ***இந்திரன்* தேரின்மேல் உயர்ந்த ஏந்து எழில்**
> **உந்த அரும் பெருவலி *உருமின்* ஏற்றினை....** (9777)

என இந்திரனின் இடிக்கொடி வருகிறது. 'காண்தகும் நீண்ட வீணைக் கொடி' (3323), 'பாக வீணையின் கொடி' (3482), 'ஏழ் இசைக் கருவி வீற்றிருந்த .....தொல் கொடி' (7117) என்பன இராவணக்கொடிச் சின்ன விளக்கமாகும்.

திசை உறு துகிலது செறி மழை சிதறும்
விசை உறு முகிழது விரிதரு சிரனோடு
இசை உறு கருவியின் இனிது உறு *கொடியை...* **(9789)**

என, கொடியின் துணி, கொடிக்காம்பின் முகிழ் மற்றும் சிரம், படவரைவு ஆகியன இராவணன் கொடி வருணனையில் மட்டுமே விரிகின்றன.

கொடியால் ஆளை அடையாளம் காணுதல் உண்டு. போருக்கு வருவது இராவணனல்ல கும்பகருணனே என உணர்த்தி இனங்காட்டக் கொடிச்சின்னம் உதவுகிறது:

**வீணை என்று உணரின் அஃது அன்று விண்தொடும்**
**சேண் உயர் கொடியது வயவெஞ் *சீய*மால் (7381)**

கொடிச் சின்னமாகக் கலுழன்/கருடன் வருவது காப்பிய இறுதியில் அமைகின்றது (9790,91).

## கொடிக்கருத்து

மங்கலப் பொருளாகவும் அலங்காரம் செய்வதாகவும் அமையும் கொடி, தன்நிலையிலும் சார்நிலையிலும் சில கருத்து விளக்கத்துக்குப் பயன்படுகின்றது. ஊனுண்பறவையான கழுகும் காகமும் கொடியை மொய்த்தல் **தீய சகுனமாகக்** கரன்வதை, இராவணவதைச் சூழலில் கற்பிக்கப்பெறுகின்றன:

**நின்கொடியின் மிசைக் காக்கையின் கணங்கள்**
**பொருது வீழ்வன புலம்புவ நிலம்படப் புரள்வ (2944)**

**எழுது வீணை கொடு ஏந்து பதாகை மேல்**
**கழுகும் காகமும் மொய்த்தன (9724)**

துயர அறிகுறியாக அரைக்கம்பத்தில் கொடி பறக்கும் இன்றைய நிலைக்குச் சற்று வேறாக, கொடியே பறக்கவிடப்படாமை அமைந்தது. இராமன் காடேகி, தயரதன் மறைவுக்குப்பின் பரதன் அயோத்திக்கு வந்தபோது, இயல்பாக அயோத்தியில் குழுமிக் காணப்படும் கொடிக் கூட்டம் காணப்படவில்லை:

**அண்டம் முற்றும் திரிந்து அயர்ந்தாய் அமுது**
**உண்டு போதி என்று ஒண்கதிர்ச் செல்வனை**
**விண்தொடர்ந்து விலக்குவன போன்றன**
**கண்டிலன் கொடியின் நெடுங் கானமே (2131)**

ஏற்கெனவே, வீடுகளிலும் கோட்டையிலும் கொடியில்லாத நிலையைக் கொடி அடங்கின மனைக் குன்றம் (1804), கொடியின் ஆடை நல் அணி முனிந்தன அம்பொன் செய் இஞ்சி (1815) எனக் கம்பன் தருவார். இக்காட்சி, பிற இலக்கியங்களில்/ காப்பியங்களில் இல்லாததாகும்.

வெற்றிக்கு அறிகுறியாகக் கொடி அமைகின்றது என்பதை, 'வென்ற திண் கொடியொடு' (1042) என்பது போலப் பன்முறை இராமாயணம் பயன்கொண்டது. விழவுக்கு அடையாளமாகக் கொடியமைவதை,

**வெயில் விரவிய பொன்னின் மிடை கொடி மதி தோயும்**
**எயிலினில் நடுவாரும்......... (1186)**

எனக் 'கொடி நடுத'லில் காட்டப்படுகிறது. தோல்விக்கு அடையாளமாகக் கொடியிழப்புப் பொருந்துவது மறுதலை எண்ணமாகும். கொடி துணிதல், கொடி இறுதல், கொடி துளைக்கப்படல், கொடி எரிதல் என்பன போன்ற பலநிலைகள் போர்ச் செய்தியை மிகுதியாகத் தரும் கம்பராமாயணத்தில் காட்டப்படுகின்றன.

**கொடிஞ்சொடு கொடியின் காடு**
***அறுப்புண்ட* கால் இயல் தேர் (3023)**

**கொற்ற வெண்குடை கொடியொடும்**
***துணிபடக்* குறைத்தான் (7256)**

கம்பனிடம், வெண்மை நிறக் கொடியும், பல்நிறக் கொடியும் பற்றிய குறிப்புகள் கிடைப்பினும், வண்ணத்தால் ஏதேனும் தனித்த கருத்து உட்படுத்தப்பெற்றதாகத் தெரியவில்லை.

**வெள்ளிய கரியன செய்ய வேறு உள**
**கொள்ளை வான் கொடி நிரைக் குழாங்கள் தோன்றுவ**
**(1435)**

என வெண்மை, கறுப்பு, செந்நிறக் கொடிகள் விழாக் சூழலின் மகிழ்வு வெளிப்பாட்டில் அமைகின்றன. போர்க்களத்தின் வீரச் சூழலிலும் இப்பன்னிறக் கொடியிணைவு உண்டு.

*பல்நிறத்த* பதாகைப் பரப்பு எலாம்
செந்நிறத்தனவாய் நிறம் தீர்ந்தவே (7046)

வெண்கொடி வெற்றிச் சுட்டுடனோ சமாதானச் சுட்டுடனோ கம்பனில் அமைந்திலது. ஆனால் போர்ச் சூழலில் பெருகி வருகிறது. வெண்மை மிகுதி சுட்டிப் 'பனி வென்ற பதாகை' (8051) என்றும் வெண்கொடிகள் பலவாக அமைதல் பற்றி,

கால்கிளர் தேரொடு கால் வரையோடும்
மேல்கிளர் *பல்கொடி வெண்திரை* வீச...... (8325)

எனவும் சான்று அமையும்.

## முடிப்புரை

கம்பனில் கொடி பற்றிய குறிப்புகள் எண்ணிக்கை மிக்கு அமைவதுடன் பல எண்ணங்களையும் அறிய உதவுகின்றன.

கம்பன் புதிய சொற்களால் கொடியைக் குறிக்கின்றான் எனத் தெரியமுடிகிறது.

ஒருசில கொடிச் சின்னங்களே குறிக்கப்படுகின்றன. அவற்றிலும் 'இடி' எவ்வாறு வரையப்பெற்றிருக்கும் என்பது புலப்பட்டிலது.

துயர அறிகுறியாகக் கொடி பறக்காமை அமைகின்றது.

பல கொடிகள் அமைதல், பல வண்ணக் கொடிகள் அமைதல் என்பன புலப்படுகின்றன.

நிமித்தம், போர், வெற்றி, விழா போன்ற பல சார்புகள் உள.

இலக்கிய உத்தியாகவும் கொடிகள் அமைகின்றன.

# இடைக்காலக் காப்பியங்கள் I

## (கி.பி. 8–9நூ)

கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியிலடங்குகின்ற 11 காப்பியங்களுள், முதல் மூன்று காப்பியங்களான சிலப்பதிகாரம் (கி.பி. 2-3நூ), மணிமேகலை (5-6நூ), பெருங்கதை (7-8நூ) ஆகியவற்றின் கொடிக்குறிப்புகள் ஏற்கெனவே பார்க்கப்பெற்ற நிலையில்,[1] பிற காப்பியங்களுள், கொடிக்குறிப்புத் தராத வளையாபதி, குண்டலகேசி நீங்கலாக, ஆறு காப்பியக் குறிப்புகள் எஞ்சிய தரவுக்களனாகின்றன. கம்பராமாயணம், சிந்தாமணி, பாரதவெண்பா (8-9நூ), நீலகேசி, சூளாமணி (9-10நூ), பெரிய புராணம் (12நூ) என்னும்[2] இவற்றுள், ஒரு காலப்பகுதியினவாகத் தெரியவருகின்ற மூன்று காப்பியத் தரவுகளினடிப்படையில் தொடரும் செய்திகள் அமைகின்றன.

### வருகை

கம்பராமாயணத்தில், 259 இடங்களில் கொடி எனும் சொல்லும் துவசப் பொருள் தரும் பிற சொற்களும் அமைகின்றன. இவற்றில் 'கொடி' எனும் வருகையில் கொடியாகிய துவசப் பொருள் தராத இடங்களும் உள. மொத்தம் 160 குறிப்புகளே துவசம் என்னும் கொடிக் குறிப்புடையனவாகத் தேர முடிகிறது.

சிந்தாமணியில், 207 வருகையில் 62 மட்டும் கொடிக்குறிப்புத் தருகின்றன.

பாரத வெண்பா, கொடி எனும் சொல்லுடனும் அச்சொல்லின்றி உயர்த்தல், போன்ற வினைநிலையிலும், 132 கொடிக்குறிப்புகள் தருகின்றது. பிற பொருள்படும்படி கொடிச்சொல் இங்கு ஆளப்படாமை குறிப்பிடத்தக்கது.

---

1. பார்க்க: முதற் காப்பியங்கள்
2. காலக்குறிப்பு, அறிஞர் மு. அருணாசலம் அவர்களின் கருத்தை ஒட்டியது (An Introduction to Tamil Literature, 1970).

## கொடி – சொற்கள்

இம்மூன்று காப்பியங்களுள், கம்பராமாயணம் மட்டுமே, கொடி பற்றிய பரியாயச் சொற்களை, ஒப்பீட்டு நிலையில், கூடுதலாகப் பயன்படுத்துகின்றது.

கொடி - விரிமுகிற் குலம் எனக் கொடி விராயின - 2427[3]

கொடிபதாகை - பரந்த வெண்குடை சாமரை நெடுங்கொடி பதாகை -7524

துகில் - முகிலொடு வேற்றுமை தெரிகிலா முழுத் துகிலொடு நெடுங்கொடிச் சூலம் மின்னுவ - 128

துகில்கொடி - பல்கதிர்மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட துகில்கொடி - 482

பதாகை - காண்வரு நெடுவரைக் கதலிக் கானம் போல் தான் நிமிர்பதாகையின் குழாம் தழைத்தன - 130

கேதனம் - வள் உறை வயிரவாள் மகர கேதனன் - 965

துவசம் - கொய்ந் நிறைத்தாரன் குசத் துவசப்பேர் நெய்ந்நின்ற வேலவன் - 126

கேது - தூமகேது புவிக்கெனத் தோன்றிய - 1427 (புகைக்கொடி/வால்நட்சத்திரம்)

கதலி - கால்நெடுந்தேர் உயர் கதலியும் - 7121

தார்க்கொடி - தேர்க்கொடி யானையின் பதாகை சேண் உறு தார்க்கொடி என்று இவை ததைந்து - 7372

சிந்தாமணி, கொடி, கொடிப்பதாகை, பதாகை, துகிற்கொடி, தூத்துகில் என்ற ஆட்சிகளைத் தருகிறது.

கொடி - மீனுயர்த்த கொடி வேந்தனை வென்ற பொற்பிற்- 6

கொடிப்பதாகை - பரந்த பசும்பொற்கொடிப் பதாகையொடு கொழிக்கும் - 104

---

3. பாடல் எண்கள், கம்பராமாயணம், கம்பன் கழகப்பதிப்பின் அடிப்படையில் அமைந்தன.

பதாகை - பரந்தொளி யுமிழும் பைம்பொற் கண்ணடி
பதாகை தோட்டி - 629

துகிற்கொடி - இழியும் வெள்ளருவித் திரள் யாவையும்
குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே
- 34

தூத்துகில் - தொடுகழற் குரிசி னோக்கித் தூத்துகில்
வீசினானே - 1863

பாரதவெண்பா, கொடி, பதாகை, துகிற்கொடி, தூசு என்பதைத் தந்தது.

கொடி - பெருமை யரவக் கொடியோன் பேசில்
- 37

பதாகை - பரந்தோங்கு கொடியிற் பிணங்குதிறற்
பதாகையோடு - 466

துகிற்கொடி - ஆடரவத் துண்டத் துகிற்கொடியோன்
-255

தூசு - முன்னின்ற தூசிப்படை முழுதுந் தூசறுத்து
- 780

இச்சொற்களுள், கொடி என்பது முன்னிலக்கியங்களிலும் முதல் மூன்று காப்பியங்களிலும் காணப்பட்டதே. ஆயின் அக்காப்பியங்களில் ஆளப்படும் கதலிகை, கதலிகைக் கொடி, கதலிகை நெடுங்கொடி, கொடிபடாகை, சத்திக்கொடி, படாம், படாகை, விலோதம், விலோதனம் எனும் சொற்கள் இங்குக் காணப்படவில்லை. அங்குப் பயன்பாட்டில்/பயிற்சியில் இல்லாத கதலி, கேதனம், கேது, கொடிபதாகை, கொடிப்பதாகை, தார்க்கொடி, துகில், துகிற்கொடி, தூத்துகில், துவசம், தூசு என்பன இங்கு அமைகின்றன. பதாகை பாடபேதமாகச் சிலம்பில் படாகை என்பதற்குப் பதிலாக முன்பே அமைய, இங்குப் பதாகை என்பதே தொடர்கிறது.

## ஆட்சி

இம்மூன்று காப்பியங்களிலும் கொடியின் ஆட்சி பல்வேறு வகைப்பட்டு அமைகின்றது. அவ்வாட்சி நிலையில் மூன்று காப்பியங்களிடையேயும் ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. ஒரே காலக்கட்டத்தினவாகக் கருதப்படினும் சொல்நிலையிலும் ஆளுகையிலும் காணப்படும் இம்மாற்றம் தனித்த சிந்தனைக்குரியது. வேறுபட்ட ஆசிரியர்கள், வேறுபட்ட

இடங்களில் எழுதப்பெற்றமை, வேறுபட்ட மூலங்களைக் கொண்டமை, வேறுபட்ட யாப்பமைப்பு, வேறுபட்ட காப்பிய வடிவமைவு போன்ற பல கூறுகள் இதற்குக் காரணமாகலாம்.

வருணனைக் கூறாகக் கொடி பயன்படுதல், கம்பன் மற்றும் சிந்தாமணியில் மட்டுமே உண்டு; பாரத வெண்பாவில் காணப்படாமைக்கு அதன் காப்பிய அமைப்பு, வெண்பா வடிவு, முழுமையுறாத நிலை என்பன காரணமாகலாம். உவம உருவகச் சார்புடன் கற்பனைத் தோய்வுடனும், கவிஞர் தன் கருத்தை ஏற்றிக் கூறும் நிலையிலும் (தற்குறிப்பேற்றம்) கம்பனும் தேவரும் இதனைத் தருகின்றனர்.

**நானா விதமா நளி மாதிர வீதி ஓடி**
**மீன், நாறு வேலைப் புனல் வெண்முகில் உண்ணுமா போல்**
**ஆனாத மாடத்திடை ஆடு கொடிகள் மீப்போய்**
**வான் ஆறு நண்ணி புனல் வற்றிட நக்கு மன்னோ**
**(கம்பன். 162)**

**திருவ நீணகர் செம்பொனி னீடிய**
**உருவ வொண்கொடி யூழி னுடங்குவ**
**பரவை வெங்கதிர்ச் செல்வன் பன்மயிர்ப்**
**புரவி பொங்கழ லாற்றுவ போன்றவே (சிந்தாமணி. 126)**

உவமச் சார்புடன் கொடியைப் பயன்படுத்தும் நிலையிலும் இவ்விரு காப்பியங்களும் தம்முள் ஒப்பீட்டிற்குரியன. கம்பனில் கொடிக்கு உவமையாகக் கதலி (130), கை (480), அரம்பை (481), யமனின் நாவு (162), மேகம் (5553), வெண்திரை (8325), தூசு (5406), மாதர் (2273), அலகை (2806), புள் (1438) என்பன அமைகின்றன. சிந்தாமணியில், அருவி (34, 88), கூந்தல் (105), கை (143), திரை (2129), உரி (3002), கதலிக்கானம் (2212) என்பன அமைந்து ஒப்புமையும் வேற்றுமையும் கொள்கின்றன.

கதலி உவமையாவதைக் கம்பனும், தேவரும் கீழ்வருமாறு தருவது குறிப்பிடத்தக்கது. இது வெறும் ஒப்புமையாகவோ கருத்துத் தாக்கமாகவோ அமையலாம்.

**காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போல்**
**தாள்நிமிர் பதாகையின் குழாம் தழைத்தன (கம்பன்.130)**

**மாலிரு விசும்பிடை மணந்த வொண்கொடி**
**கால்பொரு கதலிகைக் கான மொத்தவே (சிந்.2212)**

கொடிக்குக் கை உவமையாவது சிலம்பில் காணப்பட்டு இக்காப்பியங்களிலும் தொடர்வது மரபு பின்பற்றலாகலாம்.

சிந்தாமணியில் கொடிக்கு அருவி உவமையாவதுடன், அருவிக்குக் கொடி உவமையாவது தனித்தன்மையுடையது.

**இழியும் வெள்ளருவித் திரள் யாவையும்**
**குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே (சிந். 34)**

வானத்தின் உரிபோலக் கொடி அமைகிறது எனச் சிந்தாமணி கூறுவதும், பாம்பு உரி கொடிபோல் அமைகிறது எனக் கம்பன் தருவதும் இவ்வாறே ஒப்பிடத்தக்கன.

**செம்பொ னெடுமதில்**
**மேனிரைத்தன வெண்கொடி யக்கொடி**
**வானுரிப்பன போன்று மணந்தவே (சிந். 3002)**

**மதக் கதமா**
**அடங்கு பேழ் வயிற்று அரவு உரி அமைதொறும் தொடக்கி**
**தடங்கள் தோறும் நின்று ஆடுவ தண்டலை அயோத்தி**
**நுடங்கு மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்**
**(கம். 2049)**

இவையும் இவை போன்ற உவமைகளும், கொடியின் வண்ணம், வடிவம், எண்ணிக்கை மிகுதி, அசைவு ஆகிய கூறுகளைப் புலப்படுத்தி நிற்கின்றன. மேலும் காப்பியத்தில் தற்குறிப்பேற்றம் வழி குறிப்பாகச் செய்திகள் தரப்பெறவும் இவை உதவுகின்றன.

பெயர் சுட்டும் நிலையில் 'கொடி' அமைதல் மற்றொரு ஆட்சியாகும். இதனைக் கொடியால் பெயர் குறிக்கப்படல், கொடிச் சின்னத்தால் நபர் இனங்காட்டப்படல் என இரு நிலையில் காணலாம். கம்பராமாயணம், குசத்துவசன் (1260), அழற்கொடியோன் (8370), மகர கேதனன் (965) என இதனை அருகிப் பயன்படுத்தும். சிந்தாமணி, கனகபதாகை எனும்பெண்பாத்திரத்தின் பெயரைச் செம்பொன் கொடி (881) எனத் தந்தது தனித்தன்மையுடையது. பாரத வெண்பா, பல பாத்திரங்களையும் பெயர் சுட்டாது, கொடி, கொடிச் சின்னத்துடன் மட்டுமே இனம் காட்டுவது தனித்தன்மையுடையது; இப்பெரு வரவு கம்பராமாயணத்தில் மீன் உயர்த்தவன் (5035), புள் உயர்த்தவன் (5843) என அருகியது. சிந்தாமணியில் காணப்படாதது. துரியோதனாதியர் இவ்வாறு பெயராலன்றித் தம்கொடியாலேயே அடையாளம் காட்டப்படுகின்றனர்.

துரியோதனனுக்குப் பாம்பு கொடி. எனவே, அரவுயர்த்தோன் (5), மாநாக முன்னுயர்த்த மன்னன் (19), அரவக் கொடியோன் (37), கோணாக மேந்தினான் (72), தொக்கிலங்கு துத்திச் சுடர்

நாக மேந்தினான் (83), கொற்ற வரவுயர்த்த கோமான் (111), மண்டவெழுந்த விளநாகக் கொடியோன் (141), கோணாக வேந்தன் (354) என்பன போன்று மிகப்பல (சுமார் 55) வருகைகள் அமைகின்றன. இத்துணை வருகை மிகுதி பிற எந்தப் பாரதப் பாத்திரத்திற்கும் வராமை குறிப்பிடத்தக்கது. தீயவனின் கொடி, தீமையின் பெருக்கத்தைக் குறிக்கும் நிலையில் இவ்வாறு பெருவரவு கொண்டு, குறிப்பாக அதனை உணர்த்தப் பயன்படுவதாகக் கருதமுடிகிறது.

தருமனுக்குக் கொடி முரசு. அவன் முரசுயர்த்த வேல் வேந்தன் (5), முரசுயர்த்தோன் (11), நெடுங்கொடிமேல் மாமுரசங் கொண்டோன் (43), முரி பணையின் மூரிக் கொடியான் (344), கொற்ற முரசுயர்த்த கோவேந்தன் (565), வென்றி முரசுயர்த்த கோமான் (687) எனப் பலவாறு (14 வருகை) குறிக்கப் பெறுகின்றான்.

கண்ணன், மாலுக்குரிய புட் (கருடக்) கொடியுடன் அருகிக் குறிக்கப்பெறுகின்றான்:

'பொங்கொளிசேர் புட்கரசா......' என்றான் புகழ்ந்து (437)

அருச்சுனன், குரக்குக் கொடியினனாகையால், 'கையால், வீரக் குரங்கு தேர்மேலுயர்த்த வரவோன் (470), கொற்றக் குரங்குயர்த்தான் (796) என ஒருசில குறிப்புப்பெறுகிறான்.

பீமன் சிங்கக் கொடிக் குறிப்புடன் சிங்கக் கொடிப்படையான் (573) எனவும்; விதுரன் 'மேகக் கொடியான்' (346) எனவும்; பீஷ்மன் பனைக் கொடியுடன், 'மல்லல் நெடும் பெண்ணை மாக்கொடியான் (523) ஏந்தியதோர் மொய்த் தூற்றுப் பூம்பெண்ணை முன்னுயர்த்த கோமானே (643) எனவும்; துரோணன் 'வேதக்குலக்கொடியான்' (681), கொடிமேல் வேதம் வலனுயர்த்தான் (604) எனவும் ஓரிரு குறிப்புகள் பெறுகின்றனர். பாத்திரப் பெயர்க் குறிப்பில்லாதே கொடிச் சின்னத்தால் இவ்வாறு பெயர் பெறுகின்றமையால், பாத்திர-கொடி உறவு முன்னமே தெரிந்தவர் மட்டுமே கதையைப் புரிந்துகொள்ள முடியும் சூழலும் ஏற்பட்டு, கொடி முதன்மை பெறுவது இங்கு அமைகின்றது. இது பாரத வெண்பாவில் மட்டும் காணப்படும் தனித்தன்மையாகும்.

## கொடிச்சின்னம்

இவ்வாறு பெயராக்கத்திற்கு உரியதாக அன்றியும் கொடிச் சின்னம் குறிக்கப்படுதல் மூன்று காப்பியங்களிலும் உண்டு. கம்பராமாயணத்தில் காமனின் மீன்கொடி, இந்திரனின் இடிக்கொடி,

இராவணனின் வீணைக்கொடி; கும்பகர்ணனின் சீயக்கொடி, திருமாலின் கருடக்கொடி ஆகியன குறிக்கப்படுகின்றன. இவற்றுள் காமனின் கொடி மட்டுமே பழந்தமிழிலக்கியங்களிலும், முதற்காப்பியங்களிலும் குறிக்கப்பட்டது என்பது ஏற்கெனவே முன் கட்டுரைகளில் தெரிவிக்கப்பெற்றதாகும்.[4]

மன்மதனின் கொடிச்சின்னம் தனிமகரம் (401), வள் உறை வயிரவாள் மகர கேதன(ன்,ம்) (965) மீன்வரு கொடி (2625), மீனுடை நெடுங்கொடி (3116), மீன் நெடுங்கொடி (4165) என மகரம் - மீன் எனச் சுட்டப்பெறுகின்றது. சிந்தாமணி இதனை மீனேறுயர்த்த கொடி (6), மன்மகர வெல்கொடி (644), மகர மெல்கொடி (912), சுறவுக்கொடி (3091) என மீன்ஏறு - சுறவு எனவும் சுட்டியது. பாரத வெண்பா குறிப்புத் தரவில்லை.

இந்திரனின் இடிக்கொடி, இராவணனுடன் இராமன் பொரும் யுத்த காண்டக் காட்சியில் இராமனேறிய தேரின் கொடியாகக் காட்டப்படுகிறது. இராமன் சூரிய குலம் என்பதால் அவன் கொடிச் சின்னம் சூரியனாக இருக்க முடியும் என்ற போதும், அது எங்கும் குறிக்கப்படவில்லை. இராமன் பொருதுவதற்கு உதவியாக இந்திரன் தேரளித்தான் என்ற சூழலில் அவன் கொடியே அத்தேரில் அமைகிறது. அசனி, இடி, உரும் எனக் குறிப்புகள் அமைகின்றன.

**அசனிஏறு இருந்த கொற்றக் கொடி (9717)**

**கொடியின் மேல் உறை........**
**கொற்ற மா இடியின் ஏறும் (9737)**

**இந்திரன் தேரின்மேல் உயர்த்த ஏந்து எழில்**
**உந்த அரும் பெரு வலி உருமின்ஏற்றினை (9777)**

இராவணனின் வீணைக்கொடி, சீதையை அவன் கவர்ந்து செல்லும்போது, பொருது சடாயுவால் ஒடிக்கப்பட்ட நிலையில் காட்டப்படுகிறது.

**காண்தகும் நீண்ட வீணைக்**
**கொடி பற்றி ஒடித்து உயர் வானவர் ஆசி கொண்டான்**
**(3323)**

---

4. பார்க்க: 1. சங்க இலக்கியம் அரசர் கொடிகள், மூன்றாம் இயல்.
2. கடவுளர் கொடிகள், நான்காம் இயல்.
3. முதற் காப்பியங்களில் கொடிகள், முன் சுட்டியது.

**மாகமால் வரை கால் பொர மறிந்தது மான**
**பாக வீணையின் கொடி ஒன்று கிடந்தது பார்மேல்**
**(3482)**

இராவணனின் வீணைக்கொடி யமனின் நாவை ஒத்தது என்ற இலங்கைக் காட்சியில், 'ஏழ் இசைக் கருவி வீற்றிருந்த.... தொல்கொடி' என அடை விளக்கம் பெறுகின்றது (7117). இராவணனுக்கு வீழ்ச்சி எனத் தீய சகுனச் சார்புடன்[5] காட்டப்படு நிலையில்,

**எழுது வீணை கொடி ஏந்து பதாகைமேல்**
**கழுகும் காகமும் மொய்த்தன (9724)**

என அமைக்கப்படுகிறது. ஓரிடத்தில் மட்டும் போர்க் காட்சியில் கொடியே வருணிக்கப்படலமைவது தனித்தன்மையுடையது.

**திசை உறு துகிலது செறி மழை சிதறும்**
**விசை உறு முகிழது விரிதரு சிரனோடு**
**இசை உறு கருவியின் இனிது உறு கொடியை**
**தசை உறு கணை கொடு தரையுற விடலும் (9789)**

பெரிய துணியால் கொடி அமைந்ததும் கொடிக்கோலின் முகிழ் மற்றும் சிரம் அமைந்தவாறும் சின்னத்தின் குறிப்பும் இதில் விளங்கும். மேலும் இருவர் எதிர்த்துப் போரிடும் நிலையை அவர் கொடிகளும், கொடிச் சின்னங்களும் மாறுகொண்டு பொருவதாகக் காட்டுவது கம்பன் புதுமையாகும். இராவணனும் இராமனும் பொரும் காட்சியில் வீணையும், இடியும் இவ்வாறு காட்டப்படுகின்றன.

**கொடியின் மேல்உறை வீணையும் கொற்ற மா**
**இடியின் ஏறும் முறையின் இடித்தன**
**படியும் விண்ணும் பரவையும் பண்பு அற**
**முடியும் என்பது ஓர் மூரி முழக்கினால் (9737)**

மற்றோரிடத்தில் போருக்கு வருவது இராவணனல்ல கும்பகருணன் என உணர்த்தி இனங்காட்ட கொடி - கொடிச் சின்னம் பயன்படுகின்றது. இங்கு மட்டும் கும்பகருணனின் கொடி சுட்டப்படுகிறது.

**வீணை என்று உணரின் அஃது அன்று விண்தொடும்**
**சேண் உயர் கொடியது வயவெஞ் சீயமால் (7381)**

---

5. கரன் வதையிலும், 'நின்கொடியின் மிசைக் காக்கையின் கணங்கள் பொருது வீழ்வன, புலம்புவ நிலம்படப் புரள்வ' (2944) என அமைவது ஒப்புமை.

கொடிச்சின்னமாகக் கலுழன்/கருடன் வருவது காப்பிய இறுதியில் அமைகின்றது.

> **இறைவன், அடையுறு கொடிமிசை அணுகினன் அளவுஇல்**
> **கடை உக முடிவு எழு கடல்புரை கலுழன் (9790)**

> **பண்ணவன் உயர்கொடி என ஒரு பரவைக்**
> **கண்அகன் உலகினை வலம் வரு கலுழன் (9791)**

இதுவே கலுழக்கொடி (36, 146, 150, 345, 713) எனவும் கருடக்கொடி (99) எனவும் பாரத வெண்பாவில் அமைகின்றது. சிந்தாமணி புள்ளணி கொடி (614), புட்கொடி (1727) என இதனைத் தருகின்றது.

சிந்தாமணி, இவை தவிர துரியோதனனின் பாம்புக்கொடியை மட்டுமே சுட்டியது.

> **அரவுயர் கொடியினான்ற னகன்படை யனுங்க வென்ற (456)**

சீவகனுக்கோ, கட்டியங்காரனுக்கோ, சச்சந்தனுக்கோ வேறு தலைவருக்கோ சின்னத்துடன் கூடிய கொடி குறிக்கப்படாமை சிந்தனைக்குரியது.

முன்சுட்டியபடி, பாரத வெண்பாவில், பலருடைய கொடிச்சின்னங்கள் அவரை இனங்காட்டி வந்ததுடன், தனிச்சுட்டாகவும் வருகின்றன.

பாம்புக்கொடி (148), கலுழக்கொடி (36, 146.....), கருடக்கொடி (99), குரக்குக்கொடி (635), கொடிக்குரங்கு (648), மேகத் தனிக்கொடி (685), மறைக்கொடி (679), பனைக்கொடி (473, 474.......), ஆளி நெடுங்கொடி (550) என்பன போன்றன அவை. இதிகாசங்களானமையால் இப்பெருக்கம் இராமாயண பாரதத்தில் மட்டும் அமைந்தன போலும். பாரத வெண்பாவில் ஓரிடத்தில் மட்டும்,

> **கொற்றக் *கொடிச் சிலையைக்* கூறாக்கி வன்கணையால்**
> ***வெற்றிக் கொடியோடு வில்லினையும்* – மற்று**
> **விடவாளி கொண்டே விரைந்தெய்தான்........ (733)**

என வருவது முத்தமிழ் மன்னரு ளொருவனான சேரனின் விற்கொடி (சிலை)யைக் குறித்ததோ என ஐயுறவு அமைகின்றது. சிலம்புக் காப்பியத்திற்குப் பின் இங்கு மட்டும் சேரனின் சின்னம் கொடியில் குறிக்கப்படுகிறது.

## பலகொடிகள் / பலவற்றுடன் கொடி

ஒரு கொடி, தனித்துக் காட்சிப்படுத்தப்படுதல் என்பதுடன், பல கொடிகள் இணைந்து காட்டப்படுதல் என்பதும் காப்பிய வரவில் அமைகின்றன. பலவேறு அலங்கார, மங்கலப் பொருட்களுடன் கொடி தரப்படுதலும் இதனுடன் இணைத்துக் காணத்தக்கது. இப்பின்நிலைகள் முறையே கம்பனிலும் சிந்தாமணியிலும் அமைகின்றன.

**கொடி தழை கவிகை வான் தொங்கல் குஞ்சரம்**
**படியுறு பதாகை மீவிதானம் பல்மணி**
**இடையிலாது எங்கணும் இசைய..... (2912)**

**குரைத்தெழு விதானத்தோடு தொங்கலும் கொடியும் சங்கும் (4367)**

**செங்கயலிரட்டை திருவார் சுடர் கண்ணாடி**
**பொங்கு கொடி........ (சிந். 2487)**

பலகொடிகள் காட்டப்படும்போது பயன்படுத்தப்பெறும் சொற்களில் பெருவகைமை அமைகின்றது. இது கம்பனில் தனித்தன்மையாகும்.

**செழு மணிக்கொடிகள் என்னும் கைகளை (480)**

**நிரம்பிய மாடத்து உம்பர் நிரைமணிக் கொடிகள் எல்லாம் (481)**

எனக் கள் விகுதி பெற்றுப் பன்மை காட்டுவதுடன், கதலிக் கானம் (130, 9604), கொடிப்படலை (742), கொடியின் காடு (786, 3023), மலிந்த மாக்கொடி (2269), கொடிக்குலங்கள் (9387), மிடைந்த கொடி (9320, மிகை 1024), கொடியின் கானம் (2131), கொடி விராயின (127), கொடிநெருங்கின (2111), பதாகை ஈட்டம் (5556, 7120), பல்நிறத்த பதாகைப் பரப்பு (7046), பதாகைக்காடு (8095) என்பன போன்ற பயன்பாடுகளும் அமைகின்றன. சிந்தாமணியில்,

**போழு மால்விசும்பெனப் பல பொலங்கொடி யெடுமின் (2391)**

**ஒள்ளிசைச் சூலந் தெண்ணீ ருலாமுகில் கிழிக்கு மாடக்**
**கொள்கொடிக் குழாத்தி னாலும்......... (2527)**

**செம்பொன் நெடுமதில் மேனிரைத்தன வெண்கொடி (3002)**

என பலகொடி, கொடிக்குழாம், நிரைத்தகொடி என அருகிப் பயிற்சி அமைகின்றது. பாரத வெண்பா,

மன்னர்
வெருவத் தேர் பல் கொடியும் வெண்துகிலும் வீழ்த்தான்
இருபத்தேழம்பினால் எய்து (497)

என ஒரு குறிப்புத் தந்தது.

## அடை/தொடர்

கொடிக் குறிப்புகள் பலவற்றில் கொடி, அடையுடன் சுட்டப்படுதல் என்பது காப்பிய இயல்பாகும். பெயரடைகளும் வினையடைகளும் ஒன்றிற்கு மேற்பட்ட அடைகளும் காணப்படுவதுடன், நீண்ட தொடர் விளக்கத்துடனும் கொடிக்குறிப்புகள் அமைகின்றன. ஆடுகொடி (2324), நகுகொடி (2360) எனவும், உயர்கொடி (9791), சுடர்க்கொடி (3483), செழுமணிக்கொடி (480), நிரைமணிக்கொடி (481), நெடுங்கொடி (2273), பொலங்கொடி (5406), பொன்கொடி (6848), பொன்திணிகொடி (9133), பொற்கொடி (மிகை. 1102), மாக்கொடி (2269), வான்கொடி (6712), வீரக்கொடி (8118) எனவும், சித்திரப்பதாகை (5556), திண்பதாகை (9379), பெரும்பதாகை (8411), மின்உறுபதாகை (8120) எனவும் வீரத்துவசம் (8172) எனவும் எளிய ஓரிரு அடைகள் கம்பனில் பரவலாகக் காணப்படுகின்றன.

வெயில் விரவிய பொன்னின் மிடை கொடி (1186)

முகிலின் வண்ணத்
துகிலொடு தொடுத்த செம்பொன் தகட்டிடை தொடுத்த முத்தின்
நகுகொடி....... (2360)

காடுதுன்றி விசும்பு கரந்தென
நீடி எங்கும் நிமிர்ந்த நெடுங்கொடி (2806)

என்பன போல இவை தொடராகி நீண்டமைதலும் கம்பனில் பெருவரவிற்றாம்.

சிந்தாமணியும் மிகப்பல அடைகளைப் பயன் கொள்கின்றது. ஆடு கொடி (501, 2483), இடுகொடி (2477), இரவிதோய்கொடி (256), ஒண்கொடி (2151), குஞ்சிமாண்கொடி (143), கேழ்கிளர் பூங்கொடி (529), செம்பொன் நீள்கொடி (410) நிழறவழ் கொடி

(602), நெடுங்கொடி (88, 1444), பசும் பொற்கொடி (104), பூங்கொடி (1446), பொங்குகொடி (2487), பொலங்கொடி (2391), மின்றவழ்கொடி (437), மின்னுங்கொடி (2175), மொய்கொள் நீள்கொடி (1251), வான்பொற்கொடி (105), என்பனவற்றுடன் செம்பொனின் நீடிய உருவ வொண்கொடி (126), வானக்கி நின்று நுடங்கு கொடி (1866), சுரும்பொடு மணிவண்டார்க்குந் துகிற்கொடி (3043) என்பன போன்ற தொடர்களும் காணப்படுகின்றன. பாரத வெண்பா, அருங்கொடி (650), எழிற்கொடி (76), குலக்கொடி (695), கொற்றக்கொடி (624), தனிக்கொடி (702), துகிற்கொடி (295), நெடுங்கொடி (43), பொலங்கொடி(699), மாக்கொடி (630), முனைக்கொடி (680), வீரக்கொடி (543), வீரத்தனிக்கொடி (578), வெல்கொடி (73), வெற்றிக்கொடி (733) எனச் சில அடைநிலையே தந்தது; நீண்ட தொடர்கள் அமைக்காமைக்கு வெண்பா யாப்பு நிலையும் காரணமாகலாம்.

## கொடியமையும் இடங்கள்

கொடி பறக்கவிடப்படும் இடங்களாகப் பல அமையலாம். கொடியின் பரியாயச் சொற்கள், குறிப்பிட்ட வெவ்வேறு இடங்களில் பறக்கவிடப்பட்ட கொடியைக் குறிப்பதாகத் தெரியவில்லை. படை, யானை, தேர் என்பன பெரும்பாலும் போர்ச்சூழலில் கொடிதாங்கியதாக அமைகின்றன[6]. மதில், எயில், நகர் என்பன அரசச் சார்பில் கொடி பறக்கவிடப்படும் இடங்களாகலாம்.[7] வாயில், கோயில், மாளிகை, மாடம், வீடு

---

6. படை - ஆடுகொடிப்படை - கம். 2324.
முன்னின்ற தூசிப்படை - பாரத. 780.
யானை - ஆனைப் பதாகையால் மறைந்தவால் நெடுவானம் - கம். 7032.
தேர் - தேர்க்கொடி யானையிற்பதாகை - கம். 7372.
கந்தார் கடாத்த களிறும் கொடித் தேர்க ளூறும் - சீவ. 2564.
பொலங்கொடித் தேர் மேற்புரள மோதி - பாரத. 699.

7. மதில் - கொடி மதில்குடுமித் தலை. - கம். 7019.
காதங்கடந்தபின் கன்னிக் கொடிமதில். - சீவ. 525.
*எயில் - வெயில் விரவிய பொன்னின் மிடை கொடி மதி தோயும் எயிலினில் நடுவாரும். - கம். 1186.
(இஞ்சி - கம். 1815; புரிசை - கம். 1164)
*நகர் - இக்கொடி நகர் இருந்தது இன்னும். - கம்.- 6844.
குலந்தரு கொற்ற வேலான் கொடிநகர் காக்க என்றான் - சீவ 2141.
கூர்முகத்து வாள் அமரர் கோமான் கொடிநகரில் - பாரத.474.
**மிதிலைமதில்/நகர் - கொடி மதில் மிதிலை - கம். 754.
அயோத்தி " - கொடி மதில் அயோத்தி. - கம். 10291.
இலங்கை " - போர்த்து எழு பொலங்கொடி இலங்கை - கம்.5406.

ஆகியன காட்டும் கொடிகள் அரசு மற்றும் சமுதாயச் சார்பு காட்டலாம்.[8] மக்களின் மாளிகை/மாட/வீடுகளில் பறந்த கொடிகள் தனிக்கொடிகளாக அமைந்திருக்கக் கூடும். நாவாய், கப்பற் கொடிகளை நேரடியாகவும் உவமை நிலையிலும் கம்பனும் சிந்தாமணியும் காட்டுவதில்[9] வணிகச் சார்பு நிலை அமையலாம். பயணக்கப்பல்/வணிகக்கப்பல் என வேறுபடுத்திக் காணும் வாய்ப்பிருப்பின் இது இன்னும் தெளிவுபடலாம்.

இக்குறிப்புகளனைத்தும், மன்னர், மக்களின் வாழ்வில் கொடிகள் எத்துணை மிகுதியான இடம் கொண்டன என்பதை வலியுறுத்தித் தெரிவிக்கின்றன.

## கொடி – கருத்துகள்

கொடி வழியாக, அடையாளமாகவும், குறிப்பாகவும், சில கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவை தனித்த பார்வைக்கு உரியன.

கொடி, வெற்றிக்கு அறிகுறியாக அமைகின்றது என்பது அவற்றில் ஒரு கருத்தாகும்

**வென்ற திண் கொடியொடும் நெடுவிதானமும் விராய்**
**நின்றவெண் குடைகளின் நிழலுமே நிழல் எலாம் (1042)**

என்பது கம்பராமாயணம். பாரத வெண்பா, 'மின்னு மணிநாகம் வெல்கொடிமேல் தானுயர்த்த' (73) என்பதில் வெற்றித் தொடர்பு சுட்டியது. சிந்தாமணி, வெற்றி பெற்றவரைக் 'கொடியெடுத்தவர்' எனக் குறிப்பிட்டு, வெற்றி - கொடிச் சார்பைக் காட்டியது.

---

8. வாயில் - கொடியெழுந் தலமருங் கோயில் வாயில்கள் - சிந். 2406.
கோயில் - இன்னுரை கொண்டான் கொடிக்கோயி லெய்தினான் - சிந்.2895.
மாளிகை- மாளிகைக் கொடி யிடை தரள வெண் கோவை சூழ்வன - கம். 129.
மாடம் - குன்றுகண் டனைய கோலக் கொடி நெடுமாட மூதூர் - சிந். 2374.
ஆனாத மாடத்திடை ஆடு கொடிகள் - கம். 162.
நிரம்பிய மாடத்து உம்பர் நிரைமணிக்கொடிகள் எல்லாம் - கம். 481.
வீடு - கொடி அடங்கின மனைக் குன்றம், கம். 1804.

9. கப்பல் - கொடியொடு வங்கம் வேலை கூம்பொடு படர்வ - கம். 2351
ஆய் பெருங் கொடியன கடலின் ஆழ்வன
பாயுடை நெடுங்கலம் படுவ போன்றவே - கம்.5639.
ஆடுகொடி உச்சி அணி கூம்பினுயர் பாய் மூன்று - சிந். 501.
நாவாய் - கோ ஆர் விண்வாய் வெண்கொடி திண்பா யொடு கூட.....
........ நீர் மறி வேலை
நாவாய் மானச் செல்வன காண்மின் - கம். 9590.

கொடியெடுத்தவர்க்கு நல்கு,
கொழித்துணர் குமர...... என்றான் (2911)

இவ்வாறு கொடி, வெற்றியின் சின்னமாக அமைந்ததனால் போலும், வீரர்கள் தங்கள் மார்பில் கொடியெழுதுகின்ற காட்சியை சிந்தாமணி வழங்குகிறது. இது புதுமையானதும் பிற இலக்கியங்களில் காணப்படாததுமாகும்.[10]

கொடிநெடுந் தேர்க ணூறிக் கொய்யுளை மாக்கள் குத்தி
இடுகொடி யணிந்த மார்ப ரிருவிசும் பேறச் சீறி
–சிந். 2145.

ஏந்தெழி லாகஞ் சாந்தி னிடுகொடி யெழுதி – சிந். 2181.

கொன்வாளினர் கொழுந்தாரினர் கொடிமார்பினர் திரிந்தார்
– சிந். 2264

ஏக்கொசி விலாத வில்லா னிடுகொடி யகல மின்றேன்
– சிந். 2477

ஆடுகொடி யணிந்த வுய ரலங்கல் வரை மார்பன்
– சிந். 2483

என இதன் பயிற்சி பல்கியது. சீவகன் பெற்ற நால்வகைச் சிறப்புகளைக் கொடியெடுத்ததாகத் தருவது தனித்தன்மையுடையது (ஆதியந் தகன்ற நான்மைக் கொடியெடுத் திறைமை கொண்டான் - 3082).

கொடியெடுத்தல் வெற்றி என்பதால், கொடியிழத்தல் தோல்வி என்பது எதிர்நிலையில் புலப்படுகின்றது. கொடி துணிதல், கொடி இறுதல், கொடி துளைத்தல், கொடி துரத்தல், கொடி எரிதல் எனப் பல நிலைகள் போர்ச் செய்தியை மிகுதியாகத் தரும் கம்பராமாயணத்தில் அமைகின்றன.[11]

கொடிஞ்சொடு கொடியின் காடு
அறுப்புண்ட கால் இயல் தேர் (3023)

கொற்ற வெண்குடை கொடியொடும் துணிபடக் குறைத்தான்
(7256)

---

10. மகளிர் தங்கள் மார்பிலும் தோளிலும் கரும்பும் வல்லியும் எழுதும் அழகு ஒப்பனை நிலையிலிருந்து இது மாறுபட்டமைவதாகத் தெரிகிறது. 'கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி' - சிலம்பு. 2.29.

11. பார்க்க: கம்பன். 2952, 2991, 3023, 7256, 7493, 7524, 7816, 7858, 8118, 8491, 8495, 8496, 8540, 9777-78, 9789.

சிந்தாமணி இதனை, கொடியிடுதல் என வெளிப்படத் தோல்வியாகத் தந்தது:

> **மின்றவழ் கொடியொடிட்டு வேற்படை யுடைந்த வன்றே (439)**

பாரத வெண்பா, கொடியறுத்தலைத் தருகின்றது; பகைவனின் வெற்றிக் கொடியை அறுத்து அவரைத் தோல்வியைத் தழுவச் செய்வதாக இது அமைகின்றது.

> **வில்லறுத்து நாணறுத்து வெற்றிக் கொடியறுத்து**
> **மல்லறுத்து ஆங்கு ஆனை மதமறுத்து...... (752)**

கொடி பறக்காமை துக்கக் குறியாக அமையும் போலும் என்பது கம்பராமாயணத்தில் வெளிப்படுவது இன்றைய நிலையில், அரைக்கம்பத்தில் கொடி பறக்கவிடப்படும் சூழலுடன் ஒத்து வைத்துக் கருதத்தக்கது ஆகலாம்.

மகிழ்வு, மங்கலம், ஆரவாரம், விழா எனும் சூழல்களில் கொடிபறத்தல் என்பதற்கு மறுதலையாக இது அமைகின்றது போலும். பரதன் அயோத்திக்குத் திரும்பினபோது இயல்பாக அயோத்தியில் குழுமிக் காணப்படும் கொடிக் கூட்டத்தைக் காணவில்லை என இதனைத் தருவார் கம்பர்.

> **அண்டம் முற்றும் திரிந்து அயர்ந்தாய் அமுது**
> **உண்டு போதி என்று ஒண்கதிர்ச் செல்வனை**
> **விண்தொடர்ந்து விலக்குவன போல்வன**
> ***கண்டிலன் கொடியின் நெடுங் கானமே*** **(2131)**

ஏற்கெனவே, வீடுகளிலும், கோட்டையிலும் கொடியில்லாத நிலையை, கொடி அடங்கின மனைக் குன்றம் (1804) கொடியின் ஆடை நல் அணி முனிந்தன, அம்பொன் செய் இஞ்சி (1815) எனத் தருவார். இக்காட்சி பிற காப்பியங்களில் காணப்படாதது.

கொடிமீது காக்கை வீழ்தல் தீய சகுனமாக அமைவது ஏற்கெனவே சுட்டப்பெற்றது கம்பனில் மட்டுமே உண்டு.

வெண்மை நிறக் கொடியும் பல்நிறக் கொடிகளும் பற்றிய குறிப்புகள் கிடைப்பினும் குறிப்பிட்ட வண்ணங்களால் ஏதேனும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதா என்பது புலப்பட்டிலது. கம்பன் பல வண்ணக் கொடிகளைத் தருவான்.

> **வெள்ளிய கரியன செய்ய வேறு உள**
> **கொள்ளை வான் கொடி நிரைக் குழாங்கள் தோன்றுவ**
> **(1435)**

என விழாச் சூழல் வண்ண வண்ணக் கொடிகளுடையதாகத் தரப்படுகின்றதெனலாம். போர்ச் சூழலிலும் பல நிறக் கொடிகள் உண்டு போலும்.

பல்நிறத்த பதாகைப் பரப்பு எலாம்
செந்நிறத்தனவாய் நிறம் தீர்ந்தவே (7046)

சிந்தாமணியில் 'தூத்துகில் வீசும்' சூழலை, துகில் வீசிப் போரை நிறுத்துதல் எனப் புரிந்துகொள்ள முடிவதால், துகில் - வெண்மை நிறத்துணி, போர்நிறுத்தம், சமாதானம் என்பதைக் குறித்ததாக ஒருவாறு கருத முடியலாம் (1863).

## முடிப்புரை

முந்தைய முதல் மூன்று காப்பியங்களினை நோக்க, இக்கட்டுரைக்குத் தரவுக்களனாக அமைந்த மூன்று காப்பியங்களிலும் கொடிக்குறிப்பு எண்ணிக்கைகள் மிக்கு அமைகின்றன.

முந்தைய காப்பியங்களிலமையாத பல புதிய சொற்களை இக்காப்பியங்கள் தருகின்றன. அதே வேளை பழையன கழிதலும் காணப்படுகிறது.

காப்பியப் பாத்திரங்கள் தம் பெயராலன்றி கொடி/கொடிச் சின்னச் சார்புடன் சுட்டப்படும் பெரும்பான்மை பாரத வெண்பாவில் மட்டுமே உண்டு.

துயர அறிகுறியாக, கொடி பறக்காமை அமைதல் கம்பனில் காணப்படும் தனித்த கூறாகும்.

போர் நிறுத்தம்/சமாதானத்திற்கு வெண்துகில் வீசுதல் சிந்தாமணி மட்டுமே தரும் செய்தி.

கொடியின் அளவு, வடிவம், செய்பொருள், வண்ண நிலைகள், சின்னத்தின் முழுமையான தெளிவான வரைவு விளக்கம் போன்றன இவ்விலக்கியக் குறிப்புகளிலும் புலப்பட அமையவில்லை.

இக்குறிப்பிட்ட காலப்பகுதியிலும் கொடி பற்றிய சிந்தனை மிகுதியாக அமைந்துள்ளது என்பது தெரியவருகிறது.

கதைகளும் காப்பியங்களும் தமிழ் மூலத்தின அல்லாத போதும், முந்தைய காலத் தமிழிலக்கியங்கள் போல இவையும் கொடிக் குறிப்புக்குப் பரவலாக இடம் தருகின்றன என்பது உண்மை.

# இடைக்காலக் காப்பியங்கள் II
## (கி.பி. 9–12நூ)

நீலகேசி, சூளாமணி (கி.பி. 9-10 நூ.); பெரியபுராணம் (12 நூ.) ஆகிய காப்பியக்களன் தரும் கொடிக்குறிப்புகள் தனியாய்வுக்குட்படுத்தப்பெறுகின்றன. இவற்றுள் பெரியபுராணமே கொடியாளுகையில் எண்ணிக்கை மிகுதி காட்டுகின்றது. பிறவற்றுள், சூளாமணியை நோக்க, நீலகேசி கொடி ஆட்சிச் சுருக்கம் கொள்வதற்கு அளவு, பரப்பு மற்றும் கதைப்பாங்கு காரணமாகலாம்.

பிறவிலக்கியங்களில் போலவே இங்கும் 'கொடி' எனும் சொல் வருகை எல்லாம், பொருண்மையில் கொள்ளும் கொடியை மட்டும் குறிப்பிடவில்லை. நீலகேசியின் 9 வருகையில் தாவரக்கொடி, மின்னல் கொடி போன்றன நீங்கலாக நான்கு குறிப்பும்; சூளாமணியில் சுமார் 110 தொடர்புடைய கொடிச் சொல்லாட்சியில் 42 குறிப்பும்; பெரியபுராணத்தில், ஏறத்தாழ 160 வருகையில் 77 குறிப்பும் மட்டுமே ஏதேனும் ஒருவகையில் இங்குக் கருதப்பெறும் கொடிப் பொருண்மைச் சார்புடன் அமைகின்றன; இதனால் 50%-க்கும் குறைவாகவே கொடிச்சொல், இங்குள்ள பொருண்மையில் வருவது புலப்படுகின்றது.

### சொல் ஆளுகை

நீலகேசி 'கொடி'ச் சொல்லை மட்டுமே பயன்கொண்டது. சூளாமணி, துகிலிகைக் கொடி (41), கதலிகை (141), பதாகை (839), கேது (1335) எனப் பிற சொல்லாளுகையையும் தந்தது. பெரியபுராணம் கேதனம் (திருநாட்டு. 33), பதாகை (தடுத். 100), தூசு (திருஞான. 1201), வல்லி (நின்றசீர். 5) என்பனவற்றையும் தருகின்றது. இவையனைத்தும் முன்னிலக்கியங்களில் பயின்றனவாம்.

பெயர்ச் சொல்லாலன்றி, 'ஏந்து', 'உயர்த்த' என வினைச்சொல்லாளுகையுடன் கொடியுணர்த்தல் நீலகேசியில்

ஆளுகை பெறாமலமைய, சூளாமணியில் அருகியும், பெரியபுராணத்தில் பரவலாகவும் வருகின்றது. இது முன்னிலக்கியக் காலங்களிலும் காணப்படும் தொடர்ச்சியாகும்.

**துண்டவேகப் புள்ளுயர்த்தான் (சூளா. 1349)**

**உவண மேந்தினான் (சூளா. 1339)**

பெரியபுராணத்தில், சிவனின் காளைக்கொடிச் சார்புடனே இது அமைகின்றது.

**பெற்றம் உயர்த்தவர் அமர்ந்த பிறபதியும்**
**(பெரிய. திருஞான. 1145)**

கொடிச்சின்னத்தால் நபர் அடையாளங்காட்டப்படுதல் என்றதன் முதிர்ச்சியாக, கருடத்துவஜன், சூளாமணியில், 'சுவணகேது' (1343), 'விரிசிறை உவணஞ் சேர்ந்த வென்றி நற் கொடியினன்' (1181) என்று சுட்டப்படுகிறான். இதிலமையும் தூமகேது (1328), புகைக்கேது (1326) என்ற பெயர்களும் இந்நிலையில் கருதத் தக்கன.

பெரியபுராணம் பாண்டியனைப் பன்முறை மீனவன் (திருஞான. 639, 714, 721, 734, 772, 773, 802, 859, 872, 875, 954, 1050, 1051..........) எனச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது. சிவபிரானைப் பன்முறையும் கொடிச்சின்னம் வெளிப்படச் சுட்டியமைப்பதும் கருதத் தக்கது.

**சேவாருங் கொடியாரை (ஏயர். 125)**

**கொடி சேர் விடையார் (கழறிற். 31)**

தலைவரை இனங்காட்டும் கொடிப் பயன்பாடு, இவற்றில் புலப்படுகின்றது. இந்நிலையும் முன்னிலக்கியக் கொடிக் கோட்பாட்டுத் தொடர்ச்சியாகும்.

## கொடிப்பயன்பாடு

நீலகேசி, அறைகூவற் கொடியைக் காட்டி, காப்பியக் களனில் புதிய கொடிப்பயன்பாட்டைத் தருவது குறிப்பிடத் தக்கது. போட்டிக்கு நாவல் கிளையை நடுதல் என்பதில் இது தோற்றம் கொண்டிருக்கலாம்.*

---

* பார்க்க: 'சமயவாதியாகப் பெண்', தமிழர் சமூகவியல், அன்னி தாமசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2000 (அச்சு).

கட்டுரை பலசொல்லி காவல் நெடுங்கடை நாவலை முன்
னட்டிவ ணகரிட நகை செய்து புகுந்த விந்நன்னுதலை
(228)

இதனால், நீலகேசி 'சம்பு விரதி' (சம்பு = நாவல்) எனப்படுதலும் சுட்டுப்பெறுகின்றது:

ஒன்றாத கொள்கையா ருலகிலுள யாவரையும்
வென்றாள் மற்றிவள் சம்புவிரதியாய் திரிந்தெங்கும் (286)

கொடி என்ற சொல்லுடனேயே இது குறிபெறல் சுட்டற்குரியது:

ஆங்கவன் சொல்ல வவ்வத்தின புரத்து
ளோங்க வொருகொடி நட்டுரைக் கிற்பவ
னாங்க ணெவர்க்கு மறையென் றிருந்தவச்
சாங்கியன் தன்னைத் தலைப்பெயச் சென்றாள் (78)

போட்டிக்கழைக்கக் கொடிநடுதல் பற்றிய இக்குறிப்பு, இதற்கு முன்பு சங்க இலக்கியத்தில் அமைந்தமை இத்துடன் ஒப்பிடத்தக்கது. பரிபாடலும், பட்டினப்பாலையும் இதனைத் தருகின்றன.

பல்கேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ் குறித் தெடுத்த வுருகெழு கொடியும் (பட்டி.169-171)

எனச் சொற்போர் - உறழ் - குறிக்கக் கொடி - உருகெழுகொடி - வண்ணக் கொடி - நடப்பட்டிருக்கிறது. புகார் நகரில் நல்லாசிரியரால் எடுக்கப்பட்ட இக்கொடிக்கு வேறாகப் பல்கலைத் துறையினரும் போட்டிக்கொடியான படாகை நிறுவி வெற்றிக் கொடியும் ஏற்றியதைப் பரிபாடலின் வையைக்கரைக் காட்சி தருகிறது.

ஆடல் நவின்றோ ரவர்போர் செறுப்பவும்
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்
வல்லாரை வல்லார் செறுப்பவும்
அல்லாரை யல்லார் செறுப்பவு மோர்சொல்லாய்ச்
செம்மைப் புதுப்புனற்
தடாக மேற்ற தண்சுனைப் பாங்கர்ப்
படாகை நின்றன்று
பேஎ எஃகினவை
வென்றுயர்த்த கொடி விறல் சான்றவை (பரி. 9.72-80)

விழாச் சூழல் அமைப்பில் இப்போட்டிகள் கொடி - படாகை - நிறுவித்தரப்படுதல், முன்சுட்டிய நீலகேசியில் இன்மை வேறுபாடாகும். அங்கு, அத்தினபுரத்தில் சாங்கியன் சமயப்போட்டிக்காகக் கொடிநட்டமை சுட்டப்படுவதால், தென்னகத்தில் - தமிழகத்தில் மட்டுமன்றி போட்டிக்கொடி எடுத்தல் நாவலந்தண்பொழிலின் பொதுப்பண்பாகவும் புலப்படும். இங்குக் கொடி, அறைகூவலுக்கு அறிகுறியாகவும், வெற்றியைக் குறிப்பதாகவும் அமைகின்றது.

## மன்னர் கொடி

பெரும்பாலும் கொடி என்பது ஆட்சி, அரசு, மன்னர் சார்புடையதாக அமைவது பொது இயல்பு. கொடியுரிமை அரசனுடையது என்பதால் முரசு முழங்க அதை நாட்டுமாறு அவனே கூறுகிறான்.

> முரசொடு நெடுங்கொடி முழங்க நாட்டுக
> விரைவொடு படுகென வேந்த னேயினான் (நீல. 226)

தமிழகக் கள - கதை நிலை நீலகேசி - சூளாமணியில் காணப்படாமையால், மன்னர் கொடிநிலை அவற்றிற்கும் பெரியபுராணத்திற்கும் வேறுபட்டு அமைகின்றது. சூளாமணியில்,

> **கண்ணிலாங் கனக மாடக் கதலிகை முகிலோடாடி**
> **விண்ணிலா விருண்டு தோன்றும் விசயகூடத்து மன்னர்**
> **(835)**

என விசயகூட அரசனின் கொடிச்சுட்டு அமைய, கருடத் துவஜனின் உவணக்கொடி பன்முறை தரப்படுகின்றது (1339, 1349). இதில் சின்னமாக அமையும் கருடன் விரிந்த சிறகுடன் காட்சிப்படுத்தப்பட்டதும் தெரிகிறது.

> **விரிசிறை உவணஞ்சேர்ந்த வென்றி நற் கொடியினானே**
> **(1181)**

> **தூவியார் சுவணக்கொடி மேவினான் (1351)**

அருகி, சூளாமணியில் தமிழ்மன்னர் கொடி மூன்றும் உறந்தையரசனுக்கு உரிமையாகச் சுட்டப்படுதல் காணப்படுகிறது. சோழன் முத்தமிழ் நாட்டு வேந்தன் என்பதால் அவனுக்கு முரசு, கொடி, பொறி, பூ முதலிய பலவும் மும்மூன்றாக அமைகின்றன. சுயம்வரச் சூழலில் இச்சுட்டுப் பொருந்துகின்றது புதுமையாகும்.

-உறந்தை கோமான்
கொண்டறையு மிடிமுரசுங் கொடிமதிலுங்
குளிர்புனலும் பொறியும் பூவும்
ஒண்டுறையு மும்மூன்று முடையகோ
னிவனிவன தெழிலுங் காணாய் (1817)

பெரியபுராணம், பாண்டிய மன்னனைப் பன்முறை மீனவன் எனவே சுட்டிச் சென்றபோதும், அவன் கொடிச் சுட்டையோ அதன் வருணனைக் குறிப்பையோ தரவில்லை. சேர, சோழர் கொடி சுட்டப்படுவதுண்டு.

குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறியெழுதி
(புகழ்ச்சோழர். 1)

என ஒரு குறிப்புச் சோழனுக்கும்,

சிலை நாட்டிய வெல்கொடியார் (கழறிற். 79)

சிலைமலிந்த கொடித்தானைச் சேரலனார் (கழறிற். 175)

வரையில் சிலைநாட்டிய வெல்கொடித் தானைச்
சேரர்பெருமான் (வெள்யானை. 19)

எனப் பலகுறிப்புச் சேரனுக்கும் வர, இவர் காப்பியப் பாத்திரமாக, நாயன்மாராக அமைவது காரணமாகும்.

## கடவுட்கொடிகள்

நீலகேசியும் சூளாமணியும் கடவுட்கொடிக்கு வாய்ப்பளிக்கவில்லை. பெரியபுராணம் அருகிக் காமன் கொடியை உவமையாகக் குறித்தது; பெண்ணின் மகரமணிந்த குழைக்காதுகள் காமன் கொடியிரண்டாகப் புனையப்படுகின்றன.

இளமயில் அனைய சாயல் ஏந்திழை குழைகொள் காது
வளமிகு வனப்பினாலும் வடிந்த தாளுடைமை யாலும்
கிளரொளி மகரவேறு கெழுமிய தன்மையாலும்
அளவில்சீர் அனங்கன் வென்றிக் கொடியிரண் டனையவாக
(திருஞான. 1100)

இதுதவிர, சிவனின் காளைக்கொடியே பரவலாக, பன்முறை சுட்டப்படுகின்றது. காப்பியக் கதைக்கருப் பொருண்மை இதற்குக் காரணமாகும். காளைச் சின்னம் பற்றிய பல்வகைப் பரியாயச் சொற்களுடன் கொடிக் காட்சியமைகின்றது. ஏறு (பெருமிழலை.

7), சே (திருநாவு. 172), பெற்றம் (திருஞான. 615), விடை (திருநாவு. 216) என்பனவற்றுள் 'ஏறு' என்பதே பெருவரவினதாகத் தெரிகிறது. சிவந்த கண்களுடையதாகவும், இளமையானதாகவும், வெண்ணிறத்தினதாகவும் இவ்வேறு குறிக்கப்படுகின்றது.

செங்கண் ஏறணிந்த வெல்கொடியார் (திருஞான. 885)

வென்றி மழ வெள்விடை உயர்த்தவர் (ஏயர். 184)

இச்சின்னம் நின்ற காளையா, கிடந்த காளையா என வெளிப்படத் தரப்பெறவில்லை.

'மேலூர்தி விடைக் கொடியார்' (திருநாவு. 216)

என்பதால் புறநானூறு குறித்த செய்தியின் தொடர்ச்சி அமைகிறது (புறம்.க.வா.) சிவனுக்கு ஊர்தியும் கொடியும் வால்வெள்ளேறு என்பது அவ் வொப்புமைக் கருத்து. தமிழக மற்றும் பிற நில சிவன் கோயில்களிலமையும் 'நந்தி'யின் கிடந்த கோலம் பற்றி, இக்கொடிச் சின்னமும் கிடந்த நிலையிலுள்ள காளையாக அமையும் என ஊகிக்கலாம். அதுவும் கிடந்த காளையின் முன்புறக் காட்சியா, பக்கக் காட்சியா என்பது மேலும் சிந்திக்க வேண்டியதாகும்.

## கொடிப்பண்பாடு

வெற்றியும், மங்கலமும், மரியாதை அல்லது அபிமானமும் சுட்டிக் கொடிகள் அமைகின்றன. சமயப் போட்டி, போராட்ட முடிவில் வென்றவர் தம் இறைக் கொடியை - பதாகையை, வெற்றித் தூணில் சயத் தம்பத்தில் அமைத்தல் என்பது பெரியபுராணம் தரும் காட்சி. அமணரை அடிப்படுத்திய ஞானசம்பந்தர் இதனைச் செய்கின்றார்.

தோற்றவர் கழுவில் ஏறித் தோற்றிடத் தோற்றுந் தம்பம்
ஆற்றிடை அமண ரோலை அழிவினால் ஆர்த்த தம்பம்
வேற்றொரு தெய்வ மின்மை விளக்கிய *பதாகைத் தம்பம்*
போற்றுசீர் பிள்ளையார் தம் புகழ்ச் சயத் தம்பமாகும்
(திருஞான. 856)

கொடியெடுத்தல், கொடிநாட்டுதல் - நடுதல் என்பன அழகியலுணர்வு சார்ந்து மங்கலத் தன்மை கொள்கின்றன. கொடி, மங்கலப்பொருட்களுளொன்றாக அமைதல் இதற்குக் காரணமாகலாம். அரச அங்கங்கள் (தசாங்கம்), அலங்காரப்

பொருட்களாகியவற்றின் தொகுதியில், பலபோதும் கொடி இடம் பெறுகிறது. மன்னனுக்குக் குடை, கொடி, கவரி (சாமரை)யாகிய இரண்டோ, மூன்றுமோ இணைந்து தரப்படுதல் உண்டு:

போர்த்த சாமரைக் குழாம் புதைத்த வெண்கொடிக் குழாம்
(சூளா. 475)

கொடியொடு குடையிடை மிடைவன விருள் செய
(சூளா. 938)

கொடியுங் குடையுங் குளிர்சா மரையும்
முடியின் சுடரும் மிசை மூடினவே (சூளா. 1073)

இதன் மேலுச்சமாக, 'பரந்தன மங்கலப் பதாகை யவ்வழி' (சூளா. 1887) என மங்கலம் அடையாகி இணைகின்றது. பெரியபுராணமும் சாமரை - குடை - கொடி யிணைவைத் தந்தது.

நெருங்கு தூரியங்க ளோங்க நிரைத்த சாமரைக ளோங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிக
ளாட
அருங்கடி மணம்வந் தெய்த..... (தடுத். 23)

எடுத்துச் செல்லும் - இயங்கு கொருட்களூடே கொடியமைதல் என்ற இந்நிலையுடன், இயங்கா நிலைப்பொருட்கள் அழகு சேர்க்க அமைக்கப்படும் நிலையில் அவற்றுடன் கொடியும் காணப்படுகிறது. கதலியும் (வாழை) தோரணமும் கமுகும் பூமாலையும் நிறைகுடமும் விளக்கும் என உடன்பொருட்களின் பட்டியல் நீளும்.

மாளிகைகள் மண்டபங்கள் மருங்கு பெருங்கொடி நெருங்கத்
தாளின் நெடுந் தோரணமும் தழைக்கமுகும் குழைத்
தொடையும்
நீளிய கதலிகளும் நிறைந்த பசும் பொற்றசும்பும்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயில் தொறும் நிரைத்தார்
(பெரிய.தடுத். 120)

இது பன்முறையும் பயின்றமையால் (திருநாவு. 319, 333; திருஞான. 234, 257, 1071) இதனை மரபாகவும், பண்பாட்டுத் தொடர்ச்சியாகவும் கருத முடிகிறது. பெரியோரை வரவேற்கும் சூழலில், கொடிநட்டுக் காவணம் (நடைபாவாடை) இட்டு எதிர்கொள்ளுதலமைவதும் இது:

கேட்ட அப்பொழுதே பெருமகிழ்ச்சியிற் கிளர்ந்து
தோட்டலங்கலுங் கொடிகளும் புனைந்து தோரணங்கள்
நாட்டி நீள்நடைக் காவணம் இட்டு நற்சுற்றத்து
ஈட்டமுங் கொடு தாமுமுன் எதிர்கொள எழுந்தார்
(பெரிய.திருநீல. 25)

'கொடியெடுத்து........ பதியின் புறம்போய் எதிர்கொண்டார்' (ஏயர். 105) என இது பயின்றது. ஊர்வலம் மற்றும் விழாச் சூழலும் கொடியிணைவு கொண்டது. விழா, கடவுள் விழாவாக அமைவதைச் சூளாமணி காட்டியது.

**பலிவிழாப் பதாகையும் பரந்து பாடுவார்**
**கலிவிழாக் கழுமின கடவுட் டானமே (365)**

கொடிதாங்கிய இன்றைய ஊர்வல நிலை அன்றும் இருந்துள்ளது எனத் தெரிகிறது. வாழை இலை - கதலிகை - போன்ற கொடிகள் பல நிரைத்து எடுத்துச் செல்லப்பட்டு, சூழலும் கொடிவகையும் இணைவதைச் சூளாமணி புலப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

**எரிவன சுடர்மணி எழுவன கதலிகை**
**தெரிவன வரியன தெருவொடு திசையே (93)**

**அங்குலாக் கொடியினாலு..... விசும்பு மூட (1544)**

குடையும் வாளும் முன் அனுப்பும் மரபுத் தொடர்ச்சியாகக் கொடியையும் அனுப்புதல் என்பதும் இங்குத் தெரியவருகிறது. இது பிற காப்பியம் தராத புதுமையாகும்.

**மின்றவழ் விளங்குகொடி வேந்தனும் விடுத்தான் (448)**

போரில் வெல்வேனெனும் வஞ்சின உரையும் கொடிநடுதலை அமைப்பது புதுமையாகும்.

**கழுகுபோல் களத்து வென்று கதலிகை நடுது மன்றேல்......**
**(1160)**

## ஊரும் கொடியும்

நாடும் நகரும் பலபோதிலும் கொடியால் இனங்காட்டப்படுதலும், சுட்டப்படுதலும், வருணிக்கப்படுதலும் காணப்படுகிறது. பெருங்கதை பன்முறை 'கொடிக்கோசம்பி' எனத் தந்து இதனை ஒரு காப்பிய மரபாக்கியது எனக் கருதலாம்.

பெரியபுராணம் திருநாட்டுச் சிறப்புக் கூறும்போது கொடியையும் நினைத்தது, வளக்குறியீடாக அமைகிறது.

> **மாடு போதகங்க ளெங்கும் வண்டு போதகங்க ளெங்கும்**
> **பாடுமம் மனைகளெங்கும் பயிலுமம் மனைக ளெங்கும்**
> **நீடு *கேதனங்கள்* எங்கும் நிதி நிகேதனங்கள் எங்கும்**
> **தோடுசூழ் மாலை யெங்குந் துணைவர் சூழ் மாலையெங்கும்**
> **(திருநாட். 33)**

சூளாமணி, நகரைக் கொடியுடன் புனைகின்றது.

> **கொடியொடு நெடுநகரக் கோமான்றன் குணம்பரவி (171)**

> **கொடிபடு நெடுநகர்க் கோயில் வீதிவாய் (1768)**

பெரியபுராணம், நாயன்மாருடைய மற்றும் அவர் செல்லும் நகரங்களைப் பன்முறையும் கொடி சுட்டித் தருவது காணப்படுகிறது. பொதுவாகவும் நகர்ப் பெயருடனும் இதனைய வாய்ப்புத் தெரிகிறது.

> **பயில்கொடி கதிர்மீ தாடும்**
> **தடநெடும் புவிகொண் டாடும்**
> **தனிநகர் வளமை யீதால் (எறிபத். 4)**

எனப் பொதுவாகவும், **ஆரூர்** (வானுயர் செங்கதிர் மண்டிலத்து மருங்கணையும் கொடி மன்னும் ஆரூர், திருஞான. 499), **ஐயாறு** (மிடையும் நீள் கொடி வீதிகள் விளங்கிய ஐயாறு, திருநாவு. 373), **காஞ்சி** (ஆடுகொடியு முடனெடுத் தங்கணிநீள் காஞ்சி அலங்கரித்தார், திருநாவு. 319), **கொடும்பாளூர்** (குருகுறங்குங் கோனாட்டுக் கொடிநகரங் கொடும்பாளூர், இடங்கழி.2), **செங்குன்றூர்** (கொண்டல்பயில் நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர், திருஞான. 324), **தருமபுரம்** (கொடி மதில்சூழ் தருமபுரங் குறுகினார், திருஞான. 443), **திருப்பூவணம்** (கொடி மாடம் நிலவு திருப்பூவணத்துக் கோயிலினுள், திருநாவு. 407), **திருவாலவாய்/மதுரை** (கதிர்மதியம் தீண்டு கொடி மதில் மதுரைத் திருவாலவாய் சேர்ந்தார், திருநாவு. 402), **மாமல்லை** (ஆடு நீள்கொடி மாட மாமல்லையே அனைய, திருக்குறிப். 41) என ஊர்ப்பெயர்ச் சுட்டியும், கொடிச்சின்னம் குறிப்பிடாதும், **திருப்புத்தூர்** (செங்கண் ஏறணிந்த வெல்கொடியார் திருப்புத்தூரை எய்தி, திருஞான. 885), **தில்லை** (செங்கண் ஏற்றவர் தில்லையே நோக்கி, திருஞான. 148) என்பன போல் இறைச் சின்னக் கொடி சுட்டியும் ஊர்கள் பேசப்படுகின்றன.

**கொடியிடம்**

இக்குறிப்புகளும் இவற்றையொத்த பிறவும், நகரின் மதில், வாயில், மாடம், மண்டபம், கோபுரம், வீதி, மாளிகை, அரங்கம், கோயில் போன்ற பலவற்றைக் கொடி பறக்கவிடப்படும் இடங்களாக அறிய உதவுகின்றன. நகர்வாழ் மக்களின் வாழ்வியலில் கொடியிணைந்து முதன்மை பெறல் இதனால் வெளிப்படுகின்றது. பெரியபுராணத்திலேயே இத்தகு குறிப்புகள் பெருவரவினதாய் அமைவது இங்குச் சுட்டத்தக்கது. பிற இரு காப்பியங்கள் போலன்றி, பல நகர - இட - சூழல்கள் கதைக்களனில் வருவது இதற்குக் காரணம் எனலாம்.

நகரின் மதில், கொடி மதில் சூழ் தருமபுரம் (திருஞான. 443), கொடிமதில் சூழ் சீரின் மலிந்த திருநகர் (கழறிற். 10), கொடி மாமதில் நீடு குறும்பொறையூர் (புகழ்ச். 27), உறந்தை கோமான்........ கொடி மதிலும் (சூளா. 1817) என இரு காப்பியங்களில் அமைந்தது.

நகரவாயிலின் கொடிகளை, 'நகர வாயிலின் புறம்பணை நடந்தது நடுங்கின கொடியெல்லாம்' (873) எனச் சூளாமணியே தருகின்றது. மேலும், சூளாமணி,

**கதிர்நகைக் கபாடவாயிற் கதலிகை கனக நெற்றி**
**மதிநக வுரிஞ்சு கோட்டு மாளிகை நிரைத்தவீதி (504)**

என்பதால் புரிசைவாயிலில் மட்டுமன்றி, மாளிகை வாயிலிலும் கொடிகளமைந்தது தெரிகிறது. பூங்கொடிவாயில் (திருநகர. 29), கொடி நெடுங்கொற்ற வாயில் (தடுத்தாட். 190), கொடிநுடங்கு திருவாயிற் புறத்தணைந்தார் (திருநாவு. 86) எனப் பன்முறையும் இது பயின்றது.

மாடங்கள் கொடிகளுடனமைவது பொது நிலையாகப் புலப்படுகின்றது.

**துகிலிகைக் கொடியனார் மின்னற் றோன்றவும்**
**இகலின மனையொடு மாட மென்பவே (41)**

**கம்ப மாடக் கதலிகை போலுமே (141)**

**கண்ணிலாங் கனக மாடக் கதலிகை முகிலோடோடி**
**(835)**

எனப் பன்முறை சூளாமணி தந்தது. துகிலிகை, கதலிகை என்பன மாடக்கொடி போலும் - என்ற எண்ணம் இக்குறிப்புகளைக் காண ஏற்படுகின்றது.

பெரியபுராணம், கொண்டல் பயில் நெடும் புரிசைக் கொடிமாடம் (திருஞான. 324), கொடிமாடச் செங்குன்றூர் (திருஞான. 333), ஆடு நீள் கொடி மாட மா மல்லை (திருக்குறிப். 41), ஆய மாடக் கொடியே அசைவன (திருக்குறிப். 107), கொடிமாடம் நிலவு திருப் பூவணத்து (திருநாவு. 407) எனப் பன்முறை தந்தது.

மாளிகைக் கொடிகள் பற்றிய எண்ணமும் சிந்தனைக்குரியது. மாடம், மாளிகை என்பன தனிக் கட்டிடங்களாகவோ புரிசை அல்லது மதில் உறுப்பாகவோ அமையலாம் என்பது 'நெடும்புரிசைக் கொடிமாடம்' என்று முன்காட்டிய குறிப்பாலும்,

**மதி காண நிமிர்ந்த மதிற்சிகர**
**நுதி மாளிகை மேல் நுடங்கு கொடி (சூளா.812)**

என்பதாலும் ஐயமாக எழுகின்றது. தனிக் கட்டிட நிலை,

**மாளிகைகள் மண்டபங்கள் மருங்கு பெருங்கொடி நெருங்க**
**(பெரிய.தடுத். 120)**

என்பதில் வெளிப்படுகிறது. மண்டபக்கொடி இந்த அருகிய குறிப்பே பெற, மாளிகைக்கொடி பெரும்பரப்புக் காட்டுகிறது. மாளிகைக் குலம் மிடைந்த பதாகை (தடுத். 100), கொடிநுடங்கு செழுந் திருமாளிகை (திருஞான. 579),

**முகிலுரிஞ்சுங் கொடி தொடுத்த முடிய வாகும்**
**முழுப்பளிங்கின் மாளிகைகள் முற்றுஞ் சுற்றும்**
**(திருக்குறிப். 93)**

**துன்று கொடி மங்குல் தொடக்கும் மாளிகை (கழறிற். 29)**

**பனி மதியந் தொட்ட கொடி மாளிகை மூதூர் (கழறிற். 47)**

**கிளரொளிசேர் நெடுவானப் பேர்யாற்றுக் கொடிகெழுவும்**
**வளரொளி மாளிகை நிரைகள் மருங்குடைய மறுகெல்லாம்**
**(புகழ்ச். 2)**

எனச் சான்றுகள் பல்கி அமைகின்றன.

அரண்மனைக் கொடி, 'கொற்றவன் கொடிக் கோயிற் புறம்பணை' (சூளா. 898) எனவும், கோபுரக் கொடி 'கொடி மகரக் கோபுரமு நெடுமதிலும்' (நீல. 288), 'வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர் திருக்கோபுரம் இறைஞ்சி' (ஏயர். 1),

மின்பொலி விசும்பை அளக்கும் நீள்கொடி சூழ்
வியன் நெடுங் கோபுரந் தோன்றும் (திருஞான. 662)

எனப் பயின்றும் வருகின்றன. அரங்கக்கொடி, 'ஞாங்கரணி துகிற் கொடியும் நகிற்கொடியும் உள அரங்கம்' (மானக்கஞ். 5) என அருகிக் குறிப்புப்பெற்றது.

பல்வகையான தெருக்களும் கொடிபறக்கும் இடமாக அமைந்துள்ளது காணப்படுகிறது. வீதிக் கொடிகள் என்பது பழந்தமிழ் இலக்கியம் முதலாகவே அமையும் காட்சியாகும். அடையாளம் என்பதைவிட அழகுறுத்தல், மகிழ்வு வெளிப்படுத்தல், விழவுணர்வுப் புலப்பாடு என்பனவே நோக்கமாகத் தோன்றுகின்றன.

நீலகேசி நகரவீதியின் கொடிகளை, 'அணி கொள் வீதியிற் றுகிற் கொடித் தொகுதியும்' (26) எனப் பல எண்ணிக்கையினதாகவும் வானை மூடும் நிலையினதாகவும் பகலவனை உள்நுழையவிடாததாகவும் காட்டுகின்றது. கடைவீதிக் கொடி, சூளாமணியில், 'விளிம்பு தோய் நெடுங்கொடி வீதி வாயெல்லாம்' (45) என அமைந்து, கொடியால் வீதி இருளானமையை, 'பைம் பொன் செய் பதாகையாலும் பரந்திருள் பட்ட வீதி' (1541) எனவும் தருகின்றது. பெரியபுராணத்திலும் இது ஒரு பொதுக்காட்சியாகும். தேரும் கொடியும் மிடையும் மறுகு (தடுத்தாட். 177), சோதிவெண் கொடிகள் ஆடுஞ் சுடர்நெடு மறுகு (மெய்ப். 8), கொடி நீடு மறுகு (மானக்கஞ். 25), கொடியும் பயில் வீதி (திருக்குறிப். 104), மிடையும் நீள்கொடி வீதிகள் (திருநாவு. 373), கொடி நிரைத்த வீதி (திருஞான. 987) எனத் தெருக்கொடிகள் அமைகின்றன.

யானை, தேர், போன்ற ஊர்தி, சேனை இயக்கச் சூழலில், அடையாளத்திற்காவும், தகவலுக்காகவும், அழகுக்காகவும் கொடிகள் பயன்கொள்ளப்பெற்றுள்ளன. இவையும் மரபுத் தொடர்ச்சியே காட்டுகின்றன. நீலகேசி இவற்றைத் தரவில்லை.

யானைமீது கொடியமைவதை, களிற்றின் மேலோர்..... கண்ணிலாம் பதாகை சேர்த்திக் காழகில் கழும விட்டார் (839),

அணித்தகை பாகர் பண்ணிக் கொடியெடுத் தருகு சேர்ந்தார் (913), கொடிமேலுடை யானைகள் (1235) எனவும், சிலேடையாக,

நந்திய சுடர்மணி நாக மீமிசைப்
பைந்துகிற் கதலிகை பரந்து தோன்றுவ
நந்திய சுடர்மணி நாக மீமிசைப்
பைந்துகிற் கதலிகை பரந்த போலுமே (935)

எனவும் தருகின்றது சூளாமணி. பெரியபுராணத்தில் குறிப்பு இல்லை.

தேர்க்கொடி, 'அம்பொன் செய் கொடுஞ்சி நெற்றி கொடியெடுத் தணைந்தவன்றே' (914) எனச் சூளாமணியிலும், ஆடுயர் கொடி சூழ் பொற்றேர் (திருநாவு. 170) எனப் பெரியபுராணத்திலும் அமைகின்றது.

சேனை கொடிதாங்கியதைப் பெரியபுராணம் மட்டும், 'கொடி நெடுந்தானை மன்னர்' (கழற்சிங். 1), சேனை தன்னை வல்விரைந் தெழ முன் சாற்ற அந்தரத் தகலமெல்லாம் அணி துகிற்பதாகை தூர்ப்ப' (எறிபத். 29) என அருகிக் குறித்தது. தேரும் மாவும் களிறும் காலாளுமாகச் சேனை அமையுமென்பதால், சேனைக் கொடியை இவ்வாறு பன்முகப் பரப்பிலும் கருதிக் கொள்ள முடியும்.

## கொடிப்பன்மை

இலக்கியத்தில் கொடி காட்டப்படும் சூழல் பலவற்றிலும், ஒரு கொடி என்ற நிலை அமையாது பல கொடிகள் ஒரே இடத்தில் ஒரே வேளையில் காட்டப்படுவது கொடிப்பன்மை என்ற நிலையில் அணுகத் தக்கது. குழாம் எனவும் தொகுதி எனவும் கொடிமாலை எனவும் இன்னும் பிற அடைத் தொடர் மொழிகளாலும் இப்பன்மை சுட்டப்படுவதுண்டு.

நீலகேசி, வீதியிற் றுகிற் கொடித் தொகுதி (26) எனத்தர, புதைத்த வெண் கொடிக் குழாம் (475) எனச் சூளாமணி அமைக்கிறது. மேலும், இந்நூல் போர்த்தன கொடி (1883), பரந்தன..... பதாகை (1887), கொடிபொங்கின (1078), தோன்றின பதாகை (850), எழுவன கதலிகை (937) எனப் பன்மைச் சுட்டாலும், கொடிகள் (1274, 2122) எனப் பன்மை விகுதியாலும் இதனை உணர்த்தும். அன்றியும் 'எண்ணில் கொடி மிடைந் திருண்டன பாங்கெலாம்' (952) என்பதுபோலப் பகலிலும் கதிரொளி மங்கச் செய்து, திசைமூடி இருளாக்குமளவிற்குக் கொடிகள்

பலவாக அமைந்தமை தரப்படுவதும் இங்குப் பலபோதும் உண்டு (938, 1073, 1541, 1544, 1827, 1883).

மேலம்பர தலம்நிறையும் கொடிகளில்
விரி வெங்கதிர் நுழைவரிதாகும் (பெரிய.திருநாவு. 164)

எனச் சேக்கிழார் தருவதுடன், நிரையாகக் கொடிகளமைவதைக் கொடித்தாமம் எனவும் கொடிமாலை எனவும் சுட்டுவது எண்ணற்குரியது.

**நிகரில் பல்கொடித் தாமங்கள் அணிபெற நிரைத்து**
**(திருஞான. 1071)**

**நீடுநிலைத் தோரணங்கள் நீள்மறுகு தொறும் நிரைத்து**
**மாடுயருங் கொடிமாலை மணிமாலை இடைப்போக்கி........**
**(திருஞான. 1174)**

இப்பயன்பாடு புதுமையானதும் பிற இலக்கியக் களனில் காணாததுமாகும். நீடு கேதனங்கள் எங்கும் (திருநாட். 33), பிணங்கு பூங்கொடிகளாட (தடுத். 23), மிடைந்த பதாகை (தடுத். 100), பெருங்கொடி நெருங்க (தடுத். 120) என்பன போன்ற வினை, அடை, விளக்கச் சூழலும் கொடிப்பன்மையைப் புலப்படுத்தும்.

## கொடியுயர்ச்சி

தாழ்ந்து பறந்ததாக எக்கொடியும் காட்டப்படாமை சிந்தனைக்குரியது. உயர்ச்சி, குறிப்பாக, குறியீடாகக் கொடியில் பொருந்துவதை இதனால் உணரலாம். உயரத்தில் கொடியமைந்தது பெரும்பாலும் வானளாவ என மிகுதிப்படுத்தி மொழியப்படுவது மரபுத் தொடர்ச்சியாகும். நெடு, நீள் போன்ற எளிய நேரடி அடை பயன்படுதலும் உண்டு. கற்பனைச் சார்புடன் மிகுத்து மொழிதல் (exaggerate) இலக்கிய நயம் பற்றி அமைகின்றது எனவும் கருதலாம்.

நெடுங்கொடி (நீல. 226, சூளா. 45), மதிகாண நிமிர்ந்தும் (சூளா. 812), மதி நக வுரிஞ்சுமாறும் (சூளா. 504) அமைகின்றது. விண்படர் கொடியாகத் துலங்குகிறது (பெரிய.ஏனாதி. 24). ஆடு நீள் கொடி (திருக்குறிப். 41), மிடையும் நீள்கொடி (திருநாவு. 373) என நீட்சி சுட்டப்படுகிறது. வானும் மதியும் மேகமும் கொடியால் தொடப்படுகின்றன.

இருவிசும்பு கொடி தூர்ப்ப (திருஞான. 620)

மின்பொலி விசும்பை அளக்கும் நீள்கொடி (திருஞான. 662)

கதிர் மதியம் தீண்டு கொடி (திருநாவு. 402)

மேகம் தொடுகுடுமி நாசிதொறும் தொடுத்த கொடி
(திருஞான. 12)

என இது பயின்றது.

## கொடி நிறம்

வெண்கொடி மற்றும் பன்னிறக் கொடிகள் பற்றிய தகவல் காப்பியத்தில் உண்டு. நீலகேசி சுட்டாதபோதும், சூளாமணி வெண்கொடி (475, 1871)யைத் தந்தது. அருவியின் வெண்மைக்கு உவமையான சூழலில் எதிர்வரும் படையைச் சந்திக்க வெண்கொடியெடுக்கப்படுவது உணர்த்தப்படுகிறது.

**அருவி வெண்டிரை சொரிகின்ற வருவரைக் குவடுக**
**ளவைமுன்னாற்**
**பரவை வெண்கொடி யெடுத்துநம் படைக்கெதி ரெழுவ**
**தொத்துள (882)**

பெரியபுராணம், நான்மறை ஓங்கியதை வெண்கொடியால் காட்டுகின்றது.

**பார்விளங்க வளர் நான்மறை நாதம்**
**பயின்ற பண்புமிக வெண்கொடி யாடும் (தடுத். 97)**

தெருக்கொடிகளும் வெண்ணிறம் பெற்றமை 'மீது சோதி வெண்கொடிகள் ஆடுஞ் சுடர் நெடு மறுகு' (மெய்ப். 8) என்பதில் தெரியவருகிறது. மணச்சூழலும் வெண்கொடி கொண்டது.

**எண்டிசைத் திறத்தயாவரும் புகலி வந்தெய்தி**
**மண்டும் அத் திருமண எழுச்சியின் அணி வாய்ப்பக்**
**கொண்ட வெண்ணிறக் குரூஉச் சுடர் கொண்டல்கள் என்ன**
**வெண்துகிற் கொடி நிரைத்தது போன்றது விசும்பு**
**(திருஞான. 1195)**

நிறக்கொடி பற்றிய இருகுறிப்பு ஞானசம்பந்தர் புராணத்தில் காணப்பெறுகின்றது. வெண்துகிற்பதாகையும் வண்ணத்தூசும் ஒருங்கு வருகின்றன.

விண்ணினை விழுங்க மிக்க வெண்துகிற் பதாகை வெள்ளம்....
எண்ணிலா வண்ணத் தூசின் பொதிப்பரப் பெங்கும்
நண்ணை (திருஞான. 1201)

பலநிறக் கொடிகளால், பகலில் விசும்பு தளிர்ப்பது போலும், இருளில் நாண் மீன்கள் ஒளிர்வது போலும் தோற்றம் ஏற்படுகிறது.

விடுசுடர் நீள் மணிமறுகின் வெண்சுதை மாளிகை மேகம்
தொடுகுடுமி நாசிதொறும் தொடுத்த கொடி சூழ்கங்குல்
உடு எனும் நாண் மலர் அலர உறுபகலிற் பல நிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம்
(திருஞான. 12)

## கொடிப்பொருள்

பூ, பொன், துகில், தூசு போன்ற சொல்லாளுகைகள் வழி கொடி என்ன பொருளால் உருவாக்கப்பெற்றுள்ளது என்று தெரிய முடிகிறது. பூ எனும் அடை அழகு, வண்ணம் ஆகியவற்றைக் குறித்திருக்கலாமேயன்றி ஆக்கு பொருளைச் சுட்டியிருக்க முடியாது. துகிற்கொடித் தொகுதி (நீல. 26), பைந்துகிற் கதலிகை (சூளா. 953), துகிலார்கொடி (சூளா. 1078), துகிலிகைக் கொடி (சூளா. 41), அணிதுகிற் பதாகை (பெரிய.எறிபத். 29), துகிற்கொடி (பெரிய. மானக்கஞ். 53; திருஞான. 503; மூர்க்க. 1) எனத் துகில் பெருவரவு காட்டுகின்றது. எண்ணிலா வண்ணத் தூசு (திருஞான. 1201) என்பதில் தூசு, துகிலையும் கொடியையும் ஒருங்கு சுட்டியது. சூளாமணி, 'பைம் பொன் செய் பதாகை' (1541) எனத் தருவதால் பொன்னாலும் கொடி செய்யப்பட்டது தெரிகிறது. பொன்னிறத் துகிலாக இருக்கலாம் எனவும் கருதலாம்.

## கொடிக்கம்பம்

பெரும்பாலும் நீண்ட கோல் அல்லது கம்பத்தின் உச்சியில் கொடி பறக்கும் வண்ணம் அமைக்கப்படுவது இயல்பு. எனினும் இலக்கியக் குறிப்புகள் பலபோதும் இக்கம்பம் பற்றிச் சுட்டாமலேயே கொடிக்குறிப்போ கொடி விளக்கமோ தந்து அமைந்துவிடுகின்றன. கதலிகைக் காம்பு (1404) எனச் சூளாமணியும் பதாகைத் தம்பம் (திருஞான. 856) எனப் பெரியபுராணமும் அருகிச் சுட்டுகின்றன.

## கொடிச்செய்தி

கொடியால் சில தகவல் அல்லது கருத்து வெளிப்படுகின்றது. சவாலிட்டுப் போட்டிக்கழைக்கும் கொடிப்பாங்கு, ஏற்கெனவே சுட்டிய வண்ணம் நீலகேசியில் வருகிறது. வஞ்சின முரைத்துப் போர் வெற்றிக்காகக் கொடி நடுதல் முன்கண்ட வண்ணம் சூளாமணியில் தெரிகிறது. பொதுவாக, வெற்றி என்பதே கொடிக் கருத்து எனும் எண்ணம் இவற்றிலும் பிற குறிப்பிலும் புலப்படுகின்றது. ஏறணிந்த வெல்கொடியார் (பெரிய. திருஞான. 885), அனங்கன் வென்றிக்கொடி (பெரிய.திருஞான.1100), வென்றி வெள்ளே றுயர்த்தருளும், வென்றி மழ வெள்விடை உயர்த்தார் (பெரிய. ஏயர். 41, 184) எனக் கடவுளர்க்கும், சிலை நாட்டிய வெல் கொடியார் (பெரிய.கழறிற். 79), சிலை நாட்டிய வெல் கொடித் தானை (பெரிய. வெள்யானை. 19) என அரசனுக்கும் இது வந்தது.

மேலும், மகிழ்ச்சி, களிப்பு, விழா என இன்பச் சூழலும் கொடிகளுடன் வந்து அக்கருத்தைத் தாங்கியமை முன்பத்திகள் வழி உணர முடியும்.

## கொடியொப்பனை

தாவரக் கொடி - வல்லி - கரும்புடன் தோளெழுதுதல் எனும் ஒப்பனைப் பாங்கின் தொடர்ச்சியாக, வெற்றிக் கொடியும் தோள் - மார்பில் எழுதப்பட்டதாகக் கருதக்கூடும். மங்கலப் பொருளாகக் கொடியமைவதும் இவ்வொப்பனை நிலைக்குக் காரணமாகலாம்.

'கொடிவரைந் தெழுதப்பெற்ற குங்குமக் குவவுத் தோளாள்'
**(சூளா. 553)**

'கொடிமிசை யெழுதிய குவவுத் தோளினாய்' **(சூளா. 1591)**

எனச் சூளாமணி தருகிறது. சிந்தாமணி, வீரர் மார்பில் கொடி வரைந்ததை அளிக்கும் என்று முன்பு சுட்டப்பட்டது. இவை ஒப்பீட்டு நோக்கில் காணத்தக்கன.

## முடிப்புரை

இம்மூன்று காப்பியங்களும் கொடியாளுகையில் சில பொதுக் கூறுகளைக் கொண்டிருப்பினும், கதைப்

பொருண்மைக்கேற்பச் சில தனித்தன்மைகளும் கொண்டமைகின்றன. நீலகேசி மட்டும் போட்டிக் கொடியைத் தருவதும், பெரியபுராணம் மட்டுமே கடவுட் கொடியைச் சுட்டுவதும், சூளாமணி மட்டுமே தோளில் கொடி வரைவதைத் தருவதும் வேற்றுமையில் ஒருசில சான்றாம். எனினும், நாடும் நகரமும் கொடிக்காட்சி தருவதும், மாடமாளிகை மண்டபங்களும், மறுகும், யானை தேர் போன்றனவும் கொடி தாங்கி அமைவதும் மங்கல விழாச் சூழலும் மகிழ்ச்சிக் களிப்புணர்வும் கொடிச்சார்பில் புலப்படுவதும் கொடிகள் வாழ்வில் வண்ணம் சேர்ப்பதைப் புலப்படுத்துகின்றன. அடையாளமாகவும், தகவல் தாங்கியாகவும் கொடியமையும் அடிப்படைப் பயன்பாட்டுநிலை இக்களனிலும் தொடர்ச்சி காட்டுகின்றது.

# கட்டுரைக் களன்

1. தமிழர் கொடிகள் - ஆய்தல்
   ஆய்வுக்கோவை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1985, தொகுதி 3, பக். 29-34.

2. கொடி சொல்லும் பொருளும்
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு மன்றம், 154-ஆவது கருத்தரங்கு, 27.8.93.

3. சங்க இலக்கிய அரசர் கொடிகள்
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு, 27.9.91; ஆண்டு மலர், இலக்கியக் கழகம், 1991, பக். 43-52.

4. சங்க இலக்கியத்தில் கடவுட் கொடிகள்
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு, 10.4.92; ஆண்டு மலர், இலக்கியக் கழகம், 1992, பக். 68-72.

5. காப்பியங்களில் கொடிகள் (முதல் மூன்று காப்பியம், கி.பி. 2 நூ - கி.பி. 8 நூ வரை)
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு, 17.9.93.

6. கம்பராமாயணக் கொடிகள்
   கம்பர் ஆய்வுக் கோவை - தொகுதி 2க்காக

7. காப்பியங்களில் கொடிகள் (பிற்காலக் காப்பியங்கள் I)
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கு, 7.1.94.

8. பிற்காலக் காப்பியங்களில் கொடிகள் (II)
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கு, 19.9.97.

# நூற்றொகை


தமிழ்

அகராதி நிகண்டு, (பதி), இரா. நாகசாமி, உ..வே.சா. நூலகம், சென்னை, 1983.

அபிதான சிந்தாமணி, Asian Educational Services, New Delhi, 1981.

அரும்பொருள் விளக்க நிகண்டு, (பதி) எஸ். வையாபுரிப் பிள்ளை, செந்தமிழ்ப் பிரசுரம், 1931.

ஆசிரிய நிகண்டு, (பதி) வீ. சொக்கலிங்கம், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1975.

உரிச்சொல் நிகண்டு, காங்கேயர், சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1971.

கயாதரம், (பதி), வையாபுரிப் பிள்ளை, சென்னை ஸர்வகலாசாலை, சென்னை, 1939.

சூடாமணி நிகண்டு, (பதி) ஆறுமுக நாவலர், 11-ஆம் பதிப்பு, சென்னை, இராக்ஷச ஷூ ஆவணி மீ (1915).

தமிழர் சமூகவியல் - சில பார்வைகள், அன்னி தாமசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.

திவாகரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1980.

நாமதீப நிகண்டு, (பதி) எஸ். வையாபுரிப் பிள்ளை, 1930, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

பாரதி தீபம், திருவேங்கட பாரதி, (பதி) மு. சண்முகம் பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1980.

பிங்கல நிகண்டு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1968.

பொதிகை நிகண்டு, (பதி) எஸ். வையாபுரிப் பிள்ளை, –,1934.

பொருட்டொகை நிகண்டு, சுப்பிரமணிய பாரதி, (பதி) சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர், செந்தமிழ்ப் பிரசுரம் - 41, மதுரைத் தமிழ்ச் சங்கம், ஆ.இ.

வடமலை நிகண்டு, (பதி) இரா. நாகசாமி, உ..வே.சா. நூலகம், சென்னை, 1983.

ஆங்கிலம்

Dravidian Etymological Dictionary, T. Burrow, M.B. Emeneau, Clarendon Press, Oxford, 2nd Ed., 1984.

Dictionary of Symbols, Tom Chetwynd, Granda Publishing Ltd., London, 1982.

A Dictionary of Symbols, Translated from the Spanish by Jack Sage, Philosophical Library, New York, 1962.

Dictionary of Symbols and Imagery, Ad de Vries, North Holland Publishing Company, London, 1974.

Introduction to the History of Tamil Literature, M. Arunachalam, Gandhi Vidyalayam, Tiruchitrambalam, 1974.

Kittel's Kannada English Dictionary in 4 Volumes, Revised Enlarged Edition (by M. Mariappa Bhat), Vol.1-4, 1968-71.

A Malayalam and English Dictionary, Rev.H. Gundert, Asian Educational Services, New Delhi, 1982.

The New Book of Knowledge, Grolier, New York, 1973.

The Random House Dictionary of the English Language, Jess Stein, Random House, New York, 1969.

Sanskrit English Dictionary, Monier Williams, Oxford, 1974.

Symbols, Public and Private, Raymond Firth, George Allen & Unwin Ltd., London, 1973.

Tamil Lexicon, University of Madras, Madras (Re) 1982.

Tulu-English Dictionary, Rev. A. Mannar, Asian Educational Services, New Delhi, 1983.

கட்டுரை

Tamil's Flags - Types and Symbols, S.V. Subramanian & Annie Thomas, ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் - 1987, மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1999, பக். 575-587.

Words denoting the 'flag' in Tamil, Annie Thomas, 21st All India Conference of Dravidian Linguists, Kuppam, 1993.

# கொடி – சொற்கள்*

| | |
|---|---|
| அபாயக்கொடி | ஆபத்தைக் குறிக்கும் கொடி |
| அரவக்கொடியோன் | துரியோதனன் |
| அரவுயர்த்தவன் | அரவக்கொடியோன் |
| அருட்கொடி வேந்தன் | அருகன் |
| அலகைக் கொடியாள் | காளி |
| அன்னக்கொடி | அன்னமிடுவதைக் குறிக்கக் கட்டுந் துவசம் |
| அன்னக்கொடியோன் | பிரமன் |
| அன்னமுயர்த்தோன் | பிரமன் |
| அனுமக் கொடியோன் | அருச்சுனன் |
| அஷ்டக் கொடி | அஷ்டதிக்குப் பாலகர்களுக்குத் திருவிழா விலெடுக்குங் கொடியேற்று விழா |
| ஆக்கம் | கொடிப்படை |
| ஆகுயர்த்தோன் | கணபதி |
| ஆண்டலைக்கொடி | முருகக் கடவுளின் சேவற்கொடி; 2. ஆண்மகன் தலையும் புள்ளின் உடலுமாக எழுதின பறவைக்கொடி |
| இடக்கியம் | தேர்க்கொடி |
| இடபக்கொடியோன் | சிவன் |
| இடிக்கொடியோன் | இந்திரன் |
| உச்சூடை | கொடிக்கம்பத்தின் நுனி |
| உரககேதனன் | அரவக் கொடியோன் |
| உரக கேது | உரக கேதனன் |
| உருமுத் துவசன் | இந்திரன் |
| உவண கேதனன் | திருமால் |
| உவண முயர்த்தோன் | உவணகேதனன் |
| ஓதிமமுயர்த்தோன் | பிரமன் |
| கச்சைக்கொடியோன் | கன்னன் |
| கத்திகை | சிறு துகிற்கொடி |
| கதலி | துகிற் கொடி |
| கதலிகை | கதலி |

---

* தமிழ் லெக்சிகனிலிருந்து திரட்டப்பெற்றன.

| | |
|---|---|
| கருடக்கொடி | கருடத்துவசம் |
| கருடக்கொடியோன் | திருமால் |
| கருட கேதனன் | கருடக்கொடியோன் |
| கருடத் துவசன் | கருடக்கொடியோன் |
| காக்கைக் கொடியாள் | மூதேவி |
| காகத்துவசத்தாள் | காக்கைக் கொடியாள் |
| காமன்கொடி | மீன் |
| குஞ்சி | கொடிநாட்டுங் குழி, 2. கொடிக் கழை |
| குலவிருது | கொடி முதலிய விருது |
| கூவிரம் | தேர்க்கொடி |
| கேதனம் | கொடி |
| கேது | கொடி |
| கைகாட்டுதல் | கொடியசைத்து அடையாளங் காட்டுதல் |
| கொடி | துவசம் |
| கொடிக்கப்பல் | கொடி கட்டிய மரக்கலம் |
| கொடிக்கம்பம் | கோயில்களின் முன்புறம் கொடியேற்று-வதற்காக நடும் மரம் |
| கொடிக்கவி | தில்லையிலுள்ள கோயிலில் கொடியேறும் படிபாடிய நூல் |
| கொடிக்கால் | கொடிக்கம்பம் |
| கொடிக்கட்டி வாழ்தல் | மிகுந்த செல்வ வாழ்க்கையில் இருத்தல் |
| கொடிச் சீலை | கொடியின் செண்டா |
| கொடித்தடை | கொடியேற்றுள்ள திருவிழாக் காலங்களில் பிரயாணங் கூடாதென்னுங் காப்புத் தடை |
| கொடித் தண்டு | கொடிக்கம்பம் |
| கொடி நிலை | திரிமூர்த்திகளின் கொடிகளினொன்றி-னோடு அரசன் கொடியை உவமித்துப் புகழும் புறத்துறை |
| கொடிப்படை | சேனையின் முன்னணிப்படை |
| கொடி போடுதல் | போருக்கு அழைக்கவேனும் வெற்றி குறிக்க வேனும் துவசம் நாட்டுதல் |
| கொடி மரம் | கொடிக்கம்பம் |
| கொடியாடை | கொடிச்சீலை |
| கொடியிறக்கம் | முடிவுபண்ணுதல் |
| கொடியிறக்குதல் | ஏற்றின கொடியைத் தாழ்த்துதல் . திருவிழா முடிவாகக் கொடியைக் கீழிறக்குதல் |
| கொடியெடுத்தல் | அறை கூவுகை, வெற்றி என்பனவற்றின் அறிகுறியாகத் துவசம் பிடித்தல் |

| | |
|---|---|
| கொடியேற்றம் } கொடியேற்றுதல் } கொடியேற்று | திருவிழாத் தொடக்கத்தில் கொடிமரத்தில் கொடியை உயர்த்துதல் |
| கொடிவாகனன் | சனி |
| கொண்டைக்கோல் | மகிழ்ச்சிக்குறியாக உயர்த்தியசைக்கும் ஆடை கட்டிய கோல் |
| கோழிக் கொடியோன் | முருகக் கடவுள், ஐயனார் |
| கோளரிக் கொடியோன் | சிங்கக் கொடியோன் - வீமன் |
| சத்தி | பெருங்கொடி, 2. கொடிநாட்டுங் குழி |
| சமாதானக் கொடி | சமாதானத்தைத் தெரிவிக்குங் கொடி |
| சர்ப்பகேது | அரவக் கொடியோன் - துரியோதனன் |
| சருத்தி | தேர்க்கொடி, 2. விருதுக்கொடி |
| சிதவல் | தேரின் கொடி |
| சிதாரம் | தேர்க்கொடி |
| சிந்து | கொடி |
| சீரத்துவசன் | மேழிக்கொடியை உடையவன் - சனகன் |
| சூரியபடாம் | விருது வகை |
| செண்டா | கொடி |
| செருத்தி | வெற்றிக்கொடி |
| சேவலான் | சேவற்கொடியோன் |
| சேவற்கொடியோன் | முருகக்கடவுள் |
| டால் | கொடி |
| டெங்கணிக்கோட்டை | கொடிமரமமைந்த மதிலுடன் கூடிய கோட்டை |
| தாலகேதனன் | பனை எழுதிய கொடியையுடையோன் - பலராமன், பீஷ்மன் |
| தாலகேது | தாலகேதனன் |
| தாலாங்கன் | தாலகேதனன் |
| தானை மாலை | ஆசிரியப் பாவால் அரசனது கொடிப் படையைப் பாடும் பிரபந்த வகை |
| திருக்கொடித் தட்டு | கோயிற்கொடிமரம் |
| திருமந்திரக்கொடி | கொடிச்சீலை |
| துகில் | துகிற்கொடி, 2. விருதுக்கொடி |
| துகிலிகை | துகிற்கொடி |
| துகிற்கொடி | ஆடையாலியன்ற கொடி |
| துசங்கட்டுதல் | காரியத்தில் முனைந்து நிற்றல் |
| துசம் | கொடி |
| துசாரோகணம் | கோவிற் கொடியேற்றம் |

| | |
|---|---|
| துணி | தேரிற் கட்டிய கொடி |
| துயம் | கொடி |
| துவசங்கட்டுதல் | வெற்றி முதலியன குறிப்பதற்குக் கொடியேற்றுதல் |
| துவசத் தம்பம் | கோயிற் கொடிக்கம்பம் |
| துவசபடம் | கொடிச்சீலை |
| துவசம் | கொடி |
| துவசாரோகணம் | கோயிற்றிருவிழாத் தொடக்கத்தில் நிகழும் கொடியேற்றம் |
| துவசாவரோகணம் | கோயிற்றிருவிழா விறுதியில் நிகழும் கொடியிறக்கம் |
| தூசி | கொடிப்படை |
| தேர்க்கொடி | தேரிற்கட்டிய பதாகை |
| தேரிடக்கியம் | தேர்க்கொடி |
| தோகை | பெருங்கொடி |
| தொக்கயம் | கொடி |
| தொங்கல் | தோகை |
| தொசம் | கொடி |
| நாட்கொடி | விசேட நாளையறிவித்தற்குக் கட்டும் துவசம் 2. அரசன் நாடோறுஞ் செய்த வெற்றிக்கு அறிகுறியாகக் கட்டிய துவசம். |
| நிசான் | கொடி |
| நிரை | கொடிப்படை |
| பட்டம் | பெருங்கொடி |
| படங்கு | பெருங்கொடி |
| படம் | பெருங்கொடி, 2. விருதுக்கொடி |
| படர் | துகிற்கொடி |
| படாகை | கொடி |
| படாம் | பெருங்கொடி |
| பதாகம் | பதாகை |
| பதாகினி | கொடிப்படை |
| பதாகை | விருதுக்கொடி, 2. பெருங்கொடி |
| பலபத்திரன் கொடி | பனை |
| பன்றிக்கொடி | வேள்புலவரசராகிய சளுக்கியரது பன்றிக் குறி கொண்ட கொடி |
| பன்னகமுயர்த்தோன் | துரியோதனன் (பாம்புக் கொடியோன்) |
| பனந்துவசன் | பலபத்திரன் (பனைக்கொடியோன்) |
| பனைக்கொடியோன் | பலபத்திரன், 2. வீடுமன் |

| | |
|---|---|
| பாவட்டா | கொடி |
| புலிக்கொடியோன் | சோழன் |
| புலியுயர்த்தோன் | சோழன் |
| புஷ்பகேது | பூவைக்கொடியாக உடையவன் - காமன் |
| பூங்கொடி | அழகியதுவசம் |
| பெருங்கொடி | பதாகை |
| மகரக் கொடியோன் | மன்மதன் |
| மகர கேதனம் | மீனக்கொடி |
| மகர கேதனன் | மகரக்கொடியோன் |
| மகர கேது | மகரக்கொடியோன் |
| மகரத் துவசன் | மகரக்கொடியோன் |
| மகரமுயர்த்தோன் | மகரக்கொடியோன் |
| மகராங்கன் | மகரக்கொடியோன் |
| மச்சக்கொடி | காமனுக்கும் பாண்டியனுக்கும் உரியதான மீனக்கொடி |
| மடங்கற்கொடியோன் | வீமன் - சிங்கக் கொடியுடையோன் |
| மயிற்கொடி | முருகக் கடவுட்குரிய மயிலெழுதிய கொடி |
| மலயத்துவசன் | தடாதகைப் பிராட்டியின் தந்தையாகிய பாண்டியவரசன் |
| மலைக்கொடி மன்னன் | மலயத்துவசன் |
| மறைக்கொடியோன் | பிரமன், 2. பிராமணன், 3. துரோணாச்சாரியன் |
| மீன்கொடியோன் | மன்மதன், 2. பாண்டியன் |
| மீனக்கொடியோன் | மீன்கொடியோன் |
| மீனகேதனன் | மீன்கொடியோன் |
| மீனத்துவசன் | மீன்கொடியோன் |
| மீனவன் | பாண்டியன் - மீன்கொடியுடையவன் 2. மீனைக் கொடியாகக் கொண்டவன் - காமன் |
| மீனாங்கன் | மன்மதன் |
| முரசக்கொடியோன் | தருமன் |
| முரசகேதனன் | முரசைக் கொடியாகவுடையவன் தருமபுத்திரன் |
| முரசகேது | முரசக்கொடியோன் |
| முரசுயர்த்தோன் | முரசக்கொடியோன் |
| மூதேவி கொடி | காகம் |
| வச்சிராசனி | இந்திரனது கொடி |
| வல்லி | பதாகை |

| | |
|---|---|
| வாயுகேது | துகள் |
| வானரக் கொடியோன் | குரங்குக் கொடியுடைய அருச்சுனன் |
| வானி | துகிற்கொடி |
| விடங்கம் | வீதிக்கொடி |
| வியோம மஞ்சரம் | கொடி |
| வியோம மண்டலம் | வியோம மஞ்சரம் |
| விருது | கொடி |
| விருதுக்கொடி | பிறர்க்கில்லாச் சிறப்பை அறிவித்தற்குரிய கொடி |
| வில்லவன் | சேரன் - விற்கொடியுடையவன் |
| விலோதம் | விலோதனம் |
| விலோதனம் | பெருங்கொடி 2. அலங்காரத்துக்காகக் கொண்டு செல்லுங் கொடி |
| வீரக்கொடி | வெற்றிக்கொடி |
| வெண்கொடி | வெற்றிக்கொடி |
| வெள்ளைக்கொடி | சமாதானத்திற்கு அறிகுறியாகக் காட்டுங் கொடி |
| வெள்ளை வீசுதல் | வெள்ளாடை அல்லது வெண்கொடியை அசைத்து அடையாளங் காட்டுதல் |
| வெற்றிக்கொடி | செயத்தைக் குறிக்க எடுக்கும் துவசம் |
| வெற்றித் தம்பம் | ஜயஸ்தம்பம் - வெற்றிக் கொடியைக் கட்டியுள்ள தம்பம் |
| வேதக்கொடியோன் | துரோணாச்சாரியன் |
| வைசயந்தம் | இந்திரன் கொடி |
| வைசயந்தி | பெருங்கொடி கட்டப்பெற்றதும் மாளிகையின் முன்புறத்ததுமான கட்டடம். |
| வைசயந்திகை | கொடி |
| ஜண்டா | செண்டா |
| ஜண்டா மரம் | கொடி கட்டும் தம்பம் |
| ஜெண்டா | செண்டா |
| ஹாஞ்சா | பாய் கொடி முதலியவற்றை இழுத்துச் சாம்புதற்கேனும் இறக்குதற்கேனும் உதவுங் கயிறு. |

# சொல்லகராதி

## (எண் - பக்க எண்)


அங்காடிக் கொடி 57
அடியவர் கொடி 3
அடை 65, 71, 72, 87, 88
அடையாளக் கொடி 2, 51, 55, 67
அடையாளச் சின்னம் 1
அடையாளம் 5, 9, 39, 45, 89, 94
அடையாள மலர் 23
அடையாள மாலை 5
அடையாள வல்லி 1
அரங்கக் கொடி 104
அரசக்(ர்)கொடி 3, 21-34, 57, 58, 59
அரசச் சார்புக் கொடி 61
அரசச் சின்னம் 4
அரசத்துவம் 50
அரச பூதக் கொடி 60
அரசியல் கொடி 3
அரண்மனைக் கொடி 3, 63, 104
அருச்சுனன் கொடி 60
அரைக் கம்பத்தில் கொடி 74, 75
அழகியல் 98
அறிகுறி 96
அறை கூவல் கொடி 94
ஆண்டலைக் கொடி 40,47
இடிக்கொடி 41, 73, 74
இடுகுறி 15
இதிகாசம் 85
இந்திரனின் கொடி 14, 73
இரட்டைச் சொல் 12
இராவணன் கொடி 73, 74
இலக்கிய உத்தி 76
இலக்கிய நயம் 106
இறைக் கோயிற் கொடி 3
இறைச் சின்னக் கொடி 101
இனக்குழுக்குறி 47
உத்தி 67, 70, 71
உயிரினக் கொடி 5
உருவப் படம் 35
உருவம் 25
உலோகக் கொடி 10
உவமச் சார்பு 80
உவமை 80, 81
ஊர்தி - கொடி 5
ஊர்வலம் 100
ஊரும் கொடியும் 100-101
எயிற் கொடி 61, 62
கடவுட் கொடி 3, 5, 22, 25, 35-50, 58, 97
கடவுள் வாழ்த்து 34, 36
கடவுள் விழா 100
கடைத் தெருக் கொடி 64
கதவில் கொடி 63
கதைப் பாங்கு 93
கப்பல் கொடி 73
கற்பனை 70, 80, 106
காப்பிய அமைப்பு 80
காமன் கொடி 43
காவல் மரம் 9, 50
காளைக் கொடி 24
குரங்குக்கொடி 60, 82
குறி 67
குறிப்பு 89
குறியீடு 6, 21, 32, 33, 38, 47, 106
கொடி இடம் 88, 89, 102-105
கொடி இறக்கம் 3
கொடி எழுதுதல் 90
கொடிக் கம்பம் 108
கொடிக் குழு 56
கொடிக் குழாம் 86, 87
கொடிக் குறிப்பு 50, 71, 77, 87

கொடிக் குறியீடு 6
கொடிக் கோசம்பி 64
கொடிக் கோட்பாடு 94
கொடிச் சின்னம் 4, 32, 43, 46, 50, 74, 82-85, 101
கொடிச் செய்தி 109
கொடிச் செயல் 42
கொடி - சொற்கள் 2, 11, 12, 18-20, 52, 68
கொடித் தாமம் 106
கொடி தாங்கி 14
கொடி நகர் 64
கொடி நடுதல் 75, 99, 100
கொடி நிலை 37
கொடி நிறம் 107
கொடிப் படை 17, 61
கொடிப் பண்பாடு 98, 99
கொடிப் பயன்பாடு 94
கொடிப் பன்மை 26, 71, 105, 106
கொடிப் பெருக்கு 71
கொடிப் பொருள் 12, 108
கொடி மரம் 3, 9
கொடி மாடம் 64
கொடி மாலை 105, 106
கொடியடையாளம் 23, 40
கொடியறுத்தல் 30
கொடியாளுகை 93
கொடியிழப்பு 75, 90, 91
கொடியின்மை 75, 91
கொடியுயர்ச்சி 106, 107
கொடியுரிமை 96
கொடியுருவம் 38
கொடியெடுத்தல் 29, 43, 89, 90
கொடியேற்றம் 3, 37
கொடி வகை 3, 25, 57
கொடி வாழ்த்து 35
கொடி விழா 3
கொடி விளக்கம் 67
கொடி வீழ்ச்சி 60
கோட்டைக் கொடி 3, 63
கோபுரக் கொடி 104
கோழிக் கொடி 5
சகுனம் 74, 91
சிங்கக் கொடி 82
சித்திரக் கொடி 56
சிலேடை 105
சிறுகொடி 8, 53, 55, 58
சின்னம் 31, 38, 43, 60, 73, 98
சீயக்கொடி 73, 74
சேனைக்கொடி 104, 105
சொற்றொகுதி 10
தமிழ் மன்னர் கொடி 4
தலமரம் 50
தற்குறிப்பேற்றம் 70, 71, 80
தனிக்கொடி 89
தாவரக்கொடி 1, 8, 52, 53
தானைக்கொடி 29, 61
துகிற் கொடி 45, 56, 58
துணைக் கொடி 6
துவசம் 7, 51, 77
தூசு 79
தூத்துகில் 78
தெருக்கொடி 64, 104, 107
தேர்க்கொடி 3, 8, 17, 27, 28, 61, 62, 105
தொல்கொடி 84
தொன்மம் 6
நகரக்கொடி 28, 29
நபர்பெயர் 73, 81, 94
நாஞ்சில் கொடி 41
நாஞ்சில் நாடு 41
நாட்கொடி 4, 29, 62
நிறக்கொடி 107
படர்கொடி 17
பலகொடி 86

பலி விலங்கு 48
பறவைக் குறியீடு 49
பன்னிறக் கொடி 2, 75, 76
பனைக் கொடி 5, 41
பனைச் சின்னம் 50
பாசறைக் கொடி 28, 57
பாத்திரம் 82, 97
பாம்புக் கொடி 81, 85
புகைக் கொடி 69
புராணக் கதை 47
புராணச் செய்தி 44
புராண மாந்தர் 57
பூவை நிலை 33
பெருங் கொடி 8, 53, 55, 58
பொருள் நீட்சி 16
பொலங்கொடி 44, 46
பொறி 31, 52, 60, 61
பொறிச் சின்னம் 32
போர்க் கொடி 3
போட்டிக் கொடி 25, 95-96
போர்க்காலம் 3
மங்கலக் கொடி 55
மங்கலப் பொருள் 98
மங்கலம் 98
மதில் கொடி 29, 63
மயிற் கொடி 5
மலரடையாளம் 41
மன்னர் கொடி 4, 5, 38, 96
மனைக் கொடி 72, 73
மாடக் கொடி 57, 64, 103
மாளிகைக் கொடி 103
மீனக் கொடி 33, 73
முதற் கொடி 6
யாப்பு 57, 80, 88
யானைக் கொடி 3, 24, 28, 104, 105
வஞ்சினம் 100
வடமொழி 57
வண்ணக் கொடி 58
வணிகக் கொடி 3, 26, 64, 73
வருணனை 80, 97
வழிபாட்டுக் கொடி 35
வளக் குறியீடு 101
வாயில் கொடி 3, 62, 63
வாரணக் கொடி 40
வாழ்த்தியல் 36
வானியல் 33
வியாபாரக் கொடி 58, 64
விலங்குக் குறியீடு 48
விருதுக் கொடி 8, 17, 58
விலங்கு வழிபாடு 48
விழாக் கொடி 26, 58, 75, 100
விளம்பரக் கொடி 26
வீணைக் கொடி 73, 74, 83
வீதிக் கொடி 8, 58, 64, 73
வெண் கொடி 2, 58, 76, 107
வெற்றிக் கொடி 2, 3, 29, 36, 38, 43, 75, 89, 109

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| சங்க இலக்கிய ஆய்வுகள் | 30.00 |
| தொல்காப்பிய ஆய்வுகள் | 20.00 |
| Indian Epistemology | 125.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையயும் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-3 | 50.00 |
| இ.ப.த். மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-2 | 70.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-1 | 75.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-2 | 65.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-1 | 70.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2 | 64.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1 | 56.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| லவகுச நாடகம் | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2 | 65.00 |
| நானும் என் கவிதையும் | 40.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| Literary Criticism in Tamil and Sanskrit | 45.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம் | 55.00 |
| அறநூல் | 38.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |

Pub.No. 352 **தமிழர் கொடிகள்** Rs. 30.00